நகர சபை, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 07 ஞாயிற்றுக்கிழமை (24.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 332

## யாழ். நூலகத்தை நேற்று மாலை முற்றுகையிட்ட தெற்கு உல்லாசப் பயணிகள்

### அடாவடியில் ஈடுபட்டதால் நகரில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24

தென்னிலங்கையில் இருந்து வந்த உல்லாசப் பயணிகள் யாழ். நூலகத்தை முற்றுகையிட்டு உள்ளே நுழையப் போவதாக அடாவடித் தனத்தில் ஈடுபட்டதால் நேற்று மாலை யாழ். நகரப் பகுதியில் பதற்றம் பரவியது.

இலங்கை மருத்துவர் சங்கமும் யாழ்ப்பாண மருத்துவர் சங்கமும் இணைந்து நடத்திய வருடாந்த மாநாடு யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதனால் நூலகத்திற்குள் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று நிர்வாகத்தினர் அறிவித்திருந்தனர். இது தொடர்பான அறிவித்தல் பதாகைகள் நூலகத்தில் மாட்டப்பட்டிருந்தன.வழக்கமாக மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரைக்கும் பார்வையாளர்கள் நூலகத்தின் உள்ளே அனுமதிக்கப்படுவர். குறிப்பிட்ட நேரத்தில் பெருந்தொகையான தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் நூலகத்திற்கு வந்திறங்கினர்.

36 பஸ்களில் வந்திறங்கிய நூற்றுக்கணக்கானவர்களும் தாம் நூலகத்திற்குள் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய காவலர் இன்றைய தினம் (நேற்று) பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை என்று தெரிவித்தனர்.

இதனை அடுத்து அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. தென்னிலங்கைவாசிகள் தாம் உள்ளே போயே ஆகவேண்டும் என்று அடாவடியில் ஈடுபட்டனர். காவலர் தெரிவித்த காரணங்கள் எவற்றையும் அவர்கள் செவிமடுப்பதற்குத் தயாராக இல்லை.

அங்கு எழுதித் தொங்கவிடப்பட்டிருந்த பதாகைகளைக் கிழித்தெறிந்து அட்டகாசத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து அருகில் இருந்த யாழ். பொலிஸ் நிலையத்தில் இருந்து பொலிஸ் உயரதிகாரி உட்பட பொலிஸார் வந்தனர். அவர்களைப் பார்த்த அங்கிருந்த ஒருவர் "நான் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வந்திருக்கிறேன். இதில் நீங்கள் தலையிட்டால் விளைவுகளைச்

(31ஆம் பக்கம் பார்க்க)

## போரின் களங்கத்தை நீக்க மேற்கில் பல மில்லியனை செலவிடுகிறது அரசு

### நற்பெயர் வாங்கி நல்லுறவு பேண புதிய யுக்தி

லண்டன், ஒக்ரோபர் 24

போரினால் இலங்கைக்கு மேற்குலக நாடுகளிலும் ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்களிலும் களங்கத்தை - அபகீர்த்தியை - நீக்கி அந்த நாடுகளிடம் நற்பெயர் எடுப்பதற்காக அந்நாட்டு அரசு வருடம் ஒன்றுக்குப் பல மில்லியன் பவுண்களைச் செலவிடுகிறது.

பிரிட்டனில் பெல் பொற்றிங்கர் என்ற பிரபல பொதுசன நல்லுறவு பேணும் நிறுவனத்துக்கு அதன் சேவைகளுக்கு வருடாந்தம் மூன்று மில்லியன் பவுண்களை இலங்கை அரசு கட்டணமாக வழங்குகிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சித் திருத்த சட்டத்தை எதிர்த்து கூட்டமைப்பு நாளை வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஒக். 24

உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய இருக்கிறது.

இந்தச் சட்ட மூலத்தில் சிறுபான்மை இனக் கட்சிகளைப் பாதிக்கும் பல சரத்துக்கள் இருப்பதால் நியாயம்கோரி கூட்டமைப்பு வழக்குத் தாக்கல் செய்யும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

''முன்னர் நடைமுறையில் இருந்த வட்டாரத் தேர்தல் முறைமை இச்சட்டத்தின் மூலம் மீண்டும் அறிமுகம் செய்யப்படுகிறது. இதனால் சிறுபான்மைக் கட்சிகளே அதிகம் பாதிக்கப்படும்'' என்றும் அவர் கூறினார்.

இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் ஒரு வாரமாக இருந்து 36 மணித்தியாலங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(32ஆம் பக்கம் பார்க்க)

### வெடிப்பொருளுடன் மண்டைதீவில் நேற்று இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.24

மண்டைதீவுப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்களிடம் இருந்து வெடிபொருள்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெடிக்காது கிடந்த ஷெல் ஒன்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட வெடிபொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட டைனமட்கள் இவர்

(02ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

**புலி உறுப்பினர் - சிங்கள பெண் திருமணம்**
முன்னாள் போராளி ஒருவருக்கும் சிங்களப் பெண் ஒருவருக்கும் காதல் திருமணம் நடப்பதாக யாழ்ப்பாணத்தில் படம் எடுக்கிறது தெற்கு. பக்கம் 3

**ஒப்பரேசன் அம்பாந்தோட்டை**
சீனா- இந்தியா இடையிலான இராஜதந்திரப் போரின் களமாக மாறி இருக்கிறது அம்பாந்தோட்டை. பக்கம் 5

**எங்களுக்கும் வேண்டும் இடைத்தங்கல் முகாம்**
இடம்பெயர்ந்து சென்ற பின்னர் மீளக்குடியமர்ந்திருக்கும் முஸ்லிம் சகோதரர் ஒருவரின் குமுறல். பக்கம் 15

### குண்டு வெடித்து சிறுவர்கள் இருவர் மூதூரில் நேற்றுப் பலி

மூதூரில், ஒக். 24

மூதூரில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் இரண்டு சிறுவர்கள் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவினர். மேலும் மூவர் காயமடைந்தனர்.

மூதூர் தக்வா நகர் ஜெற்றியில் கிடந்த மர்மப் பொருளொன்றை சிறுவர்கள் எடுத்து விளையாட முற்பட்டபோது அது வெடித்ததாகப் பொலிஸார் கூறினர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலி உறுப்பினர்கள் அரசியலில் ஈடுபட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைகளில் எடுக்க வேண்டும்

### வவுனியாவில் 306 பேரை விடுவித்த நிகழ்வில் அமைச்சர் டியு குணசேகர

வவுனியா, ஒக்.24

புனர்வாழ்வு பெற்று விடுதலையாகும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அரசியலில் ஈடுபட்டு ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுக்க வேண்டும். அதற்கான முழு ஆதரவையும் வழங்க அரசு தயாராக இருக்கிறது என்கிறார் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் டியு குணசேகர.

நாட்டின் பல்வேறு தடுப்பு முகாம்களிலிருந்து. புனர்வாழ்வு பெற்ற 306 பேரை விடுதலை செய்யும் நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. விடுதலை செய்யப்படவுள்ளவர்கள் முன்னிலையில் உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் டியு குணசேகர மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் 1971 இல் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது கைதுசெய்யப்பட்டவர்கள் பலர் தடுப்புமுகாம்களில் வைத்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். அவ்

(02ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

1 சதவீதம் வரையில் ஆகக்குறைந்த வட்டி!

உங்கள் அவசரப் பணத்தேவைகளின் போது. 1 சதவீதம்* வரையில் ஆகக்குறைந்த வட்டி வீதத்தில், பவுனுக்கு அதிகூடிய பெறுமதியை வழங்கும் லிஸ்வின் அடகுச்சேவை மூலம், உங்கள் குறுங்கால பணத்தேவையை இன்றே நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

LISVIN INVESTMENTS LIMITED

லிஸ்வின் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடட், இல. 56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 997998 Web: www.lisvin.com | E-mail: lisvin@lisvin.com

குத்தகை | வாடகைக் கொள்வனவு | கடன் | விலைப் பட்டியலிடுதல் | அடகு

*நிபந்தனைகள் உள்ளடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





மன்னார் செம்மொழி மாநாட்டின் நேற்று நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், பேராளர்கள் ஆய்வரங்கில் கலந்து கொண்டிருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காண லாம்.

# வவுனியாவில் 4 ஆடைத் தொழிற்சாலைகள்; இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு

## பிற மாவட்டத்தவர்களும் விண்ணப்பிக்கலாம்

வவுனியா, ஒக்.24

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் 4ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் வவுனியா மாவட்டத்தில் நான்கு இடங்களில் ஆடைத்தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து மாவட்டங்களிலும் வாழ்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன. 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் இந்தப் பயிற்சிநெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஆடைத் தொழிற்சாலைகளில் பயிற்சி பெறவிரும்புகின்றவர்களின் விவரங்கள் அந்தந்தப் பிரதேச செயலக ரீதியாகத் திரட்டப்படும்.

வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ளவர்களுக்கும் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக 'அரச அதிபர்', வவுனியா மாவட்டச் செயலகம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

வவுனியா மாவட்டத்தில் இராசேந்திரகுளம், நெலுக்குளம், வவுனியா நகரம், செட்டிக்குளம் ஆகிய இடங்களில் இந்த ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன.

பெரும்பாலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் இந்த ஆடைத் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

## சாவகச்சேரியில் இரு பாடசாலைகளுக்கு 5 லட்சம் ஒதுக்கீடு

தென்மராட்சி, ஒக். 24

யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சாவகச்சேரியில் உள்ள இரு பாடசாலைகளுக்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவினை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு உள்ளகத் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்த இரண்டு லட்சம் ரூபாவும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக் கட்டட வேலைக்கு மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-207)

## வன்னியில் கைவிடப்பட்ட வாகனங்கள் உரிமையாளரிடம் கையளிக்க ஏற்பாடு

கிளிநொச்சி, ஒக்.24

போரின்போது கைவிடப்பட்ட 2050 மோட்டார் சைக்கிள்கள், 250 ஏனைய வாகனங்கள் என்பன உரிமையாளர்களிடம் கையளிக்கக் கூடிய வகையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அரச அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவால் பரிசோதிக்கப்பட்டு இந்த வாகனங்கள் உரிமையாளர்களிடம் கையளிக்கக் கூடிய வகையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி, வாகனப் பதிவுப் புத்தகம், கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதி என்பவற்றுடன் வந்து மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (ஓ-10)

## உலகக்கிண்ண 'ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர்பாக

## 'உதயன்' நிறுவனம் நடத்திய போட்டியில் வெற்றி பெற்றோருக்கு இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24

உலகக்கிண்ண 'ருவென்ரி - 20' கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' வெளியீட்டகம் நடத்திய பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பரிசு பெற்றோருக்கு நளின் கணனி நிறுவனம், யுனி ஐ.சி.ரி. கம்பஸ், அப்ஹி கணனி நிறுவனம், ஆஷா வர்த்தக நிலையம், ஹரிமி இன்ரநெற் கபே, தட்ஷா அழகு நிலையம், பி.சி. சொலுசன்ஸ் மற்றும் கேற்வே, மதர் அன் பேபி கெயார், மதன் எலக்றோனிக், றோயல் றெஸ்ரோரன்ட், கிருபா லேனர்ஸ், உதயன் (கிளை- நெல்லியடி) ஆகிய வர்த்தக நிறுவனங்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளன.

அத்துடன் 'உதயன்' வெளியீட்டகத்தின் மூன்று சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இதில் பரிசுக்குரியவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## சிகை ஒப்பனை நிலையங்கள் அடுத்த ஞாயிறு திறப்பு

வண்ணை, ஒக்.24

எதிர்வரும் தீபாவளி திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டும் சிகை ஒப்பனை நிலையங்கள் திறந்து தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்படுவதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர்கள் சங்கத் தலைவர் அ.அல்பேட் தெரிவித்துள்ளார்.

ஆயினும் தீபாவளி தினமான அடுத்த மாதம் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிலையங்கள் மூடிவிடுமுறைவழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-160)

## மட்டுவிலில் இன்று மாட்டுவண்டி சவாரிப் போட்டி

சாவகச்சேரி, ஒக்.24

மட்டுவிலில் விவசாயிகளின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் மட்டுவில் சந்திரங்கிராய் மைதானத்தில் ஹேலிஸ் உரக்கம்பனியின் அனுசரணையுடன் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இடம்பெறவுள்ளது.

குடாநாட்டிலுள்ள சகல மாட்டு வண்டி சவாரிப் போட்டியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(9-131)

## கிளிநொச்சி மரதன் பிற்போடப்பட்டது

கிளிநொச்சி, ஒக்.24

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பெறவிருந்த மரதன் ஓட்டப்போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன.

போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் சு.கனகராஜா அறிவித்துள்ளார்.(ஒ-9-405)

## முன்னாள் புலி உறுப்பினர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு விடுதலை செய்யப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் பலர் அரசியலில் பிரவேசித்து நாடாளுமன்றத்தில் தற்போது அங்கம் வகித்து வருகின்றனர். ஜனநாயக வழியில் அவர்கள் பயணிக்கின்றனர்.

அதே போன்று புனர்வாழ்வு பெற்று விடுதலையாகும் முன்னாள் புலி உறுப்பினர்களும் அரசியலில் பிரவேசிக்கவேண்டும். அதன் மூலம் ஆட்சி அதிகாரங்களை அவர்களும் கையில் எடுக்க வேண்டும். ஏனையவர்கள் பல்வேறு துறைகளிலும் தம்மை ஈடுபடுத்தி நாட்டுக்கு பயனுள்ள மனிதர்களாக மாறவேண்டும். முன்னாள் போராளிகள் ஜனநாயக வழியில் பயணிப்பதற்கான அனைத்து ஆதரவுகளையும் வழங்க அரசு தயாராக உள்ளது. படையினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களில் இதுவரை சுமார் 5 ஆயிரம்பேர் விடுவிக்கப்பட்டு அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். எஞ்சியுள்ள பெண்களும் விரைவில் விடுதலை செய்யப்பட்டுவிடுவர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஆயிரத்துக்கும் குறைவானவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விடயத்தில் நாம் தலையிடவிரும்பவில்லை.

கிளிநொச்சியில் இன்று (நேற்று) இலகு கடன் திட்டம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தேன். ஆகக் குறைந்த வட்டியாக 4 சதவீதம் இக்கடன் திட்டத்துக்கு அறவிடப்படும். இக்கடன் திட்டம் மூலம் மீளக் குடியமர்ந்த மக்கள் பயன்அடைவர் - என்றார் அமைச்சர்.

இதேவேளை - 306 பேரையும் உறவினரிடம் கையளிக்கும் நிகழ்வு வவுனியா ஆரம்ப தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் டியு குணசேகர அவர்களுக்கு விடுதலைக்கான சான்றிதழ்களை வழங்கினார். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் 200 பேர் பெண்கள் ஆவர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட இவர்கள் நாட்டின் பல்வேறு புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் உள்ளிட்ட தடுப்பு முகாம்களில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா, அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க, அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.சதீஸ்குமார், புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுகந்த ரணசிங்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வெடிப் பொருளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் இருந்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த டைனமற்களைக் கொண்டு அவர்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பின்னர் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## குண்டு வெடித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வெடித்ததில் ஐந்து சிறுவர்களும் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். அயலவர்கள் அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். எனினும் இரு சிறுவர்களின் உயிர்களைக் காப்பற்ற முடியவில்லை. ஏனையவர்களின் நிலையும் கவலைக்கிடமாக இருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## போரின் களங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோன்று ஏனைய பல ஐரோப்பிய நாடுகளிலும் நற்பெயர் பெறுவதற்காக பல மில்லியன் பவுண்களை இலங்கை அரசு செலவிடுகிறது என அறிய வந்துள்ளது.

இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் குறித்த விவகாரம் ஐக்கிய நாடுகள் சபையில் விவாதத்துக்கு எடுக்கப்படாதிருக்கவும்-

செயலாளர் நாயகம் பான் கீ மூன் நிபுணர் குழு நியமிப்பதனைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளவும்-

மேற்கு நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பிரசாரம் செய்து ஆதரவு திரட்டுவதைத் தடுக்கவும்-

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது விதித்துள்ள தடையை நீக்குவதற்கு மேற்கொண்ட முடிவை வாபஸ் பெறுவதற்கு சம்பந்தப் பட்ட நாடுகளில் பிரசாரம் செய்து நற்பெயர் வாங்கவும்-

இலங்கை அரசாங்கம் பல நல்லுறவு பேணும் தரகு நிலையங்களுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்தி வருவதாக அறியவந்துள்ளதாக பி.பி.ஸி. யின் சிங்கள சேவை தகவல் வெளியிட்டிக்கிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இப்போது லண்டனுக்கு வந்து பல தரப்புகளுடனும் பேச்சு நடத்துவதற்கும் தந்திரோபாய உபாய உத்திகளுக்கான சர்வதேச கல்வி நிலையத்தில் உரையாற்றுவதற்கும் பெல் பெற்றிஸ்கர் நிறுவனமே உதவியது என்றும் அறியப்படுவதாக பி.பி.ஸி. சிங்கள சேவையில் சுட்டிக் காட்டப்பட்டது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிக்கு நல்லூரில் திருமணம் மணமகள் அழகிய சிங்கள டாக்டர் மங்கை

## கெட்டிமேளம் ஒலிக்க தாலி கட்ட முற்பட்டவேளை ரகளை

யுத்தம் நிறைவுக்கு வந்து அரசியல் களநிலைமைகள் மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில் தென்னிலங்கையிலுள்ள பிரபல சிங்களத் திரைப்பட தயாரிப்பு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் கண் வைத்துள்ளது. யாழ்ப்பாணத்துக்கு திடீரென படையெடுத்து வந்துள்ள சிங்கள மக்களைக் கொண்டு புதிய கதை - புதிய திரைப்படம் உருவாகப் போகிறது.

யாழ்ப்பாணத்தில் குடியேறுவதற்கு வந்ததாகக் கூறி தற்போது யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்கள் இந்தப் படத்தின் முக்கிய கதாபாத்திரங்கள்.

யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து உருவாகப் போகும் இந்தப் படத்தை தென்னிலங்கையின் பிரபல சினிமாக் கம்பனியான ''டொகோமோ மூவி கம்பனி'' தயாரிக்கிற இந்தப் படத்தின் படப்பிடிப்பு (சூட்டிங்) தற்போது ஆரம்பமாகியுள்ளது. பிரபல இயக்குநர் டபிள்யு. எம். என். பத்மசிறி இந்தப் படத்தை இயக்குகிறார்.

படத்தின் பெயர் 'செல்வம்'. இந்தப் படத்தின் ஆரம்பப் படப்பிடிப்பு நல்லூரில் இடம்பெற்றுள்ளது. நல்லூர் கந்த சுவாமி ஆலய சூழலில் உள்ள நடராஜா பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் படப்பிடிப்பு இடம்பெற்றது. ''திருமணக்காட்சி'' அங்கு வைத்துப் படமாக்கப்பட்டது.

அங்கு 'சூட்டிங்' செய்யப்பட்ட 'செல்வம்' திரைப்படத்தின் கதைச்சுருக்கம் வருமாறு:-

### கல்யாண மண்டபத்துக்கு வாடகை ஒரு லட்சம் ரூபா

*நல்லூரில் படப்பிடிப்பு நடைபெற்ற கல்யாண மண்டபத்துக்கு ஒரு லட்சம் ரூபா வாடகைக் கட்டணமாக வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ரயில் நிலையத்தில் தங்கியிருக்கும் சிலர் நடிகர்களாக நடித்ததற்காக அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வரையில் வழங்கப்பட்டுள்ளது. அந்தணருக்கு சம்பளம் 15 ஆயிரம் ரூபா.*

மணமகன் தமிழ் இளைஞன். மணமகள் சிங்களப் பெண். இருவரும் மணவறையில் வீற்றிருக்கின்றனர். பூணூல் தரித்த அந்தணர் ஒருவர் திருமணச் சடங்குகளை நிறைவேற்றி வைக்கிறார்.

மணமகன் முன்னாள் போராளி தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர். அக்கால கட்டத்தில் இளைஞர், யுவதிகளை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைப்பதில் துடிப்புடன் செயற்பட்டவர்.

வன்னியில் பல களங்களில் சமராடிய இந்தப் போராளி இறுதியுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைய நேரிட்டது. சிறைப்பிடிக்கப்பட்ட அந்த இளைஞன் தடுப்புமுகாம் சென்றான். அங்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையானார்.

வெளியே வந்த இளைஞன் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் இணைந்து கொண்டான். அங்கு அந்த இளைஞன் வாழ்வில் புதிய அத்தியாயம் மலர்ந்தது. அவருடன் வைத்தியத்துறையில் பயின்ற அழகிய சிங்களப் பெண்ணை சந்திக்க நேரிட்டது. ஓய்வு நேரங்களில் அடிக்கடி சந்தித்தனர் அவர்கள் இருவரும். அந்தச் சந்திப்பு காதலாக விரிந்தது; மலர்ந்தது. குறிப்பிட்ட காலத்தில் இருவரும் வைத்தியர்களாக வெளியேறுகின்றனர். அதைத்தொடர்ந்து இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்கின்றனர். அந்தத் திருமண நாளும் வருகிறது.

மணவறையில் மணமகன் மணப்பெண் இருவரும் அலங்காரங்களுடன் காதல் நிறைவேறிய மனநிறைவுடன் வீற்றிருக்கிறார்கள். ஐயர் திருமண சடங்குகளை மும்முரமாக நடத்திக்கொண்டிருக்கிறார். மங்கள வாத்தியத்துக்கு மத்தியில் மணமகன் மணமகளின் கழுத்தில் தாலிகட்டத் தயாராகிறார். கெட்டிமேளம் ஓங்கி ஒலிக்கிறது. அவ்வேளை கத்தி, பொல்லுகளுடன் சிலர் மண்டபத்துக்கு திடீரென பிரவேசிக்கிறார்கள். ஆவேசமாக மணமக்களை நெருங்குகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களே அவர்கள். மணமகன்தான் தமது பிள்ளைகளை இயக்கத்தில் இணைத்துக் கொண்டவர் என்ற காரணத்தை முன்வைத்து திருமணத்தைத் தடுக்க முற்பட்டனர்.

அவ்வேளை திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் அங்கு வந்தார் ஆவேசத்துடன். குழுமியிருந்த நபர்களைச் சாந்தப்படுத்தினார். கடந்த கால கசப்பான சம்பவங்களை மறப்போம். யுத்தம் நிறைவடைந்துள்ள இன்றைய புதிய யுகத்தில் நாம் ஐக்கியமாக வாழப் பழகுவோம் - என்றார் இராணுவ அதிகாரி.

இவைதான் நல்லூர் மண்டபத்தில் 'சூட்டிங்' செய்யப்பட்ட விறுவிறுப்பான காட்சிகள்.

யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ள மக்கள்தான் இந்தப் படப்பிடிப்பின் துணைக் கதாபாத்திரங்கள். இவர்களுடன் தென்னிலங்கை பிரபல சிங்கள நடிகை மாலினி பொன்சேகாவும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் கந்தனை தரிசிக்க வந்தவர்களில் சிலரும் மணமகன் வீட்டாராக படப்பிடிப்பில் நிறுத்தப்பட்டனர்.

இந்தத் திரைப்படத்துக்கான இரண்டாம் கட்ட 'சூட்டிங்' எதிர்வரும் 25ஆம் திகதி மீளவும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை சித்திரிக்கும் வகையில் 'சூட்டிங்' இடம்பெறவுள்ளது. மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக எடுக்கப்படும் இந்தத் திரைப்படம் அடுத்தவருடம் ஜனவரியில் வெளியிடப்படவுள்ளது. (ஓ-14)

# பொன்சேகாவை விடுவிக்கக் கோரி அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

கலிபோர்னியா, ஒக்.24

இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகாவை விடுவிக்கக் கோரியும், பதினெட்டாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் சீரழிக்கப்பட்ட ஜனநாயகத்தை பாதுகாக்கவும் வலியுறுத்தி அமெரிக்க, கலிபோர்னியா மாநிலம் லொஸ் ஏஞ்சல்ஸில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணி முதல் ஆறு மணி வரை இலங்கை தூதரகம் முன்பாகக் கூடியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோசி சேனநாயக்க கலந்து கொண்டு உரையாற்றினார்.




ஆர்ப்பாட்டத்தில் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் 70 பேர் அளவில் கலந்து கொண்டார்கள். இலங்கை தூதரகத்தில் இருந்து இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டாம் என தொலைபேசி மூலம் அழைப்பு வந்த போதும் அது புறக்கணிக்கபட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் 'மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப சர்வாதிகாரத்தை ஒழிக்கவும்', 'சிறையில் இருக்கும் போர் வீரனை விடுவிக்கவும்' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

# பெருமளவு போதைப் பொருள் கல்முனை கடையில் சிக்கின

கல்முனை, ஒக்.24

கல்முனை பொதுச் சந்தையிலுள்ள வர்த்தக நிலையமொன்றிற்குள்ளிருந்து பெருந்தொகையான அபின் பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட அபின் பைக்கற்றுகளின் எண்ணிக்கை 5500க்கும் அதிகம் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். அதன் பெறுமதி 1,37,500 என்றும் தெரிய வருகின்றது. அபின் பைக்கற்றுகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே மாத்தறையிலிருந்து பொலன்னறுவைக்குப் பயணித்துக் கொண்டிருந்த சொகுசு வண்டியொன்றில் கொண்டு செல்லப்பட்ட 800 ஹெரோயின் பைக்கற்றுகளை இன்று அதிகாலையில் கலேவெலைப் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

வர்த்தகத்தில் ஈடுபடும் நோக்கில் பஸ்ஸின் நடத்துனரே ஹெரோயினை எடுத்துச் சென்றமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. சந்தேகத்தின் பேரில் நடத்துனருடன், சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)



# சந்தியடிச் சோமு

இப்பவெல்லாம் சந்தியில சந்தோஷமா இருந்து கதைக்க வழியில்லாமல் கிடக்குது பாருங்கோ!

சந்தியில நாங்கள் இருக்கிற இடத்துக்கு முன்னால பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் எண்டு கன நிறங்களில குடையளை வரிசையா நட்டு வச்சுப் போட்டு ஒருத்தரையும் போகவர விடுறாங்களில்லை.

''அக்கா! சிம்....... பிறி – அம்மா! சிம்....... பிறி, அண்ணா! சிம்.......பிறி'' எண்டு ஒரே தொல்லை. நாங்கள் ஐஞ்சாறு கிழடுகள் சந்தியில குந்தியிருந்து கதைக்கிறது வழமைதானே! அதப் பாத்துப் போட்டு இவங்கள் எங்களையும்விடுறாங்களில்ல. ''ஐயா! பிறி சிம் ஒண்டு வாங்குங்கோவன்'' எண்டுறாங்கள்.

உந்த சிம்மை வாங்கினால் அதுக்காக ஒரு போனையும் வாங்க வேணும். நான் சேட்டுப் போடாமல் சால்வைதானே போடுறனான். பிறகு போனை எங்க வைக்கிறது? சால்வேக்க வைக்கேலாது. வெத்திலைச் சரையோட சுத்தி வேட்டிக்கதான் செருக வேணும்.

உந்தக் கோதாரியை இடுப்பில சொருகவும் எனக்கொரு பயம் பாருங்கோ. பேப்பரில ஒருக்கா வாசிச்சனான், மொபைல் போனை காற்சட்டைப் பைக்குள்ள கொண்டு திரிஞ்சா கெதியில மலட்டுத் தன்மை வந்திடுமாம் எண்டு. இந்த பிறி சிம்மை வாங்கி அதுக்கா ஒரு போனையும் வாங்கி, செருக இடமில்லாம நான் அத இடுப்பில செருக.... எனக்கென்ன நடக்குமோ யார் கண்டது. அந்தப் பயத்தில ''உதை எனக்கென்னத்துக்கு?'' எண்டு சொல்லிப் போட்டன்.

போன கிழமைதான் இன்னொரு கொம்பனியும் புதிசா இங்க கடைய விரிச்சிருக்கு. அதில பாருங்கோ கடையத் திறக்கிறம் எண்டு பேப்பரில முன்னுக்கெல்லாம் போட்டு ஆலாபரணமா ஒப்பீஸைத் திறக்குறத்துக்கு முன்னமே இங்க மூலை முடுக்கெல்லாம் 'குடை பரப்பி' சிம் விக்கத் தொடங்கியாச்சு. சரி அது அவயளின்ர பிசினஸ் விவகாரம் பாருங்கோ. நான் அதச் சொல்ல வரேல்ல.

என்ர பக்கத்து வீட்டு இளசு ஒண்டு சொல்லுது தன்னட்ட ஐச்சு சிம் காார்ட் இருக்குதாம். பச்சை, சிவப்பு, வெள்ளை, மஞ்சள், நீலம் எண்டு எல்லா நிறத்திலயும் அவனிட்ட சிம்காார்ட் இருக்காம். ''அடே! இத்தின சிம் என்னத்துக்கடா?'' எண்டு கேட்டால், ''உங்களுக்கு ஒண்டும் விளங்காது. சும்மா கிடவுங்கோ. ஒரு கிட்னி இல்லாமல் சீவிச்சாலும் சீவிக்கலாம். ஒரு மொபைல் போன் இல்லாமல் வாழேலாது'' எண்டு வியாக்கியானம் சொல்லுறான் அவன். இவ்வளவுக்கும் அவனுக்கு வயது 17தான் ஆகுது பாருங்கோ. இதுக்குப் பிறகும் கதைச்சால் என்ர மரியாதைதான் கெடும் எண்டதால் நான் பேசாமல் வந்திட்டன். இந்தக் கால இளசுகளோட கதைக்கேலுமோ? எல்லாம் தாங்கள் நினைச்சதுதான் சரி எண்டு நிக்குங்கள்.

என்ர பேத்தி, அதுக்கு வயது 4தான் ஆகுது அது 'டச் ஸ்கிறீனில' கேம் விளையாடுது. எப்பப் பாத்தாலும் காதுக்கை போனை வச்சுக் கொண்டு திரியிறதுதான் இந்த இளசுகளின்ர வேலையாக் கிடக்கு. உதை காதுக்க நெடுக வச்சுக் கொண்டு திரிஞ்சா காது கேக்கிறதும் குறையும் எண்டு ஒருக்கா பேப்பரில படிச்சனான். அதுகள எல்லாம் சொன்னால் ஆர் மதிக்குதுகள் என்னை.

இஞ்ச இப்ப பெடி பெட்டை எல்லாம் 'டைட்டில'தானே திரியுதுகள். இறுக்கமான 'டெனிம்' ஜீன்ஸ்களைப் போட்டுட்டு அந்தப் 'பொக்கற்றுக்குள்ள' போனை வைக்குதுகள். பிறகு அது சினுங்கேக்க அத எடுக்கிறத்துக்குப் அதுகள் படுற பாடு இருக்குதே... அதையே ஒரு குறும்படமா எடுக்கலாம். பெடியள் மட்டும்தான் எண்டில்லை இன்டைய பெட்டையளும் அப்பிடித்தானே இருக்குதுகள்.

நான் சொல்ல வந்த விசயம் என்னென்டால், உந்தப் பெடியள் உப்பிடி இறுக்கமான ஜீன்ஸ்களுக்க போனை வச்சுக் கொண்டு திரிஞ்சால் கெதியா மலட்டுத் தன்மை வந்திடாதோ? டாக்குத்தர்மார் யாராச்சும் உதுகளப் பற்றிக் கொஞ்சம் எடுத்துச் சொன்னால் நல்லது.

யாழ்ப்பாணத்துக்கு இன்னும் புதுசு புதுசா மொபைல் போன் கொம்பனிகள் வரப்போகுதெண்டும் சொல்லுறாங்கள். புதுசு புதுசா 'ரவர்'களும் குடிமனையளுக்கை முளைக்குது. பத்து, இருபது, நூறு வருஷங்கள் எண்டு வீட்டு வளவுகளையும் கோயில் காணிகளையும் குத்தகைக்கு வாங்கி எழும்புது 'ரவர்'கள்.

நல்லூரைச் சுத்தி ரெண்டு 'ரவர்' முளைச்சிருக்குப் பாருங்கோ. அதிலயும் ஒரு 'ரவர்' கோயில் பூந்தோட்டம் ஒண்டில வளந்திருக்கு. அவனருளால் சிவன் தாள் வந்த 'ரவரா' இருக்கும் அது. இப்பிடி நெருக்கமான குடியிருப்புகளுக்கு மத்தியில 'ரவரு'களக் கட்ட எப்பிடி இந்த அதிகாரிமார் அனுமதிக்கினம் எண்டதும் ஒண்டுமா விளங்கேல்ல. 'ரவர்'கள் எழும்பி எழும்பி நிக்கிறதால மின்னல் தாக்கிற வீதமும் கூடுது எண்டும் சொல்லுறாங்கள். ஆனா ஆரும் இதுகளக் கணக்கெடுக்கிறதாத் தெரியேல்ல.

ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கெண்டு ஒரு வகைப் புற்றுநோய் வருகுது எண்டு ஒரு கதை உலாவுது. மருந்தடிச்ச மரக்கறியள கனக்கச் சாப்பிடறதுதான் அதுக்குக் காரணம் எண்டும் சொல்லுறாங்கள். இனி இந்த 'ரவர்'களால என்னென்ன விளைவுகள் வருமோ? யாருக்குத் தெரியும்!

இதப் பற்றி ஒருத்தரும் கதைக்கிறாங்களில்ல எண்டதுதான் என்ர கவலை. பேப்பர்காரப் பெடியளோட இதக் கதைச்சால் தலையச் சொறியிறாங்கள். விளம்பரம் கெட்டிடும் எண்டு அவங்களும் ஒண்டும் இதுகளப் பற்றி எழுத மாட்டாங்கள்.

உந்தக் கூட்டமைப்புக்காரரும் ஒண்டும் கதைக்குமாப் போல இல்ல. அவர் அமைச்சர்..... அதயேன் அத விடுங்கோவன் எல்லாம் வளர்ச்சிதான் எண்டு சொல்லுவார் அவர். இந்தியாவில இருந்து வந்த, அரசியல்வாதியாக நினைச்ச சுற்றுச் சூழலாளரும் இதப் பற்றிக் கதைக்கக் காணம். எண்டாலும் மனிசன் கொஞ்ச நாளுக்கு முன்னம் சுற்றுச் சூழல் தொடர்பான நல்லதொரு புத்தகம் வெளியிட்டது.

நான் இவ்வளவு நேரமாப் புலம்பினதெல்லாம் ஒரு ஆதங்கத்தோட தான். 'சிம்'மப் பிறியா வித்து எங்கட காசுகள அடியொட்ட வறுகிறது பத்தாதெண்டு மொத்தச் சமூகத்தையும் எல்லாருமாச் சேர்ந்து மலடாக்கப் போறமோ? அதுவும் நடந்திட்டா பிறகென்ன 'அவயளின்ர' கனவு 'சிம்பிளா' நிறைவேறிடும். 30 வருஷமா கட்டிக் காத்ததுகளயே விட்டுத் தொலைச்சிட்டமாம் இதென்ன பெரிய விசயம் எண்டு நீங்கள் சொன்னால், நான் மூச்சுப் பேச்சுக் காட்டேல்ல.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைவிடுகிறது 'நொதேர்ண் பவர்'

# 24 மணி நேர மின் விநியோகம் எப்போது?

அந்தத் தேநீர்க்கடை மாலைநேரத்தில் மிகவும் பரபரப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கும். மாலைவேளையில் அங்கு தேநீர் அருந்துவதற்காகப் பெரும் கூட்டமே அலைமோதும். அலுவலகங்கள் முடிந்துவரும் அரச உயர் அதிகாரிகளில் இருந்து சாதாரண பொதுமகன் வரை அந்தக் கடையில் தேநீர் அருந்தாமல் அவர்களது வாகனங்கள் அப்பால் நகராது. அந்தளவுக்கு அந்தக் கடைக்கு நல்ல கிராக்கி.

நானும் மாலை நேரத்தில் தினமும் அந்தக் கடைக்குச் சென்று தேநீர் அருந்துவது வழக்கம். உண்மையில் அங்கு தேநீர் அருந்துவது எனது நோக்கமல்ல. மாலையில் அந்த இடத்துக்குச் சென்றால் பல சுவாரிரசியமான - இரகசியமான - முக்கியமான தகவல்கள் பலவற்றைப் பிடுங்கிக்கொள்ள முடியும். ஊடகவியலாளன் என்றால் அது தானே வேலை. அதனால் அந்த இடத்துக்குச் செல்வதை நான் ஒருநாளும் தவிர்த்ததில்லை. நாட்டு நடப்புகள், அரசியல் விவகாரங்கள், உள்வீட்டுத் த்கவல்கள், அரசல் புரசலான விடயங்கள் என அனைத்து விடயங்களையும் அந்த ஒரே இடத்தில் அறிந்து கொள்ள முடியும்.


அங்கு வருவோர் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக மெய்மறந்து பேசிக்கொண்டிருப்பார்கள். தமது தரப்பு நியாயங்களை முன்வைப்பார்கள். வாதப் பிரதிவாதங்கள் வரும். வாக்குவாதம் முற்றி அது சிலவேளை பெரும் பிரச்சினையாகவே உருவாகிவிடும். இதனிடையே நானும் ஒரு பக்கத்தில் நின்று எனக்குத் தேவையான விடயங்களைப் பொறுக்கிக் கொள்வேன். அங்கு வரும் அரச உயரதிகாரிகளுக்கும், வேறு சிலருக்கும் நான் ஒரு ஊடகவியலாளன் என்பது நன்கு தெரியும். ஆயினும் அவர்களும் அந்த இடத்தில் சில விடயங்களை வெளிப்படையாகப் பேசுவார்கள். என்னிடமும் கூறுவார்கள். அவற்றை வைத்து நான் எனது தொழில் தொடர்பான வேலையைப் பார்த்துக்கொள்வேன்.

இப்படி ஒருநாள் அங்கு சென்றபோதுதான் இந்த வில்லங்கமான சம்பவமும் நடந்தது. நான் தேநீர் அருந்திக் கொண்டிருந்தேன். அப்போது முதியவர் ஒருவரும் அங்கு தேநீர் அருந்த வந்தார். அவர் வழமையாக அங்கு வருபவர். அதனால் அவரை அங்கு கண்டுதான் எனக்குப் பழக்கம். அவரைப் பற்றி முன்பின் எதுவும் எனக்குத் தெரியாது. அங்கு வரும்போது அவரும் சிரிப்பார். பதிலுக்கு நானும் சிரிப்பேன். அண்மையில் ஒருநாள் அவர் மிக அவசர அவசரமாக அங்கு வந்தார். 'தம்பி ஒரு பிளேன் ரீ... கெதியாத் தாடாப்பா' என்றார். வழமையாக ஆறுதலாக நின்று தேநீர் அருந்தும் அவர் அன்று படு அவசரமாக இருந்தமை தெரிந்தது. தேநீர் போடும் இளைஞன் 'என்னையா அவசரம்' என்றான்.

'காலையில் ராங்குக்குத் தண்ணீர் போடேல்ல. அவன் இப்ப ஆறரைக்கு சுவிச்சில கை வைக்கப் போறான்' என்றார் முதியவர். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவருக்குப் பக்கத்தில் நின்ற நான் 'ஐயா யாரைச் சொல்லுறியள்' என்றேன். 'வேற என்னத்தை, யாழ்ப்பாணக் கரண்டைத் தான் சொல்லுறன்' என்றார் அவர். நான் பதிலுக்கு 'அவையளும் என்னத்தைச் செய்யிறது? இருக்கிறதை வைச்சித்தானே தரலாம்' என்றேன். முதியவர் சட்டென்று கடுப்பானார். 'நீரும் மின்சார சபையிலையோ வேலை' என்று கேட்டார். நான் இல்லை என்றேன். அதற்கிடையில் எனக்குப் பக்கத்தில் நின்ற அரச அலுவலர் ஒருவர் 'அவர் பேப்பர்காரன். உதுகளைப் பற்றி அவருக்கும் கொஞ்சம் தெரியும்' என்று அவிட்டு விட்டார். அதைச் சொன்னதுதான் தாமதம் அந்த முதியவர் 'ஓ... வீடு கொளுத்திற ராசாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கிற ஆள்கள் நீங்கள்' என்றார். எனக்குச் சட்டென்று கோபம் வந்தது. முதியவருக்கு நல்ல கிழிப்புக் கொடுக்க வேண்டும் போல் இருந்தது. ஆனாலும் ஒரு நல்ல ஊடகவியலாளனாக இருக்க வேண்டும் என்றால் முதலில் பொறுமையாக இருக்கவேண்டும் என்று மூத்த ஊடகவியலாளர்கள் பலர் என்னிடம் பல தடவைகள் கூறியிருக்கிறார்கள். எடுத்தவுடன் கோபப்படுவதால் தேவையானவற்றைப் பிறரிடமிருந்து நாம் கறக்கமுடியாமல் போய்விடும். இதனால் நான் பொறுமையுடன் மீண்டும் அந்த முதியவரிடம் 'ஏன் ஐயா அப்படிச் சொல்லுறியள்' என்றேன். உடனே முதியவர் 'ஏனோ.... இன்று மின்தடை, நாளை மின்தடை என்று அவையள் அனுப்பிற செய்தியைத் தான் நீங்கள் போடுவியள். ஏன் இந்த மின்தடை எண்டு எப்பவாவது கேட்டிருக்கிறியளோ?' என்றார்.

'இதைப் பற்றி எத்தின தரம் எங்கட பேப்பரில எழுதிப்போட்டம். மின்தடை நின்ற பாடில்ல. இருக்கிற எஞ்சினுகள் பழுதாப்போகுதாம். அதால தான் இந்த நிலை' என்றேன்.

அதற்கு முதியவரோ 'அதென்ன ஒவ்வொருநாளும்



சரியா ஆறரைக்குத்தான் எஞ்சின் பழுதாப்போகுதோ? என்ன செற்பண்ணியே வைச்சிருக்கினம். ஏன் இரவில வெட்டினம். பகல்ல வெட்டலாம்தானே' என்றார். யாழ்ப்பாண மின்சார சபைக்கு நான் தான் பொறுப்பு என்ற மாதிரி முதியவர் மின்சாரம் மீதிருந்த கோபத்தை என்மேல் கொட்டித் தீர்த்தார். நான் 'இல்லை ஐயா. ஆறுமணியில இருந்து இரவு பத்து மணி மட்டும்தான் எல்லாரும் கரண்டைக் கூடப் பாவிக்கிறது. அப்ப அந்த நேரத்திலதான் மின் வெட்டு வரும். அதால ஆறரைக்கு ஒரு லைனைக் கட் பண்ணி மற்ற லைனுக்குக் குடுக்கினம். பிறகு மற்ற லைனைக் கட் பண்ணி ஏழரைக்கு உங்களுக்குத் தருகினம்' என்றேன்.

என்னோடு கதைத்துக் கொண்டு நின்றதால் முதியவர் நேரத்தை மறந்து விட்டார். அப்போது திடீரென மின்சாரமும் தடைப்பட்டது. மீண்டும் கடுப்பானார் முதியவர். 'பாத்தியளே, சரியா ஆறரை. இஞ்சின் பழுதாப்போச்சு' என்றார். எனக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. நான் விளங்கப்படுத்துவதும் அவருக்கு விளங்கவில்லை. 'நான் வாறன் போட்டு' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவரிடம் வாங்கிய பேச்சுத்தான் இதனை எழுதத் தூண்டியது.

* * *

யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மீண்டும் மின்வெட்டு அமுலுக்கு வந்திருக்கிறது. பகல் இரவு என்று பாராமல் எந்த நேரத்திலும் மின்சாரம் வெட்டப்படுகிறது. தினமும் பகல், இரவு எனக் கிட்டத்தட்ட நான்கு முதல் ஐந்து மணித்தியாலங்கள் வரை இந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது குறித்துக் கல்வியியலாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

தினமும் மின்வெட்டு. இதனால் ஏகப்பட்ட பிரச்சினைகள். பகலில் இடம்பெறும் மின்வெட்டினால் பல்வேறு அலுவல்கள் பாதிக்கப்படுகின்றன. திடீரென மின் தடைப்படுவதால் கணனிகள் பழுதடைகின்றன. வங்கிகளில் உள்ள தன்னியக்கப் பணம்பெறும் இயந்திரங்கள் செயலிழந்து போகின்றன. அரச அலுவலகங்களில் மக்கள் தமக்குத் தேவையான அலுவல்களை உரிய நேரத்தில் செய்துகொள்ள முடியவில்லை. எரிபொருள் நிலையங்களில் பம்பிகள் இயங்குவதில்லை. இரவில் மின்வெட்டு மேற்கொள்ளப்படுவதால் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாது பாதிக்கப்படுகிறார்கள். அலுவலகங்களுக்குச் செல்வோர் இரவு வேளையில் தமது உடைகளை மின் அழுத்தி மூலம் சீர்செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. தொலைக்காட்சி பார்க்க முடியவில்லை. இவ்வாறு பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வாறு மின்வெட்டு குடாநாட்டு மக்களின் அன்றாட அலுவல்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்தப் பிரச்சினைகளை மின்சார சபையின் அதிகாரிகளும் எதிர்நோக்குவர். அவர்களுக்கும் இது நன்கு விளங்கும் - தெரியும். ஆயினும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன? என்பதே தற்போதைய கேள்வி.

குடாநாட்டில் இப்போது சுமுகமான ஒரு சூழ்நிலை நிலவுகிறது. எல்லாவற்றையும் யாழ்ப்பாணத்திலேயே பெறக்கூடிய சூழல் உள்ளது. போக்குவரத்து வசதிகள் ஓரளவு சீரடைந்துவிட்டன. அத்தியாவசியப் பொருள்கள் குறைந்த விலைகளில் தேவையான அளவு கிடைக்கின்றன. மருத்துவ வசதிகளும் இங்கு உள்ளன. ஆயினும் மின்சாரம்தான் இப்போது பெரிய பிரச்சினை.

யாழ்.குடாநாட்டுக்குப் போதுமான அளவு மின்சாரத்தை வழங்குவதாகக் கூறிக்கொண்டு இங்கு வந்த 'நொதேர்ண் பவர்' நிறுவனம்தான் இவற்றுக்கெல்லாம் காரணம்.

யுத்த காலத்தில் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கவென மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பின்னணியில் பலத்த அரசியல் தலையீடுகள் இருந்தன என்பது பலருக்குத் தெரியாது. அந்தப் பின்னணியில் அரசியல் தலைகளால் பல மில்லியன் ரூபாக்கள் 'கொமிசனா'கப் பெறப்பட்டுத்தான் மின் வழங்கும் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் இடம்பெற்றன. அந்த மின் வழங்கும் நிறுவனங்களும் புதிய மின்பிறப்பாக்கிகளை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரவில்லை. சகல நிறுவனங்களும் கொண்டுவந்த மின்பிறப்பாக்கிகளும் பழையவைதான். அவை வேறு நாடுகளில் நன்கு பாவிக்கப்பட்டு கடைசிவரை பிழிந்தெடுக்கப்பட்டவை. அவற்றுக்கு வர்ணம் தீட்டிப் புதிய மின்பிறப்பாக்கிகள் எனக் கதை புனைந்து, ஒப்பந்தம் செய்து அதில் தாமும் 'கொமிசன்' அடித்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து இங்குள்ள மக்களின் காதில் பூச் சுற்றிய பெருமை அதன் பின்னணியில் இருந்தவர்களையே சாரும்.

இவ்வாறு வந்துசேரும் பட்டையடித்த மின் பிறப்பாக்கிகளை வைத்து யாழ்ப்பாணத்துக்கான மின் விநியோகத்தை ஒழுங்காக மேற்கொள்ளுமாறு மேலிடங்களில் இருந்து மின்சாரசபை அதிகாரிகளுக்கு பணிப்புரைகள் விடுக்கப்படும். பாவம் அவர்கள். இந்த மின்பிறப்பாக்கிகளை சீராக இயங்கச் செய்வதே அவர்களுக்குப் பெரும் தலையிடி. என்ன செய்ய முடியும். உள்ளதை வைத்து ஏதாவது செய்வோம் என அவர்களும் செயற்படுகிறார்கள்.

இதுவரை குடாநாட்டுக்கு 'கூல் எயர்' 'அக்றிக்கோ' நிறுவனங்கள் மின் விநியோகத்தை மேற்கொண்டன. எனினும் அந்த நிறுவனங்களால் ஒப்பந்தம் செய்யப்பட்ட அளவு மின்சாரம் ஒருநாளும் யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவில்லை. அதனை இங்குள்ள மின்சார சபை அதிகாரிகளும் மறுக்க மாட்டார்கள். ஒப்பந்தம் செய்யப்பட்ட அளவைவிட மிகக் குறைவான அளவு மின்சாரமே அந்த நிறுவனங்கள் கொண்டுவந்த மின்பிறப்பாக்கிகளில் இருந்து கிடைத்தது. காரணம் அவை புதியவை அல்ல. நன்கு பாவித்துப் பின்னர் கழித்து விடப்பட்டவை. அவற்றை வைத்துத்தான் யாழ்ப்பாணத்துக்கு மின்சாரத்தை வழங்கவேண்டிய இக்கட்டான நிலைமை இங்குள்ள அதிகாரிகளுக்கு.

இந்த நிறுவனங்களுக்குப் பின்னர் ஒப்பந்தம் செய்யப்பட்டதுதான் 'நொதேர்ண் பவர்' நிறுவனம். யாழ். குடாநாட்டுக்கு போதுமான அளவு மின்சாரத்தைத் தங்கு தடையின்றி வழங்கும் என்ற அடிப்படையிலேயே இந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் அந்த நிறுவனத்தால் முழுமையான மின் விநியோகத்தை மேற்கொள்ள முடியவில்லை. இந்த நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகளை யாழ்ப்பாணம் கொண்டு வந்து பொருத்தி முடிப்பதற்கே நீண்டகாலம் பிடித்தது.

(26 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பரேசன் அம்பாந்தோட்டை

அம்பாந்தோட்டையில் இந்தியா துணைத் தூதரகம் ஒன்றை அமைக்கிறது. இது சீனாவின் முத்துமாலை மூலோபயத்தினை கண்காணிப்பதற்கான நிலையமாக அமையப்போகிறது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. அதன் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

**சீனாவின் கால்கள் இலங்கையில் வேகமாகப் பரவி வருவதை இந்தியா சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கிறது. கண்காணிப்புப் பொறிமுறையையும் அது ஏற்படுத்துகிறது. அம்பாந்தோட்டையில் இந்தியா அவசரமாக அமைத்து வரும் துணைத் தூதரகம் அதன் ஒரு பகுதியே.**

அடுத்த மாதம் 19ஆம் திகதி இலங்கையின் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாகவும் பதவியேற்க உள்ளார். அதேநேரம் அம்பாந்தோட்டையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் துறைமுகத்திற்குள் வர்த்தகத் தேவைகளுக்கான முதலாவது கப்பல் நுழையவுள்ளது.

இதற்கமைய அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் இறுதிக்கட்டப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதேசமயத்தில், அம்பாந்தோட்டைப் பகுதியில் தனது துணைத் தூதரகத்தினை அமைக்கும் பணியினை இந்தியா முடுக்கிவிட்டிருக்கிறது.

துறைமுகம் வர்த்தக ரீதியாகத் திறக்கப்படுவதற்கு முன்னரே தனது துணைத் தூதரகத்தினைத் திறப்பதற்கு இந்தியா விரும்புகிறதா இல்லையா என்பதில் தெளிவில்லை. ஆனால், பணிகளை விரைவுபடுத்துவதில் அது தீவிரமாக உள்ளது.

**இந்தியாவின் அவசரம்**

இந்தியாவில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக மகிந்த அண்மையில் புதுடில்லி சென்றிருந்தார். அவரது பயணத்திற்கு முன்னதாக அம்பாந்தோட்டைப் பகுதிக்குச் சென்ற இந்தியத் தூதுவர் அசோக் என் காந்தா தூதரகம் அமைக்கும் முனைப்பு எந்த நிலையில் இருக்கிறது என்பதை நேரடியாக அவதானித்திருந்தார்.

அதன் பின்னர் அவர் உடனடியாக புதுடில்லிக்குப் புறப்பட்டார். யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் துணைத் தூதரங்களை அமைக்கும் இந்தியாவினது பணி எத்தகைய கட்டத்தில் இருக்கிறது என்ற விபரத்தினைத் தெரிவிப்பதற்காகவே அசோக் காந்தா டில்லி சென்றிருந்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் புதுடில்லியில் இடம்பெற்ற சந்திப்புக்கு முன்னதாக துணைத் தூதரகங்கள் தொடர்பான தனது அறிக்கையை இந்தியத் தூதுவர் பிரதமர் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்திருந்தார்.

அம்பாந்தோட்டையில் தனது துணைத் தூதரகத்தினை அமைக்கும் எண்ணத்தினை இந்தியா முதன்முதலில் சிறிலங்காவிற்குத் தெரியப்படுத்தியபோது மகிந்த அரசாங்கம் இந்த முடிவினை எதிர்த்திருந்தது. ஆனால் இறுதியில் கடுமையான அழுத்தங்களைத் தொடர்ந்து இந்தியாவின் இந்த வேண்டுகோளுக்கு மகிந்த அரசு செவிசாய்த்திருந்தது.

அம்பாந்தோட்டையில் தனது துணைத் தூதரகத்தினை அமைக்கும் இந்தியாவின் யோசனையினை மகிந்த அரசு ஆரம்பத்தில் எதிர்த்தமை நியாயப்படுத்தக்கூடியதே.

இந்தப் பிராந்தியத்தில் எப்படியாவது தனது துணைத் தூதரகத்தினை அமைக்க வேண்டும் என இந்தியா ஒற்றைக்காலில் நின்றது சிறிலங்காவிற்கு சந்தேகத்தினை ஏற்படுத்தியது.

**ஆயுதக் கப்பல் விவகாரம்**

எது எவ்வாறிருப்பனும், 22 ஓகஸ்ட் 2007 அன்று கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநின்ற ஒரு கப்பல் தொடர்பான சர்ச்சையைத் தொடர்ந்து, அம்பாந்தோட்டைப் பகுதியில் தனது துணைத் தூதரகத்தினை அமைக்க வேண்டிய தேவையினை இந்தியா நியாயப்படுத்தியிருந்தது.

பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்திலிருந்து பங்களாதேஷின் சிட்டிகொங் துறைமுகத்திற்கு படைத்துறைசார் பொருள்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட சரக்குகளை ஏற்றிச் சென்ற எம்.வி.மொல் அட்மிறேசன் என்ற பனாமாவில் பதியப்பட்ட கப்பலை 22 ஓகஸ்ட் 2007 அன்று சிறிலங்கா கடற்படையினர் இடைமறித்திருந்தார்கள்.

விடுதலைப் புலிகளுக்கான சரக்குகளைக் கொண்டுசெல்லக்கூடும் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு துறைமுகத்தில் தரித்துநின்ற இந்தக் கப்பலைச் சிறிலங்கா கடற்படையினர் சோதனையிட்டிருந்தார்கள். உருக்குத் தலைக்கவசங்கள், குண்டு துளைக்காத ஆடைகள் மற்றும் டி.எம்.எஸ் வகையினைச் சேர்ந்த சப்பாத்துக்கள் என்பன கப்பலில் இருந்ததாகப் பட்டியலிடப்பட்டிருந்தது.

கப்பலில் எடுத்துச்செல்லப்பட்ட பொருள்கள் யாருக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என்ற உத்தியோகபூர்வத் தகவல் எதனையும் கப்பல் கொண்டிருக்கவில்லை. இந்தப் படைத்துறைசார் பொருட்கள் பாகிஸ்தானின் படைத்தளபாட உற்பத்தி நிறுவனம் ஒன்றிலிருந்து பங்களாதேஷ் இராணுவத்திற்கு அனுப்பப்படுவதாக கப்பல் அதிகாரிகளிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

ஆனால், பங்களாதேஷ் இராணுவத்திற்காக இதுபோன்ற எந்தப் பொருள்களும் கொள்வனவு செய்யப்படவில்லை என அந்நாட்டு அதிகாரிகள் உறுதிபடத் தெரிவித்தனர். இந்த நிலையில் பாகிஸ்தான், சிறிலங்கா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் அரசியல் உயர்மட்டத்தின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினை கொண்டு வரப்பட்டது.

குறித்த பொருள்கள் யாருக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்ற உத்தியோகபூர்வ தகவல் டாக்காவிலிருந்து கிடைக்கும் வரை கொழும்பு துறைமுகத்திலிருந்து கப்பலை விடுவிக்கமுடியாது என சிறிலங்கா உறுதிபடக்கூறியது. யாருக்காக இந்தப் பொருள்கள் எடுத்துச்செல்லப்படுகிறது என்ற தகவலை வெளியிடுவதற்கு பங்களாதேஷ் இராணுவத்தினர் ஆரம்பத்தில் மறுப்புத் தெரிவித்து விட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து அப்போது பங்களாதேஷில் ஆட்சியிலிருந்த ஜெனரல் மூவின் தலைமையிலான இடைக்கால அரசுக்குக் கடும் அழுத்தங்களைக் கொடுத்த பாகிஸ்தான் அந்தப் பொருள்கள் பங்களாதேஷ் இராணுவத்திற்கே அனுப்பப்பட்டன எனச் சொல்ல வைத்தது.

ஈற்றில் இந்தப் பொருள்கள் தமக்கானதே எனக்கூறும் உத்தியோகபூர்வக் கடிதத்தினை பங்களாதேஷ் இராணுவம் இலங்கைக்கு அனுப்பியிருந்தது.

**கப்பல்-சீன தொடர்பு**

இதனைத் தொடர்ந்து கப்பல் விடுவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதன் பின்னர், குறித்த கப்பலில் எடுத்துவரப்பட்ட படைத்துறைசார் பொருள்கள் சீனக் கப்பல் ஒன்றுக்கு மாற்றப்பட்டு எதுவெனத் தெரியாத ஒரு இடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கிறது.

கைக்குண்டுகள் மற்றும் வெடிமருந்துகள் என்பனவும் இந்தப் பொருள்களுள் இருந்ததாக கொழும்புத் துறைமுகத்தில் கப்பலைச் சோதனையிட்ட இலங்கைக் கடற்படை அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள்.

வழமைக்கு மாறான இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சிறிலங்கா மற்றும் பங்களாதேஷ் நாடுகளிலுள்ள துறைமுகங்கள் ஊடாக இந்தியாவிலுள்ள பயங்கரவாத அமைப்புக்களின் தேவைக்காகவே சீனா இந்த ஆயுதங்களைக் கடத்தியிருக்கக்கூடும் என இந்தியா அச்சம் வெளியிட்டது. இது இந்தியாவின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலானது எனவும் இந்தியா மகிந்த அரசிற்குச் சுட்டிக்காட்டியிருந்தது.

இதனைத் தொடர்ந்து மே 2008ஆம் ஆண்டு 'ஜேன்ஸ் புலனாய்வுப் பார்வை' என்ற சஞ்சிகையில் சீனாவின் ஆயுதக்கடத்தல் வலையமைப்புத் தொடர்பான முழுமையான ஆய்வு வெளிவந்திருந்தது. இந்த அறிக்கை தொடர்பிலும் இந்தியா மகிந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தது.

**சீனாவின் ஆயுதக் கள்ளச் சந்தை**

'போர்ப் பிரபுக்கள்' என்ற தலைப்பில் ஜேன்சினது புலனாய்வுப் பார்வை வெளியிட்ட கட்டுரையில் சீனாவின் ஆயுதக் கடத்தல் வலையமைப்புக்கள் தென்அமெரிக்க மற்றும் ஆசியப் பிராந்தியத்திலுள்ள பயங்கரவாத அமைப்புக்களுக்கு எவ்வாறு போர்த் தளபாடங்களை விநியோகிக்கின்றன என்ற விவரம் விலாவாரியாக விவரிக்கப்பட்டிருந்தது.

ஆயுதக் குழுக்களுக்கு சட்டவிரோத ஆயுத தளபாடங்கள் விநியோகிக்கப்படும் படங்களையும் அந்தக் கட்டுரை தன்னகத்தே கொண்டிருந்தது. குறிப்பட்ட வலையமைப்பானது மோதல்களில் ஈடுபட்டிருந்த இரண்டு தரப்புக்குமே, உதாரணமாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரச படையினருக்கும் ஆயுத தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

ஆப்கானிஸ்தானின் தலிபான் அமைப்பு மற்றும் இந்தியாவின் தென்கிழக்கு மாநிலங்களிலுள்ள ஆயுதக்குழுக்கள் ஆகியவற்றுக்கும் இதே வலையமைப்பு படைத்தளபாடங்களை விநியோகித்திருக்கிறது.

சீனாவின் அரச ஆயுத உற்பத்தி நிறுவனமான 'நொறிங்கோ' நிறுவனத்தின் ஒழுங்கமைப்பின் கீழ் எம்.வி.மொல் அட்மிறேசன் கப்பலில் கொண்டுசெல்லப்பட்ட படைத் தளபாடங்கள், பங்களாதேஷைத் தளமாகக் கொண்டு செயற்படும் இந்தியக் கிளர்ச்சிக் குழுவான அசாமின் ஐக்கிய விடுதலைப் படை என்கிற 'உல்பா' கிளர்ச்சிக் குழுவிற்கானதே எனப் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆர்.பி.ஜி. வகையினைச் சேர்ந்த உந்துகணை செலுத்திகள், ரி-85 வகையினைச் சேர்ந்த இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மற்றும் வெடிபொருள்கள் என்பன இந்தத் தொகுதியில் இருந்திருக்கின்றன.

சீனாவின் அரச நிறுவனமான 'நொறிங்கோ'வின் செயற்பாடுகள் தொடர்பாக எழுந்த விவாதத்தினைத் தொடர்ந்த 2003ஆம் ஆண்டு சீனாவிற்கும் ஐக்கிய அமெரிக்காவிற்குமிடையே இராஜதந்திர ரீதியில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

**இந்தியாவின் அச்சம்**


ஆயுத விநியோகத்தர்கள் மற்றும் ஆயுத முகவர்களாகச் செயற்படும் தனியார் நிறுவனங்கள் ஊடாகவே 'நொறிங்கோ' இது போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது என ஜேன்ஸ் புலனாய்வுப் பார்வை ஏடு தகவல் வெளியிட்டிருந்தது.

உதாரணமாக தாய்லாந்தினைத் தளமாகக்கொண்ட எச்.டி. உள்ளக வர்த்தகத் தனியார் நிறுவனம் என்ற நிறுவனத்தின் ஊடாகவே பாங்கொக்கில் 'நொறிங்கோ' தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

கரடியனாறு பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெடிப்புச்சம்பவத்தைத் தொடர்ந்து, சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான வெடிபொருள்களை இதுபோல களஞ்சியப்படுத்தி வைப்பது ஆபத்தானது என்ற தனது அச்சத்தினை இந்தியா மகிந்த ராஜபக்ஷ அரசிடம் வெளியிட்டிருந்தது. இந்தியாவினது இதுபோன்ற கரிசனைகளைச் இலங்கை அரசால் தட்டிக்கழிக்க முடியாது.

இந்தியா அம்பாந்தோட்டையில் தனது துணைத் தூதரகத்தினை அமைப்பதற்குச் சிறிலங்கா அனுமதித்ததன் பின்னணி இதுதான். அம்பாந்தோட்டைத் துறைமுகமானது இந்தியாவிற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் செயற்படுமெனில் அப்பகுதியில் அமையவுள்ள இந்தியத் துணைத் தூதரகம் அதனை அவதானித்து அது தொடர்பான தகவல்களை இலங்கை அரசுக்கு வழங்கும் என மகிந்த அரசு நம்புகிறது.

இருப்பினும் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் *(6ஆம் பக்கம் பார்க்க)*



அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மாதிரி. நிர்மாணப் பணிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் அடுத்த மாதத்தில் இங்கு கப்பல்கள் வர்த்தக ரீதியாக வந்து செல்ல ஆரம்பிக்கும்.

**மத்திய கிழக்கில் இருந்து எரிபொருள்களைக் கொண்டு வரும் தனது இந்து சமுத்திர விநியோகப் பாதையைப் பாதுகாக்க இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் (இந்தியாவைச் சுற்றி) துறைமுகங்களை அமைத்து வருகிறது சீனா. இதுவே அதன் 'முத்துமாலை' திட்டம் எனப்படுகிறது.**



துறைமுகம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்து



தடுப்பு அணை பொருத்தப்படுகிறது



முதல் தடவையாக கடல் நீர் உள்ளே வருகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

## ADMINISTRATION & FINANCE OFFICER KILINOCHCHI

'The HALO Trust is a non-political, non-religious Non Governmental Organisation specialising in the removal of the land mines and other debris of war. The HALO Trust has been working in Sri Lanka since 2002 and currently has demining teams in Jaffna, Kilinochchi and Mullaitivu Districts. The programme is supported by a small Office in Colombo.

The HALO Trust is currently seeking an experienced Administration and Finance Officer to work in its rapidly expanding Kilinochchi office. **Please note that this is a full-time position based in Kilinochchi Town.**

Main responsibilities:

* Managing petty cash and maintaining full accounts of expenditure in line with HALO financial management and procurement procedures
* Maintaining the payroll system and HR database for over 700 staff
* Updating personnel files and contracts as required

Qualifications / Minimum requirements:

* Experience of a similar role in a large organization, in particular accounting for multi-donor projects.
* Excellent command of English, Sinhala and Tamil languages
* Excellent computer skills including MS Office (in particular a very strong command of Excel)
* Very good organisational skills and a keen eye for detail.

Interested applicants should send a CV with covering letter to recruitment @ halosrilanka.org

**Closing date: 30th October 2010**

Only short-listed candidates will be contacted.

The salary offered will reflect the skills and experience of the selected candidate


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி நாகமணி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.07.1926 | 04.11.2009 |

திதி: 24.10.2010

அன்புக்கு நிகர் அன்னை என்பது போல்
அறிவுக்கு நிகர் தந்தை என வாழ்ந்து காட்டினீரே- ஐயா!
உம் பிரிவை தாங்காமல் தவிக்கிறோம் நாம்
ஆண்டுகள் நூறு சென்றாலும் மறவோமே உம்மை நாம்
என்றும் எம் கண்ணெதிரே நிற்கின்றீர்கள் ஐயா!
எப்படி மறப்போம்.

இல.27, சொலமன் லேன்,
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (105101)

மனைவி,
பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
08.12.1941

உதிர்வு
04.11.2009

அமரர்
**பொன்னம்பலம் சபாரட்ணம்**
(பிரபல புகையிலை வர்த்தகர்)

கூடத்தில் கொலுவிருந்த
மாடத்து மணி விளக்கே!
காலத்தின் கட்டளையால் - எமை
கண்ணீரில் மிதக்க விட்டு - நீங்கள்
காற்றாகி ஈராறு திங்கள்
இன்றோடு போனதப்பா!
காலங்கள் விடைபெறலாம்- எம்
கோலங்கள் மாறலாம்- ஆனாலும்
கண் முன்னே நிழலாடும்- உங்கள்
நினைவுகள் மட்டும் நித்தமும் எம்முடன் உயிர்வாழும்.

உடையார் வீதி,
கொக்குவில் கிழக்கு. (105046)

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

# தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பினர் 67 ஈழஅகதிகள்

சென்னை, ஒக். 24

தமிழ்நாட்டில் அடைக்கலம் தேடியிருந்த 67 ஈழத்தமிழ் அகதிகள் கடந்த வியாழக்கிழமை விமானம் மூலம் இலங்கை திரும்பியுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ..நா. தூதரகம் இவர்களுக்கான பயண ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருந்தது. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 21 குடும்பங்களே தாயகம் திரும்பி உள்ளனர். இவர்களில் 67 பேர் உள்ளடங்குவர் என அதிகாரிகள் கூறினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும் குழந்தைகளுமாவர்.

இவர்கள் போர் உச்சக்கட்டதை அடைந்திருந்த 2008, 2009ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்றவர்களாவர். நாடு திரும்பும் அகதிகளுக்கு ஐ.நா. தூதரகம் உணவில்லாத உதவிப் பொருள்களை வழங்கி வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தலவாக்கலையில் 3 சந்தேகநபர்கள் நேற்றுக் கைது

நுவரெலியா, ஒக். 24

நுவரெலியா மாவட்டத்தின் தலவாக்கலைப் பிரதேசத்தில் பொலீஸார் நேற்று மேற்கொண்ட திடீர் சோதனையின் போது மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாண விசேட புலனாய்வுப் பிரிவினரே சோதனை நடத்தினர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டு கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டிருக்கும் நபர் மத்திய மாகாணத்தின் முன்னாள் பலம்வாய்ந்த அரசியல் வாதியொருவரின் நெருங்கிய ஆதரவாளர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களுக்குப் புலிகளுடன் தொடர்புகள் இருந்தனவா என்பது குறித்தும் விசாரணைகள் நடக்கின்றன.

சந்தேக நபர்கள் மூவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

### ஒப்பரேசன்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளைச் சீனாவிற்கு வழங்கிய மகிந்த அரசு, தொடர்ந்து கொழும்பு துறைமுகத்தினைப் புனரமைத்துப் புதுப்பிக்கும் பணியையும் சீனாவிற்கே வழங்கியிருப்பது இந்தியாவின் சந்தேகத்தினை மேலும் அதிகரித் திருக்கிறது.

அதேசமயம், அம்பாந் தோட்டையில் அமையவுள்ள தனது துணைத் தூதரகத்தில் இந்தியா ஒற்றர்களைப் பணியில் அமர்த்தக் கூடும் என்ற அச்சத்தினைச் சீனாவும் மகிந்த அரசும் வெளியிட்டிருக்கின்றன.

அம்பாந்தோட்டை துறைமுகம் வர்த்தகத் தேவைகளுக்காகத் திறக்கப்படும் அதே காலப் பகுதியில் இந்தியாவும் அம்பாந்தோட்டையில் தனது துணைத் தூதரகத்தினைத் திறக்குமெனில், ஆசியாவின் இருபெரும் அரக்கர்களும் ஒருவரை ஒருவர் அவதானிக்கும் தன்மையினை உலகமே அவதா [illegible]


# A/L 2010 மாணவர்கள்

உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ, **(UK, Canada, Australia, India, Ukraine, Malaysia, USA, New Zealand, Singapore)** கல்வி கற்பதற்கான வாய்ப்பை எதிர்பார்க்கின்றீர்களா?

இன்றே எமது **STUDENTS DATA BANK**ல் உங்களை பதிவு செய்து கல்வி சம்பந்தமான முழுமையான விபரங்களையும் இலவசமாக பெற்றுக் கொள்ளவும்.

Name :......................................
Address :......................................
......................................
.................... Tel :....................
**Name of your School** :......................................
A/L Stream : BIO / MATHS/ COMMERCE/ ARTS (Circle)
A/L Exam Index No :......................................
E-mail :......................................

உங்கள் விபரங்களை கடிதத்திலோ/ தபாலட்டையிலோ எழுதி அனுப்பவேண்டிய முகவரி

**SIC CENTRE**
734, Hospital Road, Jaffna.

TEL: 0777-767818


## அந்தியேட்டி அழைப்பு

மண்ணில்:
16.04.1944

விண்ணில்:
24.09.2010



## சண்முகம் வேலாயுதம்

கடந்த 24.09.2010 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.10.2010) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரது இல்லத்தில்நடைபெறும். அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொட்டய தோட்டம்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி. (105042)

குடும்பத்தினர்


### கணினி வகுப்புக்கள் (Home visiting)

கொழும்பில் பிரபலமான கணினி ஆசிரியரினால் MS-OFFICE, INTERNET & E-MAIL, PAGE MAKER, CORAL DRAW, PHOTO SHOP, HARDWARE, VISUAL BASIC, WEB, GRAPHIC DESIGNING, ETC.... அனைத்துக் கணினி வகுப்புக்களும் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். கணினி வசதி இல்லாதவர்களுக்கு LAP-TOP இல் கற்றுக்கொடுக்கப்படும். அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். *தொடர்பு:* 0776951680

### திருமண சேவை

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல்அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு! விவரங்களை "சுயதெரிவு முறை முன்னோடி" சர்வதேச, மூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் வேல்அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்பு கொண்டு விசாரித்தறிக!

தொலைபேசி: 0112360488, 0112360694, 0114875929

### வான் விற்பனைக்கு

NP PA XXXX என்ற தொடர் இலக்கம் கொண்ட TOYOTA HIACE (GL, 5L.ENGINE) DAUL A.C. மற்றும் T.V. உடன் கூடிய வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0778820441

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி, இருபாலை சந்திக்கு அண்மையில் நன்னீர் வசதியுள்ள 45 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்து கொடுக்கப்படும்.

(105040) *தொடர்பு:* 0718175820

### English Classes (Personal)

(Grammer and Spoken English)

மாணவர்களுக்கு மிகவும் இலகுவான முறையில் எழுத, வாசிக்க, கதைக்க (எளிய நுட்பங் களுடன்) கற்பிக்கப்படும். அழையுங்கள்: 0773264196

### வீடுவளவு விற்பனைக்கு உண்டு

நல்லூருக்கு அண்மித்த பகுதியில் நல்ல சுற்றாடலில், சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

(105030) தொடர்பு: *021 2221541*


## மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை பொன்னம்மா

வேல் வீதி, மயிலிட்டியை சொந்த இடமாகவும் கொலண்டில் வசித்தவருமான கணபதிப் பிள்ளை பொன்னம்மா கொலண்டில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.

தொ.பே: 0779987429

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்துறை சார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்க தொழில் உறவு அமைச்சர் நாளை யாழ்.வருகை

யாழ்ப்பாணம், ஒக்.24

தொழில் உறவு உற்பத்தி திறன் அமைச்சர் காமினி லொக்குகே, பிரதி அமைச்சர் ஜெகத் பாலசூரிய, வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் யாழ்ப்பாணத்தில் நாளைநடைபெறும்பல்வேறு நிகழ்வுகளில் பங்கு பற்றவிருக்கின்றனர்.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் நடமாடும் சேவையை யாழ்.மாவட்டத் தொழில் அலுவலகத்தில் நாளை காலை 9 மணிக்கு அவர்கள் ஆரம்பித்து வைக்கவிருக்கின்றனர்.

இந்தச் சேவையில் அங்கத்தவர்கள் தங்கள் கணக்கு நிலுவைகளை அறிதல் மற்றும் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் வித்தியாசமிருப்பின் அவற்றைத் திருத்துதல் போன்ற நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படும்.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு விண்ணப்பித்து அதனுடைய கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்ட 13 பேருக்கு உரிய மீளளிப்பு நிதியும் அன்றைய தினம் வழங்கப்பட இருக்கின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு விண்ணப்பித்து அந்தக் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்ட 8 பேருக்கும் கொடுப்பனவுகள் அன்றைய தினம் வழங்கப்பட இருக்கின்றன.

மேலும் தொழில் பிணக்குத் தீர்வு காணப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு பணக்கொடையும் அன்றைய தினம் வழங்கப்பட இருக்கின்றது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட பல்கலைக் கழக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், வேலைவாய்ப்பு பணியகத்தினால் நடத்தப்பட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்வில் பங்கு பற்றிய பல்கலைக் கழக பட்டதாரி மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட இருக்கின்றன.

2006 ஆம் ஆண்டு அசாதாரண சூழ்நிலைவரை இயங்கிய தொழில் இல்லம் மீண்டும் நாவலர் வீதியில் நாளை காலை 8 மணிக்குத் திறந்து வைக்கப்பட வுள்ளது. (ஐ-15)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம் பெற்ற ஆசிரியர் தின விழாவில் வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் த.சிவகடாற்சம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்-நவாலி செய்தியாளர்)

## ஆலங்குழாய் குளத்தின் வான் கதவுகள் இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டன

### இதனால் நீரைத் தேக்கி வைக்க முடியாத நிலை

சண்டிலிப்பாய், ஒக்.24

சண்டிலிப்பாய் பிரிவிற்குட்பட்ட ஆலங்குழாய்க் குளத்தில் பொருத்தப்பட்டிருந்த நான்கு வான் கதவுகளும் விசமிகளால் அகற்றப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இதனால் மழை நீரைக் குளத்தில் தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆளங்குழாய் குளத்தை நம்பி இப்பகுதியிலுள்ள விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் மட்டுமல்ல கோடை காலத்தில் மேட்டுப் பயிர்களைச் செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மழை காலங்களில் இக்குளத்தில் மழை நீரைத் தேக்கி வைப்பதற்காக அப்பகுதியில் நான்கு வான் கதவுகள் நீர்பாசனத் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டிருந்தன. இக்கதவுகள் இனந்தெரியாதோரால் சேதப்படுத்தப்பட்டும் அகற்றப்பட்டுமுள்ளன.

இது குறித்து கவலை தெரிவித்துள்ள இப்பகுதி விவசாயிகள் மழை நீரைத் தேக்கி வைப்பதற்கு நான்கு வான் கதவுகளையும் அமைத்துத் தரும்படி நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

இதேவேளை இவ்வான் கதவுகள் ஏற்கனவே பல தடவைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் கதவுகளை அமைப்பதற்கு பெருந் தொகையான நிதி தேவைப்படுவதால் இப்பகுதி விவசாயிகள் இவ்விடயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டு மென்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-115)

## 'சொண்ட்' நிறுவனத்தால் டெங்கு ஒழிப்புப் பணி

ஊர்காவற்றுறை, ஒக்.24

ஊர்காவற்றுறை (ஜே/56 பிரிவு)தம்பாட்டி கிராம பகுதியில் 'சொண்ட' நிறுவன அனுசரணையோடு டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கிராமத்தில் உள்ள 400 பேருக்கு மேல் சிரமதானப் பணிகளில் கலந்து கொண்டனர். மேற்படி பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் மேற்பார்வையிடப்பட்டு சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் தம்பாட்டி (ஜே/56) பிரிவு அலுவலர் த.புருஷோத்தமன் மற்றும் 'சொண்ட' நிறுவனத்தின் ஊர்காவற்றுறை பணியாளர்கள் க.கதீசன் மற்றும் த.திருமாறன் கலந்து கொண்டனர். (201-325)

## கட்டுடை சைவ வித்தியாலயத்தை கவனிப்பார் யாரும் இல்லை

நவாலி, ஒக்.24

150 வருடங்கள் பழமை வாய்ந்த கட்டுடை சைவ வித்தியாலயம் புனரமைப்புச் செய்யப்படாமல் மிகவும் பின்தங்கிய நிலையில்



காணப்படுவதாக அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

பனஞ்சலாகைகளால் பொருத்தப்பட்ட இப்பாடசாலையின் உட்பக்க வெளிப்பக்கச் சுவர்கள் உடைந்து சிதைந்த நிலையிலுள்ளன. அதிபரின் அறையிலும் பல இடங்களிலும் கறையான் புற்றுகள் தென்படுகின்றன.

இவற்றின் மத்தியில் இங்கு 115 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அதிபர் உட்பட 7 ஆசிரியர்கள் உள்ளனர். இப்பாடசாலைகளை புனரமைப்புச் செய்து தருமாறு பாடசாலை அபிவிருத்திச்சபையினரும், பொதுமக்களும் நீண்ட காலமாக அரசிடமும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் மகஜர்களை அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லையென்று பாடசாலைச் சமூகமும் பொது மக்களும் கவலை தெரிவிக்கின்றனர். (201-100)



புதிய கட்டடங்களை அமைக்கும் போது அவற்றுடன் சேர்ந்து மழைநீரைச் சேகரிப்பதற்காகத் தொட்டி ஒன்றையும் அமைக்க வேண்டும் என்ற அரசின் திட்டம் ஒன்றை நாடாளுமன்றம் அண்மையில் அங்கீகரித்திருந்தது.

இத்திட்டம் தொடர்பான சட்ட ஆவணங்களை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரி ஒருவரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்:-லக்ஸ்மன்)

## வீட்டுத்திட்டப் பணிகள் நிறைவடைய வேண்டுமானால் பயனாளிகளின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம்

### நல்லூர் பிரதேச செயலர் உரை

யாழ்ப்பாணம், ஒக்.24

உங்களது முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் மிக விரைவில் வீட்டுத் திட்டத்துக்கான வீடுகள் கட்டி முடிக்கப்படும். மேலும் 'சோ ஆ' நிறுவனம் மேற்படி வீட்டுத் திட்டத்துக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது. எனவே நீங்கள் அந்த நிறுவனத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளக் கூடிய அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கிக் கொழும்புத்துறை மணியந்தோட்டக் கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். இவ் வாறு தெரிவித்தார் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன்.

கொழும்புத்துறை மணியந்தோட்டம் குடியிருப்புப் பகுதியில் இரண்டாம் கட்ட மீள் குடியேற்றப் பயனாளிகளுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

'சோஆ' நிறுவனம் ஜனாதிபதி செயலணியில் சிரமத்தின் மத்தியிலேயே மேற்படி திட்டத்தைப் பெற்றுள்ளது. கடந்த 16 வருடங்களாக பல்வேறு வசதிகளுடன் வேறு கிராமங்களில் நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள். வலிகாமம் வடக்கில் முன்னர் பல்வேறு வசதிகளுடன் வாழ்ந்த மக்கள் இன்னமும் மீள் குடியமராத நிலையில் இந்தக் கிராம மக்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. அந்த வகையில் இரண்டாம் கட்ட மீள் குடியமர்வுத் திட்டத்தில் 35 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சொந்தக் காணி உள்ளவர்களுக்கு மட்டுமே தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்க முடியும். ஒரு காணிக்கு இரண்டு பேர்கள் உரிமை கோருவது பிரச்சினைக்குரிய விடயம். காணி விடயம் நுணுக்கமாகக் கையாள வேண்டியதொன்றாகும். ஒரு குடும்பத்துக்கு ஒரு வீடு மட்டுமே வழங்கப்படும். சிலர் இரண்டு, மூன்று பேர் என குடும்ப எண்ணிக்கை காட்டி வீடு தேவை என்கின்றனர். இதே வேளை 'சோஆ' நிறுவனம் மேற்படி வீட்டுத்திட்டத்துக்கான வீடுகளைக் கட்டித்தர முன் வந்துள்ளது. குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கு வீட்டுத் திட்டத்தில் வீடு தேவையெனில் காணி பிள்ளைகளின் பெயருக்கு மாற்றி எழுதப்பட்டிருக்க வேண்டும். கோயில் காணிகளெனின் அதற்குரியவர்களிடமிருந்து பெறப்பட்ட காணிக்கான அத்தாட்சிகள் இருத்தல் வேண்டும் - என்றார் அவர். (201-7)

## வடமராட்சி கிழக்கில் இயங்கும் பாடசாலைகளுக்கு தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

பருத்தித்துறை, ஒக்.24

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் இயங்கிவரும் 5 பாடசாலைகளுக்கு தற்காலிகமாகக் கொட்டகைகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி பகுதியில் பாடசாலைக் கட்டடங்கள் போரின் போது சேதமடைந்திருப்பதையடுத்து மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்படி தற்காலிகக் கொட்டகைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, மாமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளிலேயே தற்காலிக கொட்டகைகள் அமைக்கும் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தத்தின் துரித மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே உடுத்துறை மகா வித்தியாலயம், ஆழியவளை சி.சி. தமிழ் கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, செம்பியன் பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலை களின் [illegible] சுமார் 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (190)

## கைதடியில் குடிதண்ணீர் திட்டத்தை அமைச்சர்கள் ஆரம்பித்து வைத்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 24

கைதடி மக்களுக்கான குடிதண்ணீர்த் திட்டம் நேற்று முன்தினம் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை கைதடியிலுள்ள நீர்வழங்கல் நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர்கள் நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இதனைத்தொடர்ந்து அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் கைதடி அபிவிருத்திக்குழுச் செயலாளர் மோகனரூபன் தனது கிராமத்தின் நீண்ட நாள்கோரிக்கையான குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தந்தமைக்கு கைதடி மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலாளர் செல்வி ரஞ்சனா மற்றும் நீர் வழங்கல் பகுதி அதிகாரிகள் ஆகியோருடன் பொதுமக்களும் பங்குகொண்டனர் (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஒக்ரோபர் 24 முதல் ஒக்ரோபர் 30 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

நினைத்த காரியங்கள் கைகூடும். புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சந்தோஷம் தரும் செய்தி கேட்கலாம். உருப்படியாக சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் சேரும். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அதேநேரத்தில், பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகளும், கசப்பான அனுபவங்களும் ஏற்படலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். மாமன், மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்களுடன் நல்லிணக்கம் பாதிக்கப்படலாம். கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளிலும் எதிர்பார்த்த பலன் கிடைப்பது கடினம். முகவர் தோழில் புரிவோருக்கு அலைச்சல்கள் அதிகரிக்குமே அன்றி, அதற்கேற்ற பலன் கிடைக்காது. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால் செலவுகள் கூடும். தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். உடன் பிறந்த சகோதரர்கள், பங்காளிகள் ஏட்டிக்குப் போட்டியாக செயல்பட்டு எரிச்சல் உண்டாக்கலாம். செலவு, அலைச்சல் உண்டு. சந்தோஷமான அனுபவங்களை எதிர் கொள்ளலாம்.

### இடபம்

பொழுதுபோக்கு விடயங்களுக்காகவும், கேளிக்கை கொண்டாட்டங்களுக் காகவும், ஆன்மிக வழிபாடுகளுக்காகவும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். முடியாத சில வேலைகளை நினைத்து வருத்தம் அடைவீர்கள். காரிய வெற்றி உண்டு. எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். உறவினர்களை உபசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரலாம். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவுக்கு வரும். தந்தை வழியிலும், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியிலும் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசாங்கம், அதிகாரிகள், அரசியல்வாதிகள் தொடர்பான விடயங்கள் எல்லாம் அனுகூலமாக முடியும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். கடிதங்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வரலாம். முகவர் தொழில் புரிவோர் புதிய முகவர் தொழில் எடுக்கும் சூழ்நிலை உருவாகும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். உடன் பிறந்த சகோதரிகள் வழியில் திடீர் செலவு உண்டாகலாம். வாகனங்களால் தொல்லை நேரும். நிலம், பூமி தொடர்பான காரியங்கள் சாதகமாக அமையும். அதன்பின் சிரமங்கள், இடர்பாடுகள் ஏற்படலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் அதற்குள் நிறைவேற வாய்ப்பு உண்டு. ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### மிதுனம்

எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். மற்றவர்களுக்கு வாக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைபாயலாம். எதிர்பாராத பணவரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் உண்டு. புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். உடல் ரீதியான உபாதைகளால் சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். மன அமைதி பாதிக்கப்படலாம். எதிலும் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறலாம். அடிக்கடி, எரிச்சல், மன உளைச்சலுக்கு ஆள்படுவீர்கள். பாராட்டுக்கள், புகழ்ச்சியை விட விமர்சனங்களே அதிகம். மற்றவர்களின் குற்றச்சாட்டுக்கு அடிக்கடி ஆள்படலாம் என்பதால் எதிலும் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகம், விவசாயம், கட்டட பணிகள் போன்றவற்றில் முன்னேற்றம் காணப்படும். உடன் பிறந்த சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாக சமாளிப்பீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்கள் பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். காரிய வெற்றி உண்டு. பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷ அனுபவம் உண்டு.

### கடகம்

உத்வேகத்துடன், பரபரப்பாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அடுக்கடுக்காகப் பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். ஏதோ ஒரு விதமான கவலை மனதை ஆள்கொள்ளும். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும். சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். ஓய்வாக இருக்காமல் ஏதாவது வேலைகளுக்காகப் பரபரப்பாக அலைந்து கொண்டிருக்க நேரிடும். நீண்ட தூர பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். சில விடயங்களில் யாருக்கும் வாக்கு கொடுக்க வேண்டாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். குழப்பங்கள், தடுமாற்றங்கள் அதிகரிக்கும். விவகாரமான பிரச்சினைகளால் மன அமைதி பாதிக்கப்படலாம். எதற்கெடுத்தாலும் மற்றவர்கள் மீது எரிந்து விழுவீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் இல்லாமல் நினைத்த காரியங்களைச் சாதிப்பீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும் உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையும். காரிய வெற்றி உண்டு.

### சிங்கம்

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். நீங்கள் எதிர்பாராத சிலரைச் சந்திக்கலாம். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். அலைச்சல் இருந்தாலும், திட்டமிட்ட வேலைகளை சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். சிக்கல்கள், சிரமங்கள் இல்லாமல் நினைத்த காரியங்களை முடித்துக் கொள்வீர்கள். கடந்த சில நாள்களுக்கு முன்னர் செய்யத் தயங்கிய காரியங்களை இப்போது துணிச்சலாக செய்வீர்கள். எதிர்ப்புகள் போட்டிகள் விலகும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வழக்கு விவகாரங்கள், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் எதிர்பார்த்த அளவுக்கு ஆதாயம் கிடைப்பது சிரமமே. சில விடயங்களில் குதர்க்கமாகவும், ஏட்டிக்குப் போட்டியாகவும் செயற்பட்டு மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். கொடுக்கல், வாங்கல்களிலும் கவனம் அவசியம். எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். தண்டச் செலவுகள் நேரும். வீண் பயம் உண்டாகும்.

### கன்னி

குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். பணவரவுகளைப் பெறலாம். பல நாள்களாகச் சந்திக்காத சிலரை சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். அலைச்சல், சிரமம் இல்லாமல் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். கடன் பாக்கிகள், கட்டண மீதிகளைச் செலுத்துவீர்கள். உழைப்பில் கஷ்டங்கள் அதிகரிக்கும். தொழிலில் கவனக்குறைவாக செயல்பட்டு மற்றவர்களின் அதிருப்திக்கு, விமர்சனத்திற்கு ஆளாகலாம். சிலர் வெளியூர்களுக்கு இடம் மாறும் சூழ்நிலை உருவாகலாம். திடீரென உருவாகும் பெரிய செலவுகளால் திணறலாம். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கடும் பிரயத்தனம் மேற்கொள்ளலாம். கொடுக்கல், வாங்கல்களில் கவனமாக செயல்பட வேண்டும். குடும்பத்தினரின் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடக்கும். கவனம் அவசியம்.

### துலாம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். கடன் பாக்கிகள் வசூலாகும். எந்த விடயத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் மனம் தள்ளாடலாம். பிள்ளைகள் வழியில் ஏற்படும் திடீர் செலவுகள் சிரமப்படலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். பொறுமையை சோதிக்கும் நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடக்கலாம். இதனால், கோபம், வேகம் அதிகமாகி சிலருடன் காரசாரமாகப் பேசலாம். அரசாங்கம், அதிகாரிகள், அரசியல்வாதிகள் தொடர்பான வகையில் அலைச்சல், செலவுகள் உண்டாகும். பணிபுரிவோர் மேலிடத்திடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற காரிய விடயங்களில் இடையூறுகளை, சிரமங்களை ஏற்படுத்தலாம். ஒரு செலவு முடிந்து விட்டது என, சந்தோஷப்படும் நேரத்தில் மற்றொரு செலவு உருவாகலாம். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்களும் சாதகமாக இல்லை. ஏதோ ஒரு விடயத்தை நினைத்து அடிக்கடி புலம்ப நேரிடலாம். பண விவகாரம், கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். சூடான பேச்சுக்களை தவிர்க்கவும். பணவரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். ஊக்கம், உற்சாகம் கூடும்.

### விருச்சிகம்

மனதில் தைரியம், தன்னம்பிக்கை உத்வேகம் அதிகரிக்கும். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுத்து செயல்படுவீர்கள். கடனாக, கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடலாம். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். உறவினர்கள் வருகையால் உங்களின் சில பணிகளில் மாற்றங்களைச் செய்யலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு கூடும். செலவுகள் கட்டுக்குள் அடங்காமல் வரம்புமீறிச் செல்லும் என்பதால், சிக்கனமாக இருப்பது அவசியம். தகப்பனார், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், சகோதரிகள் வழியில் அலைக்கழிப்புகளைச் சந்திக்கலாம். அவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும். அரசியல்வாதிகள் சந்திப்பாலும், அரசாங்கத்திற்கு கட்டணம், வரி கட்டுவது போன்ற வகையிலும் பணம் கரையலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். இருந்தாலும் கோபம், வேகத்தை கட்டுப்படுத்தி பொறுமையாக செயல்பட வேண்டும். உழைப்பையும், வருமானத்தையும் பெருக்குவதில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வீட்டில் வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். திடீர் செலவுகள் நேரும். வீண் பயம் ஆள்கொள்ளும். பணவரவுகளைப் பெறலாம்.

### தனுசு

மனைவி, குழந்தைகள் வழியிலும், குடும்பத் தேவைகளை நிறைவேற்றவும் கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கலாம். பணவரவுகளைப் பெறலாம். எடுத்த காரியங்களைத் தங்கு, தடையின்றி, விறுவிறுவென முடிப்பீர்கள். ஆடை, ஆபரணங்கள், விலை உயர்ந்த பொருட்கள் சேரும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் அனுகூலம் உண்டு. வங்கிகளில் நிதியுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். அரசியல்வாதிகள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். நீண்ட தூர பயணங்கள் சந்தோஷம் தரும் வகையில் அமையும். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். பொறுப்புகளால் போராட்டமான நிலைமைக்கு ஆள்படலாம். ஓய்வெடுக்க முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகள் தொடர்ந்து கொண்டிருக்கும். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். தண்டச் செலவு நேரும். பக்தி நாட்டம் கூடும்.

### மகரம்

ஆறுதலான மாறுதலான அனுபவங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி அடைவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் ஏற்படலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். குதர்க்கமான பேச்சுக்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளுக்காக அலைச்சல் அதிகரிக்கும். அரசாங்கம், அரசியல்வாதிகள், அதிகாரிகள், தகப்பனார் தொடர்பான விடயங்கள் எல்லாம் சாதகமாக அமையும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களுக்காக சில உதவிகளைச் செய்வீர்கள். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தாய், தந்தை வழியில் உருவான அதிருப்தி விலகி பாசம் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். நீண்ட நாள் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். வாடகை வீட்டில் வசிக்கும் சிலர் வசதியான வீடுகளுக்கு மாறலாம். உத்வேகம், துணிவுடன் செயல்படுவீர்கள். மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவுவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

### கும்பம்

விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பல முறை அலையலாம். திட்டமிட்டபடி சில காரியங்கள் நடக்காமல் இழுத்தடிக் கலாம். ஊக்கம், உற்சாகமாக செயல்படுவீர்கள். எதிர்பாராத வகையில் பணவரவு களைப் பெறலாம். நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும். உருப்படியான வகையில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். மன உறுதி அதிகரிக்கும். துணிச்சலாகச் சில காரியங்களில் ஈடுபட நேரிடலாம். மாற்று மதத்தினர் மற்றும் மாற்று மொழி பேசுவோரால் அனுகூலம், ஆதாயம் பெறலாம். தேவையான பணத்தை சிரமப்பட்டு புரட்டிக் கொள்வீர்கள். விலை உயர்ந்த சில பொருட்களை குடும்பத்தினரின் கட்டாயத்தின் பேரில் வாங்கலாம். ஆடை, அலங்காரப் பொருட்கள் சேரும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். விருந்து, விசேஷங்கள், உறவினர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். பொழுதுபோக்கு விடயங்களால் மகிழ்ச்சி உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் உண்டு. இழுபறியாக இருந்த சில வேலைகளைக் கடும் முயற்சி எடுத்தாவது முடிப்பீர்கள். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளால் அலை யலாம். குடும்பத் தேவைகள், செலவுகள் அதிகரிக்கும். பணவரவு, காரிய வெற்றி உண்டு.

### மீனம்

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். சில வேலைகளைச் சிரமம் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உண்டு. ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். கணவன், மனைவி உறவில் திருப்தியற்ற நிலைமை காணப்படும். ஒருவரை ஒருவர் குறை சொல்லிக் கொண்டிருப்பதும் அதிகரிக்கும். தேக ஆரோக்கியமும் அவ்வப்போது பாதிக்கப்பட்டு, பிரச்சினைகளைச் சந்திக்கலாம். உடன் பிறந்த சகோதரர்கள், பங்காளிகள் வகையில் மனக் குறைகள் உண்டாகலாம். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அதிருப்திக்கும் ஆளாகலாம். அரசியல்வாதிகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கெடுபடிகளுக்கு ஆளாகலாம். எந்த விடயத்திலும் அவசரம் காட்டாமல் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். பொழுதுபோக்கு விடயங்கள், கேளிக்கை கொண்டாட்டங்கள் போன்ற வழிகளில் செலவுகள் அதிகரிக்கலாம். சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உத்தியோகம், நிலம், பூமி விவகாரங்கள், கட்டடப் பணிகள், கடன் விவகாரங்கள், பொலிஸ் தொடர்பான விடயங்களில் ஓரளவுக்கு அனுகூலம் உண்டு. நல்ல சிந்தனை, தெளிவான புத்தியுடன் செயற்படுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம் செலவு கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடுவுக்கு இந்தமாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்பட்டு விடும்

## முல்லைத்தீவு அரச அதிபர் தகவல்

ஒட்டுசுட்டான்,ஒக்.24

இந்த மாத இறுதிக்குள் கற்சிலைமடுப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ந.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கிராம அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் கூட்டம் ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார். மேலும் இந்தப் பகுதிக்கான வீதிகளைப் புனரமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உங்கள் எல்லோரையும் நான் பார்க்கும்போது நீங்கள் மக்களின் பிரதிநிதிகளாகச் செயல்படுவதைக் காணமுடிகின்றது. அதனால் நான் அனைத்துக் கிராம மக்களையும் சந்தித்தது போன்று மகிழ்ச்சி அடைகின்றேன். மக்களின் பிரதிநிதிகளாகச் செயல்படும் நீங்கள் மக்களுக்கான சேவைகளைத் திறமையாக மேற்கொள்வீர்களென நம்புகின்றேன். உங்களது சேவை மக்களுக்குப் பயன்பட வேண்டும். நீங்கள் எப்போதும் என்னைச் சந்திக்கலாம். உங்கள் தேவைகளை என்னிடம் கூறலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-341)

## முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு நாமல் ராஜபக்ஷ குழுவினர் விஜயம்

ஒட்டுசுட்டான்,ஒக்.24

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவரும் ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு நேற்று விஜயம் செய்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்தையன் கட்டு அ.த.க. பாடசாலை, முத்தையன் கட்டு தமிழ் கலவன் பாடசாலை ஆகிய வற்றுக்கு விஜயம் செய்த இவர்கள் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் முத்தையன் கட்டு அ.த.க.பாடசாலையின் கணனி அறையினை நாமல் ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

(க-15)

## கச்சார்வெளி, அரசர்கேணி, அல்லிப்பளையில் மக்கள் மீள்குடியமர நடவடிக்கைகள்

பளை,ஒக்.24

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கச்சார் வெளி, அரசர்கேணி, அல்லிப்பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களை இரண்டு வாரங்களுக்குள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

போரின் பின்னர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 9 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தற்போது கச்சார் வெளி, அரசர் கேணி, அல்லிப்பளை ஆகிய பிரதேசங்களில் மக்களின் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றம் செய்வதற்காக இப்பகுதியின் பொது வீதிகள் உட்பட மக்கள் குடியமரக் கூடிய இடங்களை இராணுவத்தினருடன் இணைந்து பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலர் உட்பட பலரும் சென்று பார்வையிட்டுள்ளார்கள்.

இப்பிரதேச மக்கள் இதுவரை காலமும் நலன்புரி முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்டு அவர்களது உறவினர்களது காணிகளில் குடிமனைகளை அமைத்து குடியேறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ள இக்குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-313,311)




### கணவனை இழந்த பெண்களுக்கு உதவி

மன்னார்,ஒக்.24

மன்னாரில் யுத்தத்தின் காரணமாகக் கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை மன்னார் சுகவாழ்வு மன்றம் வழங்கியுள்ளது.

மன்னாரில் யுத்தத்தின்போது கணவன்மாரை இழந்த பெண்கள் வறுமை நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டே இந்த வாழ்வாதார உதவிகளை மன்னார் சுகவாழ்வு மன்றம் வழங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக மாந்தை மேற்கில் இவ்வாறான 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்குத் தலா 50 நாட்டுக் கோழிக்குஞ்சுகளை மன்றத்தின் செயலாளர் எப்.எம்.டியூட்டர் வழங்கினார்.

(க)

### மாணவர்களுக்கு நிதியுதவி

வவுனியா,ஒக்.24

பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான வறுமை நிலையிலுள்ள வவுனியாவைச் சேர்ந்த மாணவர்களுக்கு வவுனியா லயன்ஸ் கழகம் நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

நான்கு மாணவர்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் இந்த நிதியுதவி வழங்கப்பட்டது. (க)

## ஒட்டுசுட்டான், கற்சிலைமடு வீதிகளுக்கும் கருவேப்பமுறிப்புக் குளத்திற்கும் விடிவுகாலம்

ஒட்டுசுட்டான்,ஒக்.24

ஒட்டுசுட்டான் சந்தியிலிருந்து முத்தையன் கட்டு இடது கரையைச் சென்றடையும் வீதியின் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வீதி நீண்ட காலமாகத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்திய மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது இதற்குக் கற்கள் பதிக்கப்பட்டுத் தார் ஊற்றும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதைப் போன்று கற்சிலைமடுவிலிருந்து பேராறு, பண்டார வன்னி ஆகிய கிராமங்கள் ஊடாக முல்லை வீதியைச் சென்றடையும் வீதியிலும் கிரவல் பரப்பித் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் மிக நீண்டகாலமாகத் தூர்ந்த நிலையிலுள்ள பெரும் கருவேப்பமுறிப்புக்குளம் சேவாலங்கா நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதனால் செய்கை பண்ணப்படாது கைவிடப்பட்ட காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(க-341)

## நிரந்தரக் கட்டடம் உள்ள போதிலும் தனியார் கட்டடத்தில் இயங்கும் முன்பள்ளி

வட்டக்கச்சி,ஒக்.24

கரைச்சிப் பிரதேச சபையால் நடத்தப்படும் தூயமணி முன்பள்ளி தற்போது தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.

இந்த முன்பள்ளிக்கென நிரந்தரக் கட்டடம் உள்ளபோதும் தொடர்ந்து தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருவதால் இங்கு கல்வி பயிலும் சிறார்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

சுமார் 60 சிறார்களுக்கு மேல் இந்த முன்பள்ளியில் கல்வி கற்று வருகிறார்கள். ஆனால் தற்போது இந்தப்பள்ளி இயங்கும் கட்டடத்தில் போதிய இடவசதியில்லை. இதனால் கல்விகற்கும் சிறார்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த முன்பள்ளிக்கென நிரந்தரக் கட்டடம் உள்ளபோதிலும் இதில் கரைச்சிப் பிரதேச சபையின் சித்த ஆயுள்வேத வைத்தியசாலை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(க-450)

## சரியான முறையில் பட்டியல்கள் வழங்கப்படாமையால் விதை நெல் விநியோகத்தில் தாமதம்

ஒட்டுசுட்டான்,ஒக்.24

கமக்கார அமைப்புக்களால் சரியான முறையில் பட்டியல்கள் வழங்கப்படாமையினாலேயே விதை நெல் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாக ஒட்டுசுட்டான் விவசாயப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

காலபோக நெற்செய்கைக்கான விதைநெல் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. முதற்கட்டமாக விதைநெல் வழங்கப்பட்டபோது தவறவிடப்பட்ட விவசாயிகளுக்கு இதனை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கற்சிலைமடு, பேராறு போன்ற பகுதிகளில் 90 வீதமான வயல்களில் நெல்விதைப்பு வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. இதே வேளை விதைநெல் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து மாவட்ட உயர் அரச அதிகாரிகள் உடனடியாக இதனை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-341)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மேட்டுப்பயிர்ச் செய்கை

ஒட்டுசுட்டான்,ஒக்.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடி, மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களில் மேட்டுப் பயிர்ச் செய்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் இரண்டாம் கட்டமாக 6022 ஏக்கர் நிலப்பரப்பில் மேட்டுப் பயிர்களைச் செய்கை பண்ணுவதற்காக விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நிலக்கடலை, உழுந்து, பயறு, சோளம், குரக்கன், மிளகாய் ஆகியவற்றின் விதைகளே வழங்கப்பட்டு வருகின்றன.

கமக்காரர் அமைப்போ அல்லது கிராம அபிவருத்தி அமைப்போ விதைகள் தேவைப்படும் விவசாயிகளின் பட்டியல்களைத் தவறாது ஒட்டுசுட்டான் பிரதேச விவசாய உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (க-341)

## மீள்குடியேறிய மக்களுக்குப் பாரபட்சமின்றி உதவிகள் சென்றடைய வேண்டும்

### கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர்

ஒட்டுசுட்டான்,ஒக்.24

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்குப் பாரபட்சமின்றி உதவிகள் சென்றடைய வேண்டும் எனத் தெரிவித்திருக்கின்றார் கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ.தனபாலசிங்கம்.

தற்போது மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்களுக்கான உதவிகள் வந்த வண்ணமே உள்ளன. இவை உரிய மக்களைச் சென்றடைந்து அவர்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டும். இதற்கு இப்பிரதேசத்தில் இயங்கும் பொது அமைப்புக்கள் துரிதமாகவும், பாரபட்சமின்றியும், பரந்த மனப்பாங்குடனும் செயற்பட வேண்டும்.

உதவி வழங்கப்படுவோர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல்கள் உரியவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அத்துடன் உதவி பெறும் மக்களைத் தெரிவு செய்யும்போது கிராம அலுவலரின் ஆலோசனை பெறப்படல் வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-341)



நாமல் ராஜபக்ஷ எம்.பி.தலைமையிலான குழுவினரின் கிளிநொச்சி விஜயத்தின்போது மாணவி ஒருவருக்கு நாமல் ராஜபக்ஷ பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: கிளிநொச்சிச் செய்தியாளர்)

## கிளிநொச்சி நகரில் வீழ்ந்து கிடக்கும் நீர்த்தாங்கி விரைவில் புனரமைக்கப்படும்

### — நேரில் பார்வையிட்ட நாமல் உறுதிமொழி —

கிளிநொச்சி,ஒக்.24

கிளிநொச்சி நகரில் யுத்தத்தால் முற்று முழுதாகச் சேதமடைந்த நீர்த்தாங்கியை புனரமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சி நகரப்பகுதியில் சேதமடைந்த நிலையில் வீழ்ந்து கிடக்கும் நீர்த்தாங்கியைப் பார்வையிட்டார்.

[illegible] நீர்வடிகால் திணைக்கள அதிகாரிகளுடன் நாமல் ராஜபக்ஷ ஆராய்ந்தார்.

அதன் பின்னர் சென் திரேஸா மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற சாரணர் தின நிகழ்வில் அவர் பங்கு பற்றினார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்குச் சென்ற அவர் ஐந்து பாடசாலைகளுக்குக் கல்விசார் உபகரணங்களையும் தளபாடங்களையும் அந்த அந்தப்பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

மத்திய கல்லூரிக்குத் தளபாடங்களையும் அக்கராயன் அ.த.க.பாடசாலை, ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு கணனிகளையும் கனகபுரம் ம.வி.க்கு விஞ்ஞான உபகரணங்களையும் புனித திரேஸா பாடசாலைக்கு நூல்களையும் நாமல் ராஜபக்ஷ வழங்கினார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு நாமல் சென்ற சமயம் அங்குள்ள இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள பரவிபாஞ்சான் பிரதேச மக்கள் அவருடன் கலந்துரையாடினர்.

தமது பிரதேசத்தில் மீள் குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும் என அவர்கள் கோரினர்.

உடன் நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

(ஒ-ஐ-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kalaimagal International College

கலைமகள் சர்வதேச கல்ஹூரி 2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து வகுப்புக்களுக்கும் விண்ணபப்பபடிவங்கள் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் உள்வாங்க உள்ளதால் உங்கள் சிறார்களையும் எமது கல்லூரியில் இணைத்துப் பயன்பெற அனுமதிக்கு முந்துங்கள்.

## எமது சிறப்பான செயற்பாடுகளாவன



- ★ முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த)வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை. (English Medium)
- ★ Play Group முதல் Grade-05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade-6 முதல் G.C.E. (A/L) வரை இலங்கை பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை
- ★ ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- ★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ★ பிரத்தியேக சீருடை
- ★ சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- ★ கணனி ஆய்வுகூடம்
- ★ விஞ்ஞான ஆய்வுகூடம் ★ நூலகம்
- ★ சாதாரண மக்களும் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த கட்டண வசதி
- ★ தமிழ்,சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- ★ அரச பாடசாலைகளின் நேரசூசியை பின்பற்றும் கல்விக்கொள்கை.
- ★ கலை, கலாசாரம், விளையாட்டு,நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
- ★ மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா,கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி, கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் இக்கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த),வரையிலான வகுப்புக்கள் உள்வாங்கப்பட்டும் உள்ளன. ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை, கொடிகாமம், நல்லூர் கிளைகளில் Play Group L.K.G, U.K.G போன்ற வகுப்புக்களை மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக்கிளைகளில் இணைந்துகொள்ளும் சிறார்கள் தமது மேல்வகுப்புகளுக்கு கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வட மாகாண செயற்திட்டம் காணப்படுகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் 2011ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 15 முதல் உள்வாங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் உங்கள் பிள்ளைகளுக்கான அனுமதி யைப்பெற, விண்ணப்பங்களைப்பெற்று, சமர்ப்பிக்க தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:


**The Director :**

**Kalaimagal International College**

Church Lane, Kulappiti Junction. Kokuvil.

தொ.பே: 021 3215785, 0778834592.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் இராஜரட்ணம் செந்தில்பிரகாஷ்

(ஊழியர், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம்)

மலர்வு
19.05.1981

உதிர்வு
10.09.2010

கடந்த 10.09.2010 அன்று சிவபதமடைந்த அன்புத்தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

டுவன் சந்தி.

(சி/572129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய அரசின் புதிய திருத்தச் சட்டமூலத்தால் உண்மையான அகதிகளுக்கே பெரும் பாதிப்பு

## கனேடிய அகதிகள் பேரவையின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

''கனேடிய நாடாளுமன்றப் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள சட்டவிரோத ஆள் கடத்தல்கள் தொடர்பான புதிய திருத்தச் சட்டமூலத்தினால், உண்மையான அகதிகளுக்கே பெரும் பாதிப்பு ஏற்படும். மாறாக அந்தச் சட்டமூலம் ஆட்கடத்தல் காரர்களுக்குத் தடையாக அமையப் போவதில்லை.''

-இவ்வாறு கனேடிய அகதிகள் பேரவையின் தலைவர் வன்டா யமாமோட்டோ தெரிவித்துள்ளார்.

கனடாவிற்கு வருகைதரும் சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான புதிய சட்டமூலம் கடந்த வியாழக்கிழமை கனேடிய நாடாளுமன்றப் பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் புதிய சட்டமூலம் தொடர்பாக கனேடிய ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கனடாவில் மேற் கொள்ளப்படுகின்ற சட்டவிரோத ஆள் கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்காக கனேடிய நாடாளுமன்றப் பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இப்புதிய திருத்தச் சட்டமூலம் எந்தவொரு வகையிலும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போவதில்லை.

தாய்நாட்டில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாதவர்கள் பாதுகாப்பான வேறு நாடுகளுக்குப் புகலிடம் கோரிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். அவர்கள் அதற்காக சட்டவிரோத ஆட்கடத்தல் காரர்களின் உதவியைக் கூட நாடுவார்கள். ஏனெனில், சொந்த நாட்டைவிட்டு எப்படியாவது வெளியேறி தமது உயிரைக் காப்பாற்றவேண்டிய அவசியமும் அவர்களுக்குள்ளது.

இந்தப் புதிய சட்டமூலம், புகலிடம் கோரி வருபவர்களுக்குப் பாரிய தடங்கலாக இருக்கும். அத்துடன் ஆட்கடத்தல்காரர்களுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்யும். கனடாவிற்கு சட்ட விரோதமான முறையில் அகதி அந்தஸ்துக் கோரி வருபவர்களை ஒரு வருடம் வரை தடுப்பு முகாமில் வைத்திருக்கலாம் என்றும் இப்புதிய திருத்தச் சட்டத்தில் கூறப்படுகின்றது.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் அகதி அந்தஸ்துக் கோரி வருபவர்களுக்குக் கனடாவில் குடியேறுகின்றமைக்கு அல்லது குடும்பத்தினரைக் கனடாவுக்கு அழைக்கின்றமைக்கு ஐந்து வருடகால தகைமை காண் காலம் வழங்கப்படும் என்றும் இத்திருத்தச் சட்டமூலத்தில் கூறப்படுகிறது.

குடியேறு கின்றமைக்குத் தகைமை அற்றவர்கள் என்று இனங் காணப்படுகின்றவர்கள் தமது சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பப் படுவார்கள். எனவே இத்திருத்தச் சட்டமூலம் அகதி அந்தஸ்துக் கோரி வரும் குழந்தைகளைப் பாரதூரமாகப் பாதிக்கும்- இப்படி கனேடிய அகதிகள் பேரவையின் தலைவர் வன்டாயமா மோட்டோ சுட்டிக் காட்டியுள்ளார். (சி)

# இலங்கை இனி தாக்குதல் நடத்தாது இந்தியக் கடற்படை உறுதியளிப்பு!

## இராமேஸ்வரம் மீனவரின் போராட்டம் வாபஸ்

இராமநாதபுரம், ஒக். 24

இனிமேல் இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தாது என இந்தியக் கடற்படையினர் உறுதியளித்ததால் இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற போராட்டத்தை வாபஸ் பெற்று நேற்று முதல் கடலுக்குச் செல்கின்றனர்.

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலால் தங்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லை எனக்கூறி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் கடந்த 8ஆம் திகதி முதல் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்து காலவரையறையற்ற போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கைக் கடற்படையிடமிருந்து தங்களைப் பாதுகாக்க இந்தியக் கடற்படை முன்வந்தால் மட்டுமே கடலுக்குச் செல்லத் தயார் என அறிவித்தனர்.

இதை வலியுறுத்தி கடந்த 11 இல் கச்சதீவு நோக்கிப் படகு ஊர்வலம் நடத்தவும் தயாராகினர்.

இதைத்தொடர்ந்து மீன்வளத் துறை இயக்குநர் செல்லமுத்து தலைமையில் இராமநாதபுரத்தில் மீனவர்களுடன் சமாதானக் கூட்டம் நடந்தது. எங்கள் பாதுகாப்பை கடற்படை உறுதி செய்ய வேண்டும் என்ற கருத்தையே மீனவர்கள் மீண்டும் வலியுறுத்தினர்.

தொடர்ந்து, இலங்கைக் கடற்படையிடம் பேச்சு நடத்த, இந்தியக் கடற்படை ஆயத்தமானது. அதன் கொமாண்டோ அகர்வால் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இதில் சுமுக முடிவு ஏற்பட்டது. அதன்படி நேற்றுமுன்தினம் இராமநாதபுரத்தில் நடந்த கடலோரப் பாதுகாப்புக் கூட்டத்தில் பங்கேற்ற மீனவர்களிடம், இனி இலங்கைக் கடற்படையின் தாக்குதல் இருக்காது என உறுதியளிக்கப்பட்டது. இதற்கு உடன்பட்ட மீனவர்கள், நேற்று முதல் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

தமிழ்நாடு விசைப்படகு மீனவர்கள் சங்கப் பொதுச் செயலர் போஸ் கூறுகையில்-கடற்படை அதிகாரிகள் உறுதியளித்ததால் போராட்டத்தை வாபஸ் பெற்று கடலுக்குச் செல்கிறோம் - என்று கூறினார். (சி)



நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் அண்மையில் ஆசிரியர் தின விழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பாடசாலை ஆசிரியை திருமதி க.ஆனந்திக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (167)

## வாதரவத்தை விக்கினேஸ்வராவின் நூற்றாண்டு நிறைவு நாள் நாளை

கொழும்புத்துறை, ஒக். 24

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள் பாடசாலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராச லிங்கம், மாந்தை மேற்கு உதவி அரச அதிபரும் பழைய மாணவருமான கு.பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிழ்வில் முன்னாள் அதிபர்கள் கௌரவிப்பு, நூற்றாண்டு மலர் வெளியீடு, சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் என்பன இடம் பெறும். (204-135)

## 11 நிமிடங்களில் பதினொரு லட்சம் மரக்கன்றுகள் நாட்டத் திட்டம்

கொழும்பு, ஒக். 24

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் மற்றும் பதவியேற்புத் தினம் ஆகிய வற்றை முன்னிட்டு 11 நிமிடங்களுக்குள் 11 லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குச் சுற்றாடல் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சுற்றாடல் அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா இதனைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 15ஆம் திகதியன்று நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றும்,

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 50 ஆயிரம் மரக்கன்றுகளை நடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு இந்திய நாடாளுமன்றம் அழைப்பு

கொழும்பு, ஒக். 24

இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு இந்திய நாடாளுமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய நாடாளுமன்ற ராஜ்சபைத் தலைவர் மொஹமட் அன்சாரி, இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் மீரா குமார் ஆகியோர் இணைந்தே இந்த அழைப்பை விடுத்துள் ளனர்.

இந்த அழைப்பு சம்பந்தமான கடிதத்தை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக்கே காந்த கடந்த வியாழக்கிழமை சபாநாயகரிடம் கையளித்துள்ளார்.

அதேவேளை, சமல் ராஜபக்ஷ இந்த அழைப்பை ஏற்றுள்ளார் என்றும், அதன்படி அவர் இந்தியா செல்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)




சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தினரின் ஏற்பாட்டில் வெள்ளைப்பிரம்பு தினம் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் இன்ரறக்ட் கழகத்தினருடன் சுன்னாகம் வாழ்வகப் பிள்ளைகளும் கலந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். (204)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு செயலமர்வு

பருத்தித்துறை, ஒக். 24

பயிற்றப்படாமல் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி செயலமர்வு விரைவில் வடமராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 5 நாள்கள் புலோலி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. பயிற்றப்படாமல் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் இச்செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (204-190)

## கரையொதுங்கும் படகுகளில் ஊடுருவலா?

# இலங்கையில் காணாமல்போன படகுகள் விவரம் சேகரிக்கிறது இந்தியத் தூதரகம்

இராமநாதபுரம், ஒக். 24

தமிழகக் கடலோரப் பகுதிகளில் அடிக்கடி மர்மப் படகுகள் வந்து நிற்பதும், படகுகளில் வந்த நபர்கள் தப்பிச் செல்வதும் மர்மமாக உள்ள நிலையில், ஊடுருவலாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் இலங்கையில் காணாமல் போன படகுகளின் விவரங்களை தூதரகம் மூலம் இந்தியப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

இராமேஸ்வரம் கடற்பகுதியில் இலங்கைப் படகுகள் கரை ஒதுங்குவதும், படகில் வந்தவர்கள் தலை மறைவாகுவதும் தொடர்கிறது. படகுகளில் வந்தவர்கள் யார் என்ற சந்தேகம் வலுத்துள்ள நிலையில், இலங்கை மன்னாரைச் சேர்ந்த பைபர் கிளாஸ் படகு ஒன்று வடகாடு கடற்கரையில் கடந்த புதனன்று ஒதுங்கியது. இதில் வந்தவர்கள் யார் எனத் தெரி யாமல் பொலிஸாரும் திணறு கின்றனர்.

படகுகளில் வந்தவர்கள் யார் என அறிவதற்காக, இலங்கையில் காணாமல் போன படகுகளின் விவரங்களைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் கேட்டுள்ளனர். இலங்கையில் காணாமல் போன படகுகள், இங்கு கரை ஒதுங்கிய படகுகள்தான் எனத் தெரிய வந்தால், தமிழகத்திலிருந்து தப்பி ஓடிய அகதிகள் இலங்கையிலிருந்து படகுகளைத் திருடி வந்து தப்பியிருக்கலாம் எனப் புலனாய்வு துறையினர் சந்தேகிக்கின்றனர். (சி)

# முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை மு.கா. உருவாக்கப்பட்டதன் மூலம் தளர்ந்தது

## அக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதன் மூலம் முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை இல்லாமல் செய்யப் பட்டுவிட்டது என முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள பொது நலவாய நாடுகள் நாடளுமன்ற சங்கத்தின் பிரித்தானிய தூதுக் குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கண்டவாறு தெரிவித்தது.

இச்சந்திப்பின்போது மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யுத்த காலத்தில் ஒரு வகையான பங்கை வகித்தது. யுத்தத்துக்குப் பின்னரான தற்போதைய சூழ் நிலையில் இன்னொரு வகையான பங்கை வகிக்கின்றது.

இலங்கையில் முஸ்லிம் பயங்கரவாத இயக்கங்கள் செயற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படும் பிரசாரங்கள் முற்றிலும் பொய்யானவை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதன் மூலம் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட விருந்த முஸ்லிம் இளைஞர்களை சமூக நீரோட்டத்திற்குக் கொண்டு வர முடிந்தது.

- இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்தது.

அத்துடன்,

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பங்கு தொடர்பாகவும், வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் இன்றைய நிலை தொடர்பாகவும் இச் சந்திப்பின்போது பிரித்தானியத் தூதுக்குழுவினருக்கு விளக்கப் பட்டது.

**மு.கா. - அரசு பேச்சு ஒத்திவைப்பு**

உத்தேச உள்ளூராட்சிமன்ற திருத்தச் சட்டமூலம் தொடர்பாக அரச தரப்பினருடன் தமது கட்சி நேற்றுமுன்தினம் பேச்சு நடத்த விருந்த நிலையில், அந்தப் பேச்சு எதிர்வரும் வாரம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடகச் செயலாளர் ஹசன் அலி தெரித்தார்.

இலங்கை வந்துள்ள பொது நலவாய நாடாளுமன்ற சம்மேளனத்தின் பிரித்தானியக் கிளை அலுவலர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முன்தினம் சந்தித்த தன் காரணமாகவே அரசுடனான பேச்சை அடுத்த வாரம் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30.11.1930



மறைவு
13.11.2000

இணுவிலைச் சேர்ந்த

## அமரர் ஈஸ்வரிஅம்மா மயில்வாகனம்

திதி: துதியை 24.10.2010

அம்மா! அம்மா தசம் ஒன்று ஆனாலும்
உம்மை மறவோம் அம்மா
உமது ஆத்மா சாந்தி பெற
தினமும் வணங்குகின்றோம் அம்மா.

அமரர்களான உடன் பிறப்புக்கள் தளையசிங்கம், ஐஸ்வரியம்மா, கனகம்மா, சின்னம்மா, முத்துலிங்கம் அனைவருடனும் பரலோகத்தில் இணைந்திருப்பீர்.

அன்பு மகள்: இ.தேவநாயகி
மருமகன்: இ.கி.செல்வநாயகம்,
தம்பி: செல்வரத்தினம்,
பேர்த்தி: கி.ரதீஸ்வரி.

14, சிவகாமி அம்மன் கோயில் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

# பரிசளிப்பு விழா

வலி.வடக்கு,ஒக்.24

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் நுழைவாயில் திரை நீக்கம் மற்றும் மேலைத்தேய இசை வாத்திய குழு அறிமுக நிகழ்வும் நாளை திங்கள் பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையில் அதிபர் க.காராளசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார்.

விழாவின் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

(204-86)


# காணி விற்பனைக்கு

கொக்குவில் தேவாலய எதிர் ஒழுங்கை, முதலி கோயிலடி அருகில் 2 பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
ஏ.தேவஅருள்ராஜா
தொ.பேசி: 0213210917, 0778893655

(104979)


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி (C.T.B) கமலாதேவி



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலாதேவி (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆறுமுகம் வீதி, கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கந்தரோடை சங்கம் புலவம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
021 224 0403

தகவல்:
மருமகன்- செ.அரியதாசன் (வாசன்),
மகன்- க.கரிகாலன்.

(சி/572124)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் யதீஸ் (பிரபா)



மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் யதீஸ் 06.10.2010 அன்று டோகாவில் அகாலமரணமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - ரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகனும், கிருஷ்ணமீனா, யசோதரன், யதுஜன், டக்சனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நந்தகுமாரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக உடுவில், மல்வம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்வம்,
உடுவில்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(104993)



# மரண அறிவித்தல்

## நடராசா சிதம்பரம் (பாக்கியம்)

பொன்னாவளை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிதம்பரம் (பாக்கியம்) 21.10.2010 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், அருணாசலம்-தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும், தவமணி (கனடா), தனராசசிங்கம், லோகேஸ்வரி, சுந்தரராஜா (லண்டன்), தவநாயகி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாணிக்கவாசகர் (கனடா), வசந்தகோகிலம், காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் வளர்மதி (லண்டன்), தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஸ்ணாம்பிகை (கனடா), கிருஸ்ணதேவி (லண்டன்), மஞ்சுளா (லண்டன்), தயாபரன் (கனடா), கலாபரன் (கனடா), நேசராணி (கனடா), நெரஞ்ஜனி (கனடா), வாகீசன் (லண்டன்), வாசுகி (நோர்வே), தனுஜா, தமிழழகன்(லண்டன்), கருணைதேவன் (கனடா), ஜெயமலர் (லண்டன்), சிவமங்களா (B.A), சந்திராதேவி (லண்டன்), சர்மிளா (B.F.A), சிலம்பரசன், தயானந்தன், சுதானந்தன் (லண்டன்), ஐங்கரன், ஞானகரன், திவாகரன், ஜனனி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாவளை,
களபூமி, காரைநகர்,
தொ.பே: 0214905909

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 துகளில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் சிறுகதைகளை எழுதி வந்த ரஞ்சகுமார் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது சிறுகதைத் தொகுதி 'மோக வாசல்' 1989 இல் வெளிவந்தது.

இவரது சிறுகதை 'காலம் உனக்கொரு பாட்டெழுதும்' இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் இரண்டாவது தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவரது சிறுகதைத் தொகுப்பு 'மோகவாச'லில் இடம்பெற்றுள்ள 'மோகவாசல்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.



# மோகவாசல்

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 170

தேவர்கள் இறைவனிடம் ஓடினார்கள்.

விசுவாமித்திரனின் தவவலிமையினால், அவர்களது தேஜஸ் குன்றிக் கொண்டே போயிற்று.

இறைவனின் இதழ்களில் குமிண்சிரிப்பு. கண்களில் விஷக்கிறக்கம்.

"தேவ தேவா!.... எமைக் காத்தருள்க..." என தேவர்கள் இறைவனிடம் இறைஞ்சிய ஒலியில் சப்த சமுத்திரங்களின் குமுறல்களும் தோற்று அடங்கின.

இறைவன் மதனை அழைத்துவரப் பூதகணங்களை ஏவினான்,

கரும்பு வில்லும் பஞ்ச மலர்களும் மணம் பரப்ப மதனும், அவனுடன் குனிந்த சிரத்துடன் ரதியும் வந்தனர்.

இறைவன் இதழ்களில் குமிண்சிரிப்பு மேலும் சற்றே விரிந்தது.

ரதி நடுங்கினாள். தன் நாதனுக்காக ஏங்கினாள்.

விசுவாமித்திரன் சினத்தை ஈரேழு உலகமும் அறியும்.

அவனது தவத்துக்குப் பெண்களால் குந்தகம் ஏற்பட ஏற்பட அவனது கோபாக்கினி கொழுந்துவிட்டு ஜுவாலித்தது.



தேவர்கள் விடாப்பிடியாக முயன்றனர். ரிஷிகள் அதற்கு நெய் வார்த்தனர்.

சகல சம்பத்துகளும், நால்வகைச் சேனையும், விசாலித்த தேசத்தையும் உடைய கௌசிகராஜன் பிரம்ம ரிஷி எனப் பட்டமும் பெற்று விடுவானாகில்....

வசிஷ்டன் கர்வபங்கம் செய்யப்படுவான் என அவர்கள் ஏங்கினர்.

பெண்களால் உலகில் கலகம் விளையும் என்பது எவ்வளவுதூரம் பொருந்தி வருகிறது. என்ன தான் ஒரு பசுவேயாயினும், சபலையும் ஒரு பெண்ணினம் அன்றோ? அவளை மோகித்து, வசிஷ்டனிடம் இச்சித்ததனால் அல்லவா கௌசிகராஜன் கடும் விரதம் அனுஷ்டிக்க விதியுண்டாயிற்று.

விசுவாமித்திரனுக்குப் பெண்களை எண்ண எண்ண சினம் பொங்கிற்று.

தேவர்களும் சளைத்து விடாமல் அப்சரஸ்களை மாறி மாறி ஏவினர். முனிவனும் தன்வயமிழந்து சபித்தல் தொடர்ந்தது. நீண்ட நெடுங் காலமாக தபஸ் இருந்து தான் பெற்ற ஆற்றல் களையெல்லாம் விசுவாமித்திரன் நொடிப் பொழுது களில் இழந்தான்.

மீண்டும் பூரக ரேசக முதலிய அட்டவாயுக்களையும், ஐம்புலன் களையும் மிகமுயன்று அடக்கி நிர்ச்சிந்தையாக லயிக்க முயன்றான்.

தேவர்கள் மறுபடி மறுபடி இறைவனிடம் ஓடினர்.

இறைவன் மேனகையை அழைத்துவர பூதகணங்களை ஏவினான்.

வனத்தில் வசந்தம் பூத்துக் குலுங்கிற்று. மலர்களின் நறு மணமும், தேறலின் போதையும் தித்திப்பும் எங்கும் நிறைந்தன. காட்டுப்பட்சிகளில் உல்லாச மிகுந்த கூவல் ஒலிகளும், வனவிலங்குகளின் வேட்கை ததும்பும் கனைப்பு ஒலிகளும் எங்கும் எதிரொலித்தன.

முனிவனது சிந்தை தடு மாறிற்று. மதன் தருணம் அறிந்து குறிபிசகாமல் கணை தொடுத்தான்.

கூடவே, மின்னல் ஒன்றைப் பற்றியவளாய் மேனகை பூமி யில் குதித்தாள். அவளது தேகத் தைத் தழுவிய காற்றைச் சுவா சித்ததுமே, முனிவன் சிலிர்த்தான்.

(20 ஆம் பக்கம் பார்க்க.....)

## அன்றும் இன்றும்

நான்
நடந்து கொண்டிருக்கிறேன்!
முட்கள் விரவிய
பாதைகளின் வழியேதான்!
எனதுள்ளும்
புதுவிதமாய்க் கனவுகள்
முகிழ்த்திருக்க
பயணமது நீள்கிறது!
இடையிடையே
அமானுஷ்ய ஒலிகள்
மர்மமாய்த் திகிலூட்ட,
அதிர்தலுறும் மனசை
இறுக்கிப் பிடித்தபடி
நடந்து கொண்டிருக்கிறேன்!
கற்பனையின் தித்திப்பில்
காற்றில் அலைதலுறும்
மனசதனை ரசித்தலுற்று
என் மனசும் மறுபுறமாய்
என் மகிழ்வில்
லயிக்கிறது!
காற்றில் சுகந்தமது
வருடும் புலரிபொதிலும்
ஏதோ அச்சமது
சகுதியாய்த் திகிலூட்டிக்
கனதியாய்த் தொடர்கிறது!
காலமது மாறிடினும்
எமதுலகமிது இன்னும்
பயங்கரம்தான்
என்பதுவாய்
ஏதோ சேதியொன்று
செவிகளிலே ஒலிக்கிறது!

— தீபகண்யா

## ஏதற்காக நாம் படித்தோம்?

ஏதற்காக நாம் படித்தோம்
வேலை தேடி நாளும் நாளும்
அலையும் போதெல்லாம் - மனதுள்
தினம் கேட்கும் கேள்வியிது
பட்டமளிப்புக்கள் நடந்துமென்ன
படித்ததிற்கு இங்கு வேலையில்லை
எம்மை நம்பியிருக்கின்ற
அன்னைக்கு தங்கைக்கு
என்ன பதில் நாம் கூற
கண்ணீர் மட்டும் விடையாக
அங்கே இன்று கூட்டமாம்
இங்கே இன்று பதிவுகளாம்
எங்கே போயின எல்லாமே
வாக்குறுதிகள் மட்டும் நிறைந்தனவே
வாழ்வின்றுவரை மாறவில்லை
படிக்காதவன் உழைக்கிறான்
பாங்காய் வாழ்வு நடத்துகிறான்
படித்த நாமோ பஸ்ஸூக்கும் காசில்லா
பிச்சைக்காரராய்
திருமணம் முடித்தும் இங்கு
குழந்தை பெற்றும் வேலையில்லை
நாளை நம் குழந்தை வளர்ந்துவந்து
எங்கே வேலை என்று கேட்டால்
என்ன பதிலை நாம் கூற
ஏன் இந்தப் பாராமுகம்
எங்கள் குரல் கேட்கிறதா
வேலை தேடி அலைவதற்காகவா
அலைந்தலைந்து நாம் படித்தோம்
செல்வாக்கும் அதிகாரமும்
வேலை செய்யும் இடத்தில்
எப்படி நாம் வேலை தேட
அதுவும் எமக்குத் தெரியவில்லை.

*(ஒரு வேலையற்ற பட்டதாரியின் உள்ளக் குமுறலின் குரல்)*

வேல்நந்தன்.

# கைகேயி மறதிக்காரியா?




தூயவளாகிய கைகேயியின் மனதைத் தீயவளாகிய கூனி திரித்தாள். இராமன்மீது கூனி கொண்டிருந்த கோபம் (அல்லது பகை) கைகேயியின் மனதை மாற்றச் செய்தது.

*"அரக்கர் பாவமும்*
*அல்லவர் இயற்றிய அறமும்*
*துரக்க, நல் அருள் துறந்தனன்*
*தூ மொழி மடமான்"*

என இதனை நியாயப்படுத்தும் கம்பன், கைகேயியைத் தூயவளாகவே காட்டுகிறான்.

மனம் திரிந்த கைகேயி, கூனியின் சொற்களே சரணாகதி என நம்பினாள். கைகேயியின் மனம் திரிபடைவதற்கு முன்னால் அவளைக் கெஞ்சிக் கொண்டிருந்த கூனி, அவள் தன் வழிக்கு வந்து விடவே விஞ்சிவிடுகிறாள். ''என் உரை தலை நிற்பின் உலகம் ஏழும் ஏழும் உன் ஒரு மகற்கு ஆக்குவென் என்றாள்''

சம்பராசுர யுத்தத்தில் தசரதனுக்குத் தேர்ச் சாரதியாக இருந்தவள் கைகேயி. அப்போது ஓர் அபாயத்தில் தசரதனை மீட்டமைக்காக அவன் உவந்து அவளுக்கு இருவரம் பெறுக எனக் கூறினான். அவளோ வேண்டும் வேளையில் அவற்றைக் கேட்பதாகச் சொன்னாள். இந்தச் சம்பவங்களை நினைவுபடுத்திக் கூறிய கூனி, 'வரம் கேட்பதற்குரிய தருணம் இதுவே. வரத்தைக் கேள்' எனப் பணிக்கிறாள். வரத்தினுடைய வடிவத்தையும் தானே கற்றுக் கொடுக்கிறாள்.

*"இரு வரத்தினில் ஒன்றினால்*
*அரசு கொண்டு, இராமன்*
*பெரு வனத்திடை ஏழு - இரு*
*பருவங்கள் பெயர்ந்து*
*திரிதரச் செய்தி, ஒன்றினால்*
*செழு நிலம் எல்லாம்*
*ஒரு வழிப்படும் உன் மகற்கு*
*உபாயம் ஈ.்து என்றாள்"*

இப்போ கைகேயி தசரதனிடம் வரம் கேட்கும் சந்தர்ப்பம் வருகிறது. கைகேயி தசரதனிடம் இந்த வரங்களை அப்படியே கேட்கவில்லை. ஓர் அம்சத்தைக் குறைத்தே கேட்கிறாள்.

''ஏய வரங்கள் இரண்டின், ஒன்றினால் என் சேய் அரசு ஆள்வது; சீதை கேள்வன் ஒன்றால் போய் வனம் ஆள்வது...

இது தசரதனிடம் கைகேயி கேட்ட வரம். கூனி சொல்லிக் கொடுத்த விடயங்களை மனத்திருத்தி வரங்களைக் கேட்டாள். ஆயினும், வனம் ஆள்வதற் கான காலம் பதிநான்கு ஆண்டுகள் (ஏழிரு பருவங் கள்) என்பதை அவள் கேட்கத் தவறிவிட்டாள்.

''இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ?'' என்றெல்லாம் கதை அளந்த கைகேயி தன் வெறுப்பை வெளிப்படுத்தும் முகமாகச் ''சீதை கேள்வன் (கணவன்)'' என்றே இராமனைக் குறித்தாள். தான் இராமன் மேல் கொண்டிருந்த சினத்தின் காரணமாக வரம் கேட்கும் போது வரையறையைச் சொல்ல மறந்து விடுகிறாள்.

சினம் ஏற்படுகின்றபோது இவ்வாறான மறதி ஏற்படுவதும் இயல்புதானே. சினத்தைச் 'சேர்ந்தாரைக் கொல்லி' என வள்ளுவர் உருவகப்படுத்துகிறார்.

தான் மறந்துவிட்ட செய்தியை, இராமனுக்குப் பணிப்புரையாக விடுக்கும்போது கைகேயி சேர்த்துக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

''ஏழ் இரண்டு ஆண்டின் வா என்று இயம்பினன் அரசன் என்றாள்''

தசரதன் கூறாத செய்தியையும் சேர்த்துத் - தந்தை கூற்று என்று கூடக் கூறாது, - அரச கட்டளை என்ற பாணியில் கைகேயி கூறுகிறாள். இது அவளது இராஜதந்திரத் திறனால் வந்த வாய்ச்சொல்.

எதிர் மனப்பாங்குடன் கருமங்கள் ஆற்றுவோருக்கு, சரியான திட்டமிடலின்றி வேலைகள் புரிவோருக்கு மறதி ஏற்படுவது இயல்பானதே.

*****



ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக் கப்பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. தொ.பே:- 0776751649

வசீகரத் தோற்றத்திற்கு!

## சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.

சந்தனாலேப

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250. (இ/555203)

**மீண்டும் யாழ் நகரில் | NOV 08ம் திகதி**

இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியரின்

**Diploma in Mobile Phone Repairing**

**Hardware**

- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கழற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

**Free!** Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

**Rs.8750/=**

**Software** Setup Installation, Unlocking, Flashing

Jaf, P-Key, SE tool, NSpro, Infinity, Pin Finder, Spiderman, MX-Key.

**4 DAYS COURSE**

| MON | TUE | WED | THU |
|---|---|---|---|
| 8 NOV | 9 NOV | 10 NOV | 11 NOV |

10.00 AM - 3.00 PM

வகுப்பு நடைபெறும் இடம்

No: 102-2/2, Navalar Road, (Luxman Plaza Building) Jaffna.

Tel : 021 7538395

உங்கள் பதிவுகளுக்கு 071 4241873

## மரண அறிவித்தல்



**திருமதி பூமணி பூதத்தம்பி (குஞ்சுமணி)**

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது 24,Launceston Rd, Perivale London UB6 7EU, UK யை வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி பூதத்தம்பி (குஞ்சுமணி) 16.10.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு பூதத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா வைத்திலிங்கம் - திருமதி ஆச்சிப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்களின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு -சின்னம்மா தம்பதியரின் மருமகளும் ராஜ்குமார் (UK), ராஜி (UK) ஆகியோரின் பாசமிகு தாயும் வற்சலா, இலங்கேசன் ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் ரஜீவ், சுபித்தா, சர்மிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பரமேஸ்வரி வேலாயுதபிள்ளை (UK), புஸ்பவதி அருந்தவநாதன்(Australia), சரோஜினிதேவி இராசரத்தினம் (இலங்கை), வைத்திலிங்கம் ஜெயக்குமார் (Australia) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேலாயுதபிள்ளை (UK), காலஞ்சென்ற அருந்தவநாதன் (இலங்கை), இராசரத்தினம் (இலங்கை), பத்மினி (Australia), அன்னலட்சுமி ஜெயரட்ணம் (இலங்கை), ராசமணி கந்தசாமி (Swiss), காலஞ்சென்ற துரைசிங்கம் (கனடா), காசிப்பிள்ளை அப்பாப்பிள்ளை (Swiss) ஆகியோரின் அன்புமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் North Chapal, Holders Hill Rd, London NW7 INB. Hendon Crematorium இல் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

மகன்: ராஜ்குமார்-07980356783

மகள்: ராஜி-07712043116

02089988450/07990588918

(சி/561742)

## கந்தபுராணப் படிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.24

சுழிபுரம் கதிர் வேலாயுதசுவாமி ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

(204)

## சிறுவர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.24

நல்லூர் தெற்கு ஜே/108 கிராம அலுவலர் பிரிவின் நல்லூர் முருகன் சிறுவர் கழகத்தின் சிறுவர்தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செல்வி ஹோபிஷா உதயகுமார் தலைமையில் நல்லூர் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர்களாக உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், தியாகிகள் அறக்கொடைப் பணிப்பாளர் செ.கமலநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி மீன செந்தில் நந்தனன் சிறுவர்களுக்கான பரிசில்களை வழங்கவுள்ளார்.

(204-7)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய், நவாலி கல்லுண்டாய் வெளியில் 44.7 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

(வட்டுக்கோட்டை யாழ்ப்பாண வீதி 6ஆம் Km வைரவர் கோயில் எல்லையில்)

தொடர்பு:- 0779730990

G.mail.m.s.nathan 1937@gmail.com

## வயல் காணி விற்பனைக்கு

குடத்தனை, 10ஆம் கட்டையில் 163 பரப்பு வயல் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777561341

(சி/571753)



**STUDY IN UK**

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை

**முற்றிலும் இலவசம்**

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!

NO NEED IELTS

flex Institute — 4, IBC Road, Wellawatte, Colombo 6. Hotline: 0777-761346 Email: flexinstitute@sltnet.lk (A Subsidiary of Flex Graphic)

www.flexinstitute.lk

## வாடகைக்கு

நாவலர் வீதியிலும் கஸ்தூரியார் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

021 222 3479, 021 5670313

## விற்பனைக்கு

HM XXXX SUPER GL 172 Sun roof dwal AC உடைய நல்ல நிலையிலுள்ள Dolphin மற்றும் GY XXXX தொடரிலக்க முடைய Dolphin உடன் விற்பனைக்குண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு:

0777920194, 0776110093

இரவு 8 மணிக்குப் பின்.

## தவறிவிட்டது

கதிரவேல்வீதி, அரியாலை எனும் முகவரியுடைய பு.ஜெயந்திராணி (576550499 V) எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை வவுனியாவிலிருந்து யாழ்.வரும்போது தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். தொ.பே. 077 6365791. தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## காசாளர் தேவை

ஸ்ரூடியோ/தொலைத் தொடர்பு நிலையத்துக்கு O/L, A/L படித்த பெண் காசாளர் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்கள்

தொடர்பு:- 0779234540

## SPS போக்குவரத்து சேவை விசேட கட்டணம்

23.09.2010 முதல் எதிர்வரும் தீபாவளி திருநாளை முன்னிட்டு எமது போக்குவரத்து சேவையின் கட்டணங்கள் அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளன என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | முன்னைய கட்டணம் | தற்போதைய கட்டணம் |
|---|---|---|
| ★ பஸ்ரன் சொகுசு போக்குவரத்து குளிரூட்டியது | 1400/= | 1200/= |
| ★ பஸ்ரன் அரை சொகுசு குளிரூட்டிய | 1200/= | 1100/= |
| ★ இருக்கை சீர் செய்யப்பட்டது சாதாரணம் | 1000/= | 700/= |

**Note:**

போக்குவரத்து சேவைக்கான பதிவுகள் தொலைபேசி மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் பிரயாண சீட்டுக்கள் தங்கள் வதிவிடங்களுக்கு நேரடியாக வழங்கப்படும் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்......

* கொழும்பு:- 0112336953, 011377852
* No.118, Dam Stree, Hot line, 0777 306049 - 0777 349142 Colombo- 12
* யாழ்ப்பாணம்:- 021 222 4558

No.61, Arasadi Road, Kandarmadam, Jaffna. Hot line 0771544210

நிர்வாகம் SPS போக்குவரத்து.


## ஓராண்டு நினைவஞ்சலி

**அமரர் எட்வேட் அமிர்தலிங்கம்**

(அமுதம்)

நீ பெறுவாய் முத்துமாரி நிழலிற் சாந்தி

மலர்வு 13 ✱ 04 ✱ 1933



உதிர்வு 05 ✱ 11 ✱ 2009

திதி: 25.10.2010

உத்தமனாய் வேலணையில் உதித்தே வாழ்வில்
உருத்திவரு பணிகளினால் உயர்ந்தும் பாரில்
சித்தமதேர் மக்களினைச் சிறப்பாய் பெற்றும்
சீருடைய நிறை வாழ்வில் திளைத்தும் உற்ற
புத்திரனார் மடியதனில் நூரிப் போது
புண்ணியனாய் புவிவாழ்வை திறந்தும் மீளார்
நித்திரைசேர்ந்தோரண்டு நிறைந்த போதும்
நீபெறுவாய் முத்துமாரி நிழலிற் சாந்தி

(97537)

தகவல்:
அ.சசிகுமார்
(ராயன் ஏஜன்சி கொழும்பு)
வேலணை கிழக்கு, வேலணை-03

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில் 26.09.1934

விண்ணுலகில் 24.09.2010

**அமரர் கந்தர் இராசரத்தினம்**

பாசம் என்ற பதத்தை புரிந்து
பண்பு என்பதன் இலக்கணம் காத்து நின்று
எங்கள் உயர்வில் சிரித்து நின்று
சிறப்போடு எமை வாழ வைத்த
எம் தெய்வமே!
ஆண்டாண்டு சென்றாலும்
ஆறாது நம் துயரம்
மாறாது நம் கவலை
உங்கள் ஆத்ம சாந்தியடைய இறையடி
பிரார்த்திக்கிறோம்

காளி கோயில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்களும் வரலாம் தானே...? எங்களுக்கும் வேண்டும் இடைத்தங்கல் முகாம்

பாட்டன் முப்பாட்டன் காலத்து
யாழ் மண்ணின் மூத்தகுடிகள் நாம்
யாழ். முஸ்லிம்கள்.........
இரண்டு தசாப்தங்களுக்கு மேல்
அவிழ்த்து விட்ட மூடை நெல்லிக்காய்களாக
இலங்கையின் தென்பகுதி எங்கும் பரந்து விட்டோம்
அதனால் பலர் எம்மை மறந்து விட்டார்கள்.

பல காலம் நிவாரணத்துக்காக அங்கு
பலவாறு நிர்வாணமாக நின்றதை நினைத்துப்பார்க்கிறோம்
அங்கெல்லாம் வாழ்ந்த காலத்தை விட
இடம்பிடித்து வரிசைகளில் (கியூ) காத்திருந்த
காலங்கள்தான் அதிகம்.

அப்போதெல்லாம் எம்மவர் தவிர
அங்கு வேறெவர் எமக்குதவி விட்டார்?
இல்லிடம் தந்தவர் யார் எம்மவரே!
மற்றவர் எம்மைக் கைவிடக் காரணம் ....எம்
மக்கள் யாவரும் அங்கு "யாழ்ப்பாணத்தான்"
மதிப்பீட்டளவில் கூட நாம் "தமிழர்கள்" தான்
இந்த உள்ளுணர்வு அரசிடமும் இருந்தது.
அரச அதிகாரிகளிடமும் இருந்தது.

இங்கிருந்து இழக்காமல் கொண்டு சென்ற
இறுக்கமான மூளை கொண்டு
உழைக்கத் தொடங்கினோம்.......
பறித்தெடுக்க முடியாத எம் மண்ணின் கல்விதனை
பதியவைத்தோம் எம் வாழ்வைத் தெளியவைத்தோம்

எமக்கேதோ நிவாரணம் தந்தோம்
எனப் பிதற்றுகிறது அரசு
எம் பெயரில் அரசு பெற்ற வெகுமதிகளை
எடுத்துச் சொல்ல எமக்கில்லை இங்கொரு முரசு
நிவாரணம் பெற்ற அருமைகளெல்லாம்
நின்று பட்டவர்களுக்குத் தான் புரியும்
நிலை கெட்டவர்களுக்குத்தான் புரியும்
கழுதை தேய்ந்து கட்டெறும்பானது ஒரு புறம்
கனவான் உருவில் கடைந்தெடுத்த பெருச்சாளிகள் மறுபுறம்
தொல்லைகள் பற்றிச் சொல்ல வெளிக்கிட்டால்....அதன்
எல்லைகள் தான் நீளும்! அதை விடுவோம்.

அப்போதெல்லாம் புத்தளத்திலும் பெரிய
அகன்ற ரயில் நிலையம் இருந்தது.....ஆனால்
எமக்குத்தான் அங்கு இடமொதுக்கவில்லை
எமக்கேது இடம்?நாம் தான் தமிழராயிற்றே!
இன்று எம்மை அங்குள்ள நிவாரணம் வெட்டி

இங்கு வாருங்கள் என்கிறார்கள் அதிகாரிகள்
எப்படி ஐயா வருவது

நாளாந்தம் உழைப்பவர்கள் எம்மக்கள்
நாம் கல்விச் சமூகம் அதனால்....
எம் பிள்ளைகள் பள்ளிகளில்.....
நாளாந்தச் செலவு பிரயாணச் செலவு
சுகவீனங்கள் இத்தியாதி......இத்தியாதி

இவை போகட்டும் சரி...... இங்கு வந்தால்...
எமக்கான இருப்பிடம் ஏது? சொல்லுங்கள்!
யுத்தம் நடந்த பூமியாக முஸ்லிம் வட்டாரம்
யுத்த காலத்தில் சத்தமில்லாமல்
யுத்திகள் பல புரிந்து
கூரை, கதவு, ஜன்னல், நிலை மற்றும் சுவர்க்
கற்களைக் கூடக் கழற்றிச் சென்று விட்டனர் கயவர்கள்
காணி உள்ளவர் நிலை இதுவாக.....
காணி அற்றவர் நிலை.....?

எம்மவர் மீள்குடியேற்றம் பற்றிய
ஒரு திட்டமான தெளிவான கொள்கை இல்லை
இந்த அரசிடம்.....
அவர்தம் பார்வையில் நாம் மிக மட்டமாகினோம்
தம்மவர் பிரச்சினைக்கு எழுதப்படாத
தனியான பல சட்டங்களுண்டு அவர்களிடம்
தருணத்தில் அவை சந்திக்கு வரும்

"அங்கு நிவாரணத்தை வெட்டிவிட்டுவா
உன்னை இங்கு பதிந்து கொள்வேன்"
என்கிறார் இங்குள்ள கிராமசேவகர்
அவ்வளவு தான் அவராலும் முடியும்
"அங்கே வெட்டி வந்தால் வயிற்றில் கொட்டிக்கொள்ள....
இங்கே "பூவா "கொட்டிக் கிடக்கிது"
என்கின்றனர் எமது மக்கள்
இங்கே தங்கி நின்று" வேலை பார்க்க"
இங்கெமக்கு தங்குமிடம் ஏது?

ஆனாலும் அதற்கெமக்கு இன்றொரு தீர்வு!
இங்கு(யாழ்) இன்னும் பல ரயில்நிலையங்கள்
இருக்குது தானே...? அங்கு எமக்கு (யாழ்.முஸ்லிம்)
இடைத்தங்கல் முகாம்கள் வேண்டும்
எம் ,எம்.பி. மார் எத்தளத்திலிருந்தும்
எமக்கு அரிசி,மா,சீனி இவையாவும் கொண்டோடி வருவார்கள்
அரசாங்க மந்திரிகளும் எமைப்பார்க்க வருவார்கள்
அவர்கள் பால் மா, மருந்துகள் பல தருவார்கள்
பக்குவமாய் தனியொருவருக்கெனப் பணமும் தருவார்கள்
படித்திடவே எம் பிள்ளைகள் அங்கிருப்பர்

படுத்தபடி நாம் இங்கிருப்போம்
ஆஹா! எப்படிப்பட்ட வாழ்க்கை, இவ்வாழ்க்கையில்
மூன்று மாதங்கள் அல்ல
மூன்று வருடங்கள் கூட நாம் இருப்போம்.
ஏனெனில் நாம் அப்படி வாழ்ந்திருக்கிறோம்.
ஆதலால் ஒரு இடைத்தங்கல் முகாம்
எமக்கும் வேண்டும்

இம் மண்ணுக்குத் தொடர்பற்ற சிங்கள மக்கள்
அவர் தம் வேர்கள் எங்கே! அவர்களுக்குத்தான் தெரியும்
இங்கு விழுதெறிய வந்துள்ளார்கள்
அவர் பின்னே மறைந்திருக்கின்றனர் பல சிறில் மத் யூக்கள்
எமக்குப் பின் எம்மைத் தாங்கிக் கொள்ள
ஒரு சிறு துரும்பு கூட இல்லையே!
எமது வேர்கள் தமிழ் மண்ணிலே........
விழுதுகள் என்றும் வேராகுமா? ஆனால்
விழுதுகள் கண்ணில் தெரியும்
வேர்கள் மண்ணில் புதையும்
இன்று நாம் பல விதைகளை
இங்கு எம் மண்ணில் விதைத்தே வருகிறோம்
எமது "ஜின்னா மைதானத்தில்" புதைத்து வருகிறோம்
எமக்கான நாளை அது விருட்சமாகும்

எமது தமிழ் பேசும் அரசியல் வாதிகளே!
எமக்காகக் கேளுங்கள் இங்கு
இடைத்தங்கல் முகாம்களை
ஏன் முடியாது? உங்களால்.......
எமது வாழ்க்கையே முடிவில்லாத போராட்டம் தானே!

அந்த அப்பாவிச் சிங்கள மக்களை
இன்றைய எமது அரசியல் நீரோட்டத்தினுள்
இறக்கிவிட்டுள்ள அவர்தம் அரசியல்வாதிகளின்
இழிவான செயல்களை அவர்களுக்குப் புரிய வைப்போம்
இங்கே எமக்கே பாதுகாப்பில்லை
அப்படி ஒரு சூழ்நிலை.....
அம்மக்களை நாம் சேர்ந்தே பாதுகாப்போம்
இங்கும் முதலைகள் இருக்கும்
என்ற உண்மையை அவர்க்குத் தெளிவுபடுத்துவோம்

தமிழ் பேசும் யாழ்.முஸ்லிம்கள்
தம் மண்ணிலே மீளக்குடியேறும் அவர்தம்
கனவுகள் நனவாகப் போராடுவோம்
கனவில் கூட காணி இல்லை..... சிங்கள மக்களுக்கு
கண்டபடி உறுதிமொழிகள் என்றால்... காணி உறுதி
மற்றும் காணிகள் சோலைவரி
காலம் கடந்த பிறப்பு இறப்புப் பதிவுகள்
பள்ளிகள்,பள்ளிவாசல்கள்,மற்றும் வாழ்விட
பல்கலை, கலாசார, வரலாற்றுப்பதிவுகள் கொண்ட
ஒரு இனத்துக்கு ஒரு கண் துடைப்புக்காவது.....!

இங்கு ஒருபோதும் இல்லாத ஒன்றுக்காக
இடம் பெயர்ந்ததாகக் கூறும் அவர்க்கு
அது இல்லையென்று போனால்....!!??
உமக்குண்டு மீண்டும் ஒரு"83" என்பார்களோ?
இன்றைய அரசியல் போக்கில் எதுவும் நடக்கலாம்!
இன்று "சட்டியிலிருந்து அடுப்புக்குள்" நாம்
என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்

சிறு பொறியைக் கூடப் பெருந்தீயாக்க
பல சக்திகள் காத்திருக்கின்றன
இதை அறிந்து கொள்ள அவருக்குப்
பகுத்தறிவு தேவையில்லை
பட்டறிவு போதுமே!

— ஏ.எஸ்.அஸாலி —

# இலங்கையில் நீடித்த அமைதிக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

இலங்கை அரசுகள் காலம் காலமாக பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஒரு இனத்தை ஆக்கிரமிப்பதன் மூலம் தம்மினத்தைப் பாதுகாக்கும் செயலூக்கமே அவர்களிடம் மேலோங்கி உள்ளது. இந்த நிலை மாற வேண்டும்.

சிறந்த கருந்துச் சுதந்திரம் மூலமே இனநல்லிணக்கத்தினை ஏற்படுத்த முடியும். மாறாக ஆயுத முனையினாலோ சட்ட நடவடிக்கைகளாலோ அதனைச் செய்ய முடியாது.

இலங்கையில் நீடித்த அமைதிக்கு என்ன வழி எனச் சிந்திப்பது காலப் பொருத்தமானது.

ஒன்று

அரசியலில் ஈடுபட்டு ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் தமது அரசியல் நடவடிக்கையில் இருந்து முற்றக ஒய்வு பெறவேண்டிய தேவையுள்ளது. கொலை, கொள்ளை, கப்பம் போன்ற சமூக விரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்தோம் என்று சொல்லிக் கொண்டு அரசியல் செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இதனை உணர்ந்து அவர்கள் அரசியல் துறவு பூணுவது இந்த நாட்டிற்கு மிகவும் அவசியமானதாகும்.

இரண்டு

வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய சிங்களக்குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

மூன்று

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். புனர்வாழ்வு அளித்து அவர்களைச் சமூகத்தில் மீள இயங்கு நிலைக்குக் கொண்டு வர வேண்டும். இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் தமது சொந்த இடங் களில் மீளக்குடியமர பூரண வசதி செய்யப்படல் வேண்டும்.

நான்கு

வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் படிப்படியாக விலக்கப்படல் வேண்டும். மக்கள் குடியிருப்புகளுடன் உள்ள இராணுவ முகாம்களால் - யுத்தம் முடிந்த பின்பும் - பாலியல் தொல்லை உட்பட பல்வேறு விதமான இன்னல்களை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

ஐந்து

வடக்கு, கிழக்கிற்கு உரிய அரசியல் அதிகாரத்தினை அந்தப் பிரதேச மக்களிடம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் தீர்மானிக்கலாம். இது இலங்கையின் இறைமைக்கு உட்பட்டதாக வெளி விவகார, நிதி, பாதுகாப்பு தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை உள்ளடக் கியதாக அமையலாம். மக்களால் தெரிவு செய்யப்படும் ஆளுனர் மூலம் நிறைவேற்று அதிகாரம் பகிரப்படலாம்.

ஆறு

இலங்கையில் 3 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இராணுவப் பயிற்சி பெற்றவர்களாக உள்ளதாலும் நாட்டின் பொருளாதாரம் தளம்பல் நிலையில் உள்ளதாலும் வேறு நாடுகளைச் சேர்ந்த தீவிரவாதிகள் இலங்கையினுள் இலகுவாக நுழைந்து பயங்கர ஆயுதங்கள் தொடர்பான பயிற்சியினை இலகுவாகப் பெறமுடியும். இது எதிர்காலத்தில் இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பிற்கும் குந்தகமாக அமையும். எனவே இலங்கையில் யுத்ததிற்கு பின்பான புனர்வாழ்வு தமிழ்மக்களிற்கு மட்டுமல்ல ஆயுதப் படையினருக்கும் அளிக்கபடுதல் அவசியம். இதன்மூலம் எமது சமூகத்தில் உள்ள வன்முறைத் தொழில்நுட்பத்தைப் படிப்படியாகக் குறைக்க முடியும்.

இவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, இது தொடர்பில் காலங் கடத்துவது மற்றும் எந்த வித முயற்சிகளும் அற்றிருப்பது என்பன இலங்கையின் நீடித்த அமைதிக்குப் பங்கமாக அமையலாம்.

இலங்கை வாழ் தமிழர்களும் சிங்களவரும் சக இனத்தவர். ஆதியில் தமிழர்களில் இருந்தும் வேடுவரில் இருந்தும் கலந்தே சிங்கள இனம் உருவானது. இலங்கையில் எந்தச் சிங்கத்தின் எச்சத்திலும் மனித இனம் இல்லை என்பதற்குத் தற்கால நிறமூர்த்தத் தொழில்நுட்பம் சான்றுபகரும்.

இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு தெற்கு அரசியல் தலைவர்கள் நல்லெண்ணத்திற்கான முன்முயற்சிகளை எடுக்க வேண்டும். அதை விடுத்து தமிழரை அழிக்க இந்தியரையும் பாகிஸ்தானியரையும் சீனரையும் இலங்கை வரவழைப்பது வேடிக்கையானது.

இலங்கையில் சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் உள்ளனர். இவர்கள் யாவரும் தமிழரை எதிரியாகப் பார்க்கும் மனநிலையிலும் தமிழ் பெண்களை கீழ்த்தரமாக நோக்கும் மனநிலையிலும் வளர்க்கப்பட்டவர்கள். இதை உருவாக்கியவர்களே அரசியல் வாதிகள்தான். இந்த நிலை மாறவேண்டும்.

இலங்கையின் கல்வியறிவு உடைய சிங்களவர் கூட இன்று தமிழரைத் தாழ்வாகவே மதிப்பிடுகின்றனர்.

> 'ஈழத்தமிழர்' என்ற சொற்பதம் இலங்கைத் தீவில் வாழும் அனைத்துத் தமிழரையும் குறிக்கும். 'தமிழ் ஈழத்தவர்' என்போர் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழரை அடையாளப்படுத்தும்.

உதாரணமாக, இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய, புலிகளால் ஆபத்து ஏற்படப் போகின்றது என இன வாதத்தைக் கக்கி உள்ளார். அடுத்து ஐக்கிய தேசியக்கட்சிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கா இலங்கைத் தமிழர்களிற்கு அரசியல் தீர்வு தேவையில்லை எனக்கருத்துப்படச் சொல்லி உள்ளார்.

எந்த முகாந்திரமும் அற்ற இத்தகைய குற்றச் சாட்டுக்களே கடந்த காலங்களிலும் முரண்பாடுகளை உக்கிர மோதல் நோக்கி வழி நடத்தியிருந்தன. தெற்கு அரசியல் தலைமைகளுக்கு 'கற்றுக் கொண்ட பாடங்கள்' இனியாவது பயன்பட வேண்டும்.

இதுவே இப்பிரதேசத்தின் நீடிந்த அமைதிக்கு ஏதுவானது.

அதை விடுத்து இலங்கை-இந்திய இராணுவ, கடற்படை கூட்டுப்பயிற்சிகள் சமூக வன்முறைகளைக் குறைக்க உதவாது. அத்தகைய மிரட்டல் நடவடிக்கைகள் பயங்கரவாதம் மீள எழவே ஏதுவாகும்.

Dr.சி.யமுனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைக்கு உயிர் வேண்டிக் கந்தனிடம் விரதமிருக்கும் குரங்குத் தாயின் கதை

வீதியோரமாய் ஒரே சனக்கூட்டம்; போறவங்கள் வாறவங்கள் எல்லாம் அதில நீண்டு புதினம் பாக்கிறமாதிரி எனக்குத் தெரிஞ்சுது. நானும் ஒருக்கா பாப்பம், அப்பிடி என்னதான் நடக்குது எண்டு போனன். எதிரில ஒரு பையன் வந்தான். என்னதம்பி என்று கேட்டன். தெரியல்ல; பொலிஸ் ஏதோ விசாரிச்சுக் கொண்டு நிக்குது எண்டான். சரிபாப்பம் எண்டு கிட்டப் போனா ஒண்டுமாய்க் காணல்ல. பொலிஸ் காறன் நிக்கிறான். பக்கத்தில நிண்ட முதியவர் ஒருவரிட்டைக் கேட்டன், ஐயா என்ன பிரச்சினை எண்டு. ''...ம் .... நானும் இப்பத்தான் வந்தன். ஏதோ குழந்தை ஒண்டு அனாதரவாக்கிடந்து எடுத்த தாம். அதுதான் பொலிஸ் விசாரிக்க வந்து நிக்குதாம்.'' என்றார் அவர்.

இதுவெல்லாம் எங்களுக்கு புது விசயமா என்ன? நாகரிகம் ஏதோ வளர்ந்து போச்சு. அதில எங்கிட இடத்து ஆக்களும் அந்த நீரோட்டத்தில நீந்துகினமாம். அவற்றின் விளைவாகத்தான் இப்பிடி எல்லாம் நடக்குது போல.

ஒரு தாய் பத்துமாசம் சுமந்து ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து வளர்ப்பது என்பது ஒரு பெரிய காரியம் தான். எதிர் காலத்தில் அந்தப் பிள்ளைகள் நல்ல மனிதர்களாக, நற்பண்புள்ளவர்களாக நிறைவோட வாழ்றதுக்கு பெற்றோர்தான் பொறுப்பாளிகள். இந்தப் பொறுப்பு அதிகமா தாயிடம் தான் ஒப்படைக்கப்பட்டிருக்கு. எங்கட சமூகத்தில எல்லாப் பெற்றோரும் இல்லாவிட்டாலும், ஒரு சிலர் பொறுப்பற்ற விதத்தில நடந்து கொள்வதால முழுச் சமூகத்தையும் பாதிக்கிறமாதிரித்தான் பார்வை விழுகுது.

ஆறறிவு படைச்ச மனிதர்கள், இவர்களை எப்படித்தான் சொல்லித் திருத்திறது? அது ஒரு நோயாகத்தான் எங்கள் சமூகத்தில பரவியிருக்கிறதால ஒண்டும் செய்ய முடியவில்லை.

நீங்கள் எல்லோரும் எப்படியோ ஒருக்காலாவது கதிர்காமக் கந்தனிட்ட மலையேறிப் போய் வந்திருப்பீங்க எண்டு நம்புறன். உங்களப் போலத்தான் நானும் ஒருக்கா அவரைப் பாக்க வேணும் எண்டு அண்மையில் மலை ஏறினன். சும்மாவா, காடுகளுக்கால மலையில் ஏறுவது எண்டா பயம் தான். படிகளும் அவளவு நல்லா இல்லை.

மலைக்குப் போகிற வழியில எங்கட மூதாதையர் ஒரே தொந்தரவுதான். குழந்தைப்பிள்ளைகளிடம் இருக்கிற இனிப்புப் பண்டங்களை விரட்டி வேண்டி சாப்பிட்டுக் கொண்டு அங்கும் இங்குமாத் தாவித் திரிஞ்சினம்.

கதிர்காமக் கந்தனுக்கு பக்தர்கள் எடுத்துச் செல்லும் பூசைப் பொருள்கள் எல்லாவற்றையும் கந்தன் ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ, குரங்குகள் அவற்றைக் 'குஷியா' அனுபவிக்க அங்கு விரதம் இருக்குதுகள்.

மனிதர்களுக்குச் சற்றும் பயமில்லாமல் இலாவகமாக கூட்டம் கூட்டமாகப் படையெடுத்து வந்து கோயிலின் அடிவாரங்களிலும் மரங்களிலும் இருக்கிறதப்பாத்து எனக்கு புதிய உணர்வுகள் எல்லாம் கிளம்பிச்சு, மிருகங்களுக்கு இருக்கிற புத்திசாதுரியமும், பொறுமையும், முயற்சியும் ஏன் எங்களுக்கு இல்லாமல் போச்சுது எண்டு....

மலை உச்சியில புத்தகோயில் பக்கமா நண்பர்களுடன் நின்று கொண்டு பார்த்த வேளை அந்தப்பகுதியால்



ஒரு குரங்கு பாய்ந்து வந்தது. ஒற்றைக் கையில் தனது இறந்துபோன குட்டியுடன்.... ஆச்சரியமாக இருந்தது.

குரங்கு, தன் குட்டி ஏதாவது காரணத்தால் இறந்து விட்டால் மீள அதைத் தூக்காது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறன். ஆனால் இந்தக் கதை என்னைப் பொறுத்தவரை அன்றோடு பொய்த்துப் போனது. பார்த்தவுடன் ஏக்கமாகவும் மெய்சிலிர்க்கவும் செய்தது. அங்கு வந்திருந்த எல்லோரும் அந்தக் குரங்கையே பரிதாபத்துடன் பார்த்தனர்.

உயிர் பிரித்து விட்ட இந்தக் குட்டியை எதற்காக தாய்க் குரங்கு தன்னுடன் வைத்திருக்கிறது? கஷ்டப்படுகிறது என்றகேள்வி எனக்குள் எழுகின்றது.

குரங்குக்குட்டி தாயின் வயிற்றைப் பற்றிப் பிடித்திருக்கையில் அது இலாவகமாக தனது வேலைகளை செய்யும். ஆனால் இப்போது அந்தக் குட்டியை ஒரு கையில் பற்றிக் கொண்டு ஏனைய மற்றைய கைகளாலேயே மாத்திரம் தாவித்திரிகிறது. உணவைக் கூட ஒருகையாலையே தேடிக் கொள்கிறது.

கடவுளின் கருணை எனக்குக் கிட்டி எனது குழந்தைக்கு மீண்டும் உயிர்தந்து விடக்கூடாதா? என்ற ஏக்கம் தான் அந்தக் குரங்குத் தாயின் கனவோ? அல்லது அதற்காக கந்தனின் குன்றை சுற்றி வருகிறதோ என்னவோ, எனக்கு அப்படித்தான் தெரிந்தது.

மனித உயிர்களின் பெறுமதிபற்றிச் சிந்திக்காத எமது நாட்டில் விலங்குகள் பற்றியும் அவைகளின் வாழ்வுபற்றியும் சிந்தித்து என்னதான் நடக்கப் போகிறது? இருந்தும் இந்தக் காட்சியைக் கண்டால் யாருக்குத் தான் கவலை வராது. சரி கடவுள் தான் அந்தக் குரங்குக் குட்டிக்கு உயிர் கொடுக்கப் போகிறாரா? தாயின் ஏக்கத்தையும் தவிப்பையும் தீர்க்கப்போகிறாரா? எதுவோ எமது சமயச் சம்பிரதாயமான ''வாழ்க்கை நிலையாமை'' பற்றிய எண்ணத்துடன் கதிரமலையில் இருந்து விடைபெற்றேன்.

மலையில் இருந்து இறங்கும் போது, ஏறும் போது இருத்ததைவிட துன்பமாக இருந்தது. ''மனிதத்தன்மை'' பற்றியும் ''குரங்குத் தன்மை'' பற்றியதுமான சிந்தனை கால்களைத் தள்ளாடவைத்தது.

''அரிது அரிது மானிடர் ஆதல்
அரிது அதனிலும் அரிது கூன்,
குறுடு, செவிடு நீங்கிப் பிறத்தல்''

என்ற ஔவையாரின் பாடல் வரிகள் மனித வாழ்க்கையைப் புடம் போட்டுக் காட்டுகிறதல்லவா?

இறந்துபோன தன்பிள்ளை தன்னுடன் இருக்கவேண்டும் என்ற தாய்க் குரங்கின் உணர்வைப் பார்க்கும் போது பிறந்து எதுவுமே தெரியாதநிலையில் பொதிசெய்யப்பட்டு பற்றைக்குள் வீசப்படும் குழந்தைகள் பற்றிச் சிந்திப்பது எப்படி? பதில் கூறுவது எப்படி? பகுத்தறிவற்ற குரங்கிற்கு இருக்கும் உணர்வு கூட எம்மில் சிலருக்கு இல்லாமல் போவது ஏன்? தப்பான வழிகளிலும், தவறான நடத்தைகளிலும் சென்று வாழ்க்கையையே தொலைக்க முயற்சிப்பது ஏன்? ஏதும் அறியாப் பாலகரைப் பெற்றெடுத்து யாருக்கும் தெரியாமல் வீசிவிடுவது ஏன்?

இவ்வாறான கேள்விகளுக்கு விடைகள் கேள்விக் குறிகளாகவே இருக்கின்றன.

வீசப்படும் குழந்தை இந்த மண்ணில் வாழக் கூடாதா? அந்தக் குழந்தைக்கு பாலூட்டி சீராட்டி வளர்க்க ஒரு அன்னை இருகக்க் கூடாதா? சுற்றம், உற்றார், உறவினர்களுடன் அந்தக் குழந்தை சேர்த்து மகிழக் கூடாதா? வெறுமனே நீதிமன்றத்தால் பராமரிக்கப்படும் நலப்பள்ளி தான் இந்தக் குழந்தைகளின் குடும்பமாக வேண்டுமா? இந்தக் கேள்விகள் மனதைக் குடைகின்றன.

மனிதருக்கு அறிவு ஐந்தைவிட ஒன்று பெருகியதால் அப்படி என்ன தான் மாறுபாடு தெரிகிறது. குரங்கில் இருந்து மனிதன் பிறந்திருந்தால் ஏன் இந்தக் குரங்குத் தாயின் மனம் எம்மில் சிலருக்கு இருக்கக் கூடாது?

மாறுவோம்; சமூகக் கட்டுப்பாடுகளுக்கு அமைந்து நேர்வழியில் பிள்ளைகளைப் பெற்று களங்கமற்ற பிள்ளைகளாக, எதிர்கால சிற்பிகளாய் ஒழுக்க சீலர்களாய் அவர்களை வளர்த்தெடுப்போம். *

## உண்மையான காட்சி இது - கதிர்காமத்தில் கண்டது

சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் கன்னத்தில் அறைந்த செயல்



சிறையில் அடைக்கப்பட்டுள்ள சீனாவின் ஜனநாயகத்துக்கான போராளி லியு-சியாமோவுக்கு சமாதானத்துக்கான நோபல்பரிசு வழங்கப்பட்டுள்ளது. சீன ஆட்சியாளர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியிருப்பது மட்டுமல்ல ஆத்திரம் கொள்ளவும் செய்துள்ளது.

இந்தப் பரிசு சியாமோவுக்கு வழங்கப்படவிருப்பதாக அறிந்தவுடனேயே அதைத்தடுத்து நிறுத்துவதற்கு சீன அதிகாரிகள் பெரும்பாடுபட்டு வந்தனர். சீன உதவி வெளிநாட்டு அமைச்சர் ஃபு யிங் கடந்த ஜூன் மாதம் விடுத்திருந்த அறிக்கை யொன்றில் குறித்த நபருக்கு நோபல் பரிசு வழங்குவதானது ''ஒரு நட்புக்கு உகந்த செயலாக இருக்கமாட்டாதென'' குறிப்பிட்டிருந்தார்.

இருந்தாலும் சீனாவின் நேரடி மற்றும் மறைமுகமான எதிர்ப்புக்கள் அனைத்தையும் உதாசீனம் செய்துவிட்டு நோபல் பரிசு குழுவினர் சிறையிலுள்ள லியுசியாமோவுக்கு இந்த வருடத்துக்கான நோபல் பரிசினை அறிவித்துள்ளது. சீனாவில் உள்ள ஊடகங்களும் இந்த பரிசளிப்பினைக் கடுமையாக விமர்சித்துள்ளன.அரசியல் நோக்கத்துடன் இப்பரிசு வழங்கப்பட்டுள்ளதாக அவை குற்றஞ்சாட்டியுள்ளன.

அமைதிக்காகவும் சமாதானத்துக்காகவும் உலகின் பல பாகங்களிலும் அலட்டிக்கொள்ளாமல் பாடுபட்டவர்களும் பணி புரிந்தவர்களும் எத்தனையோ பேர் இருக்க ஓர் அரசின் கொள்கைகளை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்துகிறவர்களை நோபல்பரிசுக் குழுவினர் தேடிச் சென்று பரிசு வழங்குவது ஏன் என்று கேட்கப்படுகிறது.

தொழில் முறையில் எழுத்தாளரான சியாமோ அரசியல் விமர்சகராகவும் மனித உரிமைப் போராளியாகவும் இருந்து வந்துள்ளார்.

சீனாவில் பிரபல்யமான 300 அறிஞர்கள் ,எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமைப் போராளிகள் சேர்ந்து வெளியிட்ட ஜனநாயகத்துக்கான பிரகடனத்தைத் தயாரித்தவர்களில் இவரும் ஒருவர்.

அரசுக்கெதிராக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் மீது அவருக்கு 11 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வெளியிட்ட பிரகடனமானது சீனாவின் அரசமைப்பில் குறிப்பிட்டுள்ள ஜனநாயக சீர்திருத்தங்கள், மனித உரிமைகள் மற்றும் சட்டப்படியான ஆட்சி ஆகியவற்றை செயற்படுத்தும் படி வற்புறுத்துகின்றது. அரசியல் மாற்றம் ஏற்படாது விடுமானால் தேசிய அழிவு ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரகடனத்தில் 19 முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. சுதந்திரமான நீதித்துறையொன்று நிறுவப்பட வேண்டும். தனி ஒரு கட்சி ஆட்சிக்கு ஒரு முடிவுகட்டப்படப் வேண்டும் என்பதையும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாரிஸிலுள்ள அரசியல் கல்விக்கான நிறுவனத்தின் சீனா தொடர்பான நிபுணர் ஜீன் பிலிப்பே பேஜா இதுபற்றி கருத்து வெளியிடுகையில் உலக அரங்கில் மிக முக்கிய பங்கு பணியினை மேற்கொள்ள சீனா விரும்புமானால் அது உலக விழுமியங்களை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அதேபோல் கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் மதிக்க வேண்டும் என்றார்.

1989 ஆம் ஆண்டு திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவுக்கு நோபல் பரிசுவழங்கப்பட்டபோது சீனா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

சீனப் பத்திரிகையான குளோபல் ரைம்ஸ் எழுதியுள்ள தலையங்கம் ஒன்றில் ''அவர்கள் மேற்கத்திய விழுமியங்களை எங்கள் மீது திணிக்க முயல்கிறார்கள். இம்முறை நோபல்பரிசு வழங்கப்பட்டுள்ள முறையானது சீனாவை எரிச்சல் கொள்ளச் செய்யவேண்டும் என்றே செய்யப்பட்டுள்ளது. அது வெற்றி அளிக்காது. பரிசுக் குழுவினர் தம்மையே அகௌரவப்படுத்திக் கொண்டுள்ளனர்.

தவறான ஆளை அவர்கள் பரிசுக்குத் தெரிவு செய்துள்ளார்கள். சீனாவின் வளர்ச்சி குறித்து மேற்கத்திய நாடுகள் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது . சீனா தனது சொந்தப் பாதையைத் தெரிவு செய்வதில் மிகத் தீர்மானத்துடன் இருக்க வேண்டும். அது மேற்கு நாட்டுப் பாதைக்கு வித்தியாசமானதாகும். சீனாவின் வெற்றிக்கதையானது நோபல்பரிசை விட மிக உரத்த குரலிலே சொல்லப்படுவதாகும் என்று எழுதியுள்ளார்.

எதுவானாலும் சீனாவின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சீன ஆட்சியாளருக்குப் பிடிக்காத ஒருவருக்கு நோபல்பரிசு வழங்கப்பட்டிருப்பது சீனாவின் கன்னத்தில் அறைந்ததற்கு ஒப்பாகும் என்று விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

# இறந்த பின்னர் அற்புதம் நிகழ்த்திய புனிதர்

தவறாகச் செயற்பட்ட குருவானவரை வெளிப்படுத்தியதன் மூலம் தேவாலய அதிகாரிகளுடன் மோதினார்.

பின்னர் தமது தரப்பில் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பல பாடசாலைகளையும் கஷ்டப்பட்டவர்களுக்கான இருப்பிடங்களையும் நிறுவினார்.

பாப்பரசர் ஒன்பதாவது பத்திநாதரின் சேவைகளை அங்கீகரிப்பதற்கு முன்னராகக் குருவானவர் ஒருவரின் முறைகேடுகள் உட்பட சில பல விடங்களில் தேவாலயத்துடன் மோதிக்கொள்ள நேர்ந்ததால் சிறிது காலம் தேவாலயத்தில் ஒதுக்கப்படுவதற்கும் ஆளானார். இப்பொழுது அந்த நிகழ்வு கவலையுடன் நினைவு கூரப்படுகின்றது. அவுஸ்திரேலியாவில் மக்கள் மத்தியில் அவர் மனநெகிழ்வுடன் செய்த பணிகளின் காரணமாக ''மக்களின் புனிதர்'' என்றே அழைக்கப்பட்டார். அது இன்று நிதர்சனமாகியுள்ளது.

சகோதரி மேரி ஹெலன் மெக்கிலெப் மெல்போனில் 1842ஆம் ஆண்டு ஸ்கொட்டிஷ் பெற்றோருக்கு எட்டுப் பிள்ளைகளில் தலைமகளாகப் பிறந்தவர். பணவசதியற்ற குடும்பம். சொந்தமாக வீடு இருக்கவில்லை. 16 வயதிலிருந்து குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். குழந்தைகள் பராமரிப்பாளரகவும், எழுத்தாளராகவும், ஆசிரியராகவும் பணிபுரிந்தார். உள்ளூர் குருவானவர் ஒருவரைப் பார்த்து ஊக்கம்பெற்ற அவர் பெனொலா என்ற நகரில் பரி.ஜோசப் பாடசாலையை முதன்முதலில் 1866 இல் தொடங்கினார்.



அவுஸ்திரேலியாவின் முதலாவது புனிதர் என்று வத்திக்கானால் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப் பட்ட வரான சகோதரி மேரி மெக்கிளோப் தமது வாழ்நாளில் 52 ஆண்டுகளின் பின்னர் நிகழ்த்திய அற்புதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 1961ஆம் ஆண்டு இரத்த சோகையினால் பீடிக்கப்பட்டிருந்த பெண்ணொருவர் இவர் பெயரால் பிரார்த்தனை செய்யப்பட்டதில் குணமானர். இது அவரால் நிகழ்த்தப்பட்ட அற்புதம் என்று பிரகடனப்படுத்தப்பட்டு 1995 ஆம் ஆண்டு மகிமைப்படுத்தப் பட்டார்.இதே போன்று 1993 ஆம் ஆண்டு இன்னொரு பெண் மரணப்படுக்கையிலிருந்து அவரால் குணப்படுத்தப்பட்டார். என்பதை கடந்த டிசெம்பரில் வத்திக்கான் ஏற்றுக்கொணடது. இதன் மூலம் அவர் புனிதர் என்பதற்கான இரண்டாவது ஆதாரமும் கிடைத்ததின் பேரில் இப்போது புனிதர் எனப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளார். சகோதரிமேரி மெக்கிளோப் கல்வித்துறையில் ஒரு முன்னோடிப் பணியாளராகத் திகழ்ந்தவர். ஆயிரக்கணக்கான மக்களைத் தொட்டு ஆசீர்வதித்த கன்னியாஸ்திரி. அதுமட்டுமல்ல சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட குருவானவர் ஒருவரை வெளிப்படுத்தியவரும்கூட. குதிரைகளுக்கான பழுதடைந்த கொட்டில் ஒன்றைத் தெரிவு செய்து ஏழைக்குழந்தைகளுக்கு அதில் வைத்து கல்வி புகட்டினார்.

தொகுப்பு: ரம்யன்

# மண்டேலா சிறையில் எழுதிய கடிதங்கள்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடியவர் நெல்சன் மண்டேலா. தென்னாபிரிக்க மக்களின் விடுதலைக்காக வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் போராடிய இப்பெரியாருக்கு இப்போது 92 வயதாகின்றது.



விடுதலை பெற்ற தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பு இனத்து ஜனாதிபதியாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ள அவர் தமது சிறைவாசத்தின் போது குடும்பத்தாருக்கு எழுதிய கடிதங்கள் நூல் உருவில் வெளியாகியுள்ளன. 1962-1990 வரை ஏறத்தாழ28 ஆண்டுகள் அவரை சிறையில் அடைத்திருந்தார்கள். ''எனக்குள் நானே பேசிக்கொண்டவை'' என்ற தலைப்பில் இக்கடிதங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தனது மனைவி வின்னி மண்டேலாவுக்கு 1970 ஆம் ஆண்டு சிறையில் இருந்து எழுதிய கடிதத்தில் பின்வருமாறு அவர் தெரிவித்துள்ளார். ''சிறைக்குள் நான் அமுக்கப்பட்டிருப்பது போல் உணர்கின்றேன்- என் உடம்பின் எல்லாப் பகுதிகளும் என்தசைகள், இரத்தக்குழாய்கள், எனதுஎலும்புகள், எனது ஆன்மா எல்லாமே தளர்ந்து போய்விட்டன. நீங்கள் அனுபவிக்கும் துன்பத்தில் என்னால் உதவுவதற்கு எதுவித சக்தியும் இல்லாமலிருக்கிறது'' என்று நோபல் சமாதானப் பரிசு பெற்றவரான மண்டேலாவுக்கு மூன்று மனைவிகள். 1944-1957 வரை எவலின நிடோகோ மேஸ், 1957-1996 வரை வின்னி மடிகிசேவா, 1998 இல் இருந்து கிறேஸ்மாச்செல்.

# சூடானின் தென்பகுதி பிரிந்து போகுமா? ஜனவரியில் கருத்துக்கணிப்பு முடிவுதரும்

ஜனவரியில் சூடான் நட்புறவுடன் தென்பகுதியில் நடைபெறவிருக்கும் மக்கள் கருத்துக் கணிப்பு அந்த நாட்டை இரண்டாகப் பிரித்து விடலாம் என விமர்சகர்கள் கருதுகிறார்கள். அதே வேளை மீண்டும் அந்நாட்டில் மோதல்களும் அமைதியின்மையும் ஏற்படுவதற்கும் சாத்தியம் உண்டு என்கின்றார்கள் வேறு சிலர்.

முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட வடக்கு சூடானும் கிறிஸ்தவர்களையும் வேறு பிரிவினர்களையும் அதிகமாகக் கொண்ட தென்பகுதியினரும் 2005 ஆண்டு உள்நாட்டு யுத்தத்துக்கு ஒரு முடிவுகட்ட தீர்மானித்தார்கள். இந்த உடன்பாட்டின் படி தெற்கு சுதந்திரம் பெறுவது தொடர்பாக கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தவும் ஒப்புக்கொண்டனர். அரசாங்கத்தில் இருதரப்பினருமே இப்பொழுது அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டுள்ள போதிலும் இருதரப்புத் தலைவர்களும் ஒருவரைஒருவர் சந்தேகக் கண் கொண்டே பார்க்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

தெற்கில் கருத்துக் கணிப்பு நடத்தப்படுவதில் ஏற்பட்டுவரும் தாமதம் தென்பகுதியில் பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. என்றாலும் ஜனவரியில் கருத்துக் கணிப்பு நிச்சயம் நடத்தப்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

சூடான் ஜனாதிபதி ஓமார் அல்-பாஷிர் கடந்த வாரம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பேசிய போது,ஒருமைப்பாட்டுக்கு மாற்றீடாக நான் எதனையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆனால் 22 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்த அமைதி ஒப்பந்தத்துக்குத் தாம் கட்டுப்படுவதாகவும் தெரிவித்திருந்தார். குறித்த அமைதி ஒப்பந்தத்தின்படி சுதந்திரம் தொடர்பான கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்துவதற்கான உரிமை தென்பகுதிக்கு வழங்கப்பட்டிருந்தது. சூடானின் வெளியுறவு அமைச்சர்



அலிகார்ட்டி பின்னர் கருத்து வெளியிட்டபோது தென்பகுதியின் பெரும் பகுதியினர் ஜனவரி 9 ஆம் திகதி கருத்துக் கணிப்பில் பிரிவினையை ஆதரிப்பார்களானால் அதனை நாங்கள் கௌரவிப்போம் என்றார்.

எதுவானாலும் தென்பகுதியின் எல்லைப் பகுதிகளால் மோதல்கள் வெடிக்கலாம் என்று கருதும் அப்பகுதித்தலைவர்கள் ஐ.நா. அமைதி காக்கும் படைகக்ளை அனுப்பும்படி கோரியுள்ளனர் . இக் கோரிக்கைளை ஐ.நா. ஏற்றுக் கொண்டுள்ளது. தென்பகுதி பிரிந்து போவது தொடர்பான மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்படும் அதே காலத்தில் எண்ணெய்வளம் மிகுந்த அபேய் பிரதேசத்திலும் கருத்துக் கணிப்பு நடத்தப்படவிருக்கின்றது இப்பிரதேசம் வடக்குடானா அல்லது தெற்குடனா இணையப் போகிறது என்பதை அப்பிரதேசமக்கள் முடிவுசெய்வார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OL, AL பிறகு அடுத்தது என்ன ?

பாடசாலை கல்வியின் பின் உங்கள் எதிர்காலத்தை பற்றி சிந்தித்தீர்களா ?

## Higher Education or a job or job+Education or go overseas?

Explore Choices, Options and Opportunities available and take the right decision a the right time



www.adinnovationslk.com

**சகல கற்கைநெறிகளும் நவம்பர் 10ஆம் திகதி தொடங்குகிறது.**
**உங்கள் பதிவுகளை உடன் மேற்கொண்டு மெகா கழிவுகளை பெறுங்கள்.**
**அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்....**

### ஆங்கிலம் (English)

- English for Higher Studies
- Communicative English

### Vocational Training

- Certificate in Welding Technology
- Certificate in Aluminum Fabrication
- Certificate in Domestic Electrical Technology
- Certificate in Electrical & Electronics

### முகாமைத்துவம் (Management)

- BSc. International Transportation Management & Logistics
- Management Foundation Programme

### தகவல் தொழில்நுட்பமும் கணினி கற்கையும் (IT & Computing)

-ACS (Australian Computer Society Diploma of IT)
-BCS (The Charted Institute for IT - (UK) Programme
-ICDL,GIT, Java Programming.

### பொறியியல்துறை (Engineering)

- BEng Electronics and Communications Engineering
- BEng Mechatronics
- BEng Mechanical Engineering
- BEng Engineering Design Management
- BEng Automotive Systems Engineering
- BEng Naval Architecture
- BEng Ocean Engineering
- BEng Marine and Offshore Systems

- International Technology Foundation Programme

இப்போது யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது.

COLOMBO INTERNATIONAL NAUTICAL & ENGINEERING COLLEGE SRI LANKA

# CINEC


## Jaffna Campus

BRANCH OF CINEC MARITIME CAMPUS


for more information CINEC Jaffna Campus, KKS Road, Maruthanamadam. Tel: 021 4 925 925 infojaffna@cinec.edu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத் தாரிகை




ஜெ.மயூரவிக்கா, தரம் -6 F, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.




செ.அஜித்தா, தரம் -4 C, யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.




ஈ.அகாஷன், தரம் -6 A, யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.




சி.சிவசுதர்ஷன், தரம் -6 A, யா/யூனியன் கல்லூரி.



கு.கரிகரன், தரம் - 1, யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.



பு.பவித்திரன், தரம் -9, அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாட.



பிரியதர்சன், தரம் -5C, யா/இந்து ஆரம்ப பாடசாலை.



சி.அகல்யா, தரம் -9E, யா/இந்து மகளிர் கல்லூரி.

# ஏழை கண்ட கனவு

சோமன் ஒரு ஏழை. தினந்தோறும் நகரில் உள்ள கடைகளில் பிச்சை எடுத்துச் சீவித்து வந்தான். இரவில் நகரில் உள்ள சிவன் கோவிலின் முன்பாக உள்ள மடத்தில் படுத்து உறங்குவான். அன்று வெள்ளிக்கிழமை. கோயில் மடத்துக்குப் பக்கத்தில் உள்ள சாப்பாட்டுக் கடைக்குச் சென்றான். கடை முதலாளி அவனுக்கு உணவு கொடுத்தார். நன்றாகச் சாப்பிட்டு விட்டு மடத்திற்கு வந்தான். நேற்றுக் காலை அவன் வாங்கி வைத்திருந்த லொத்தர் சீட்டைப் பத்திரமாக மடித்து வேட்டித் தலைப்பில் முடிந்து கொண்டான். அதன் இலக்கங்களை பல முறை மனப்பாடம் செய்து கொண்டான். சிறிது நேரம் படுத்து உறங்க எண்ணினான். மடத்தின் ஒரு மூலையில் படுத்துக்கொண்டான். சிறிது நேரத்தில் கண்ணயர்ந்தான் அவன்.



பக்கத்தில் ஒருவர் பத்திரிகையும் கையுமாக நிற்பது தெரிந்தது. அது அன்றைய பத்திரிகையின் முதற்பக்கத்தில் லொத்தர் சீட்டு முடிவுகள் பிரசுரமாகியிருந்தன. அதனையே அவரும் உன்னிப்பாகப் படிப்பதைச் சோமன் கண்டான். பக்கத்தில் சென்று பத்திரிகையை எட்டிப்பார்த்த படி நின்றான். பத்திரிகையை வைத்திருந்தவர் இவனைப் பார்த்தார். அவருக்கு அவன் மீது அனுதாபம் பிறந்து. 'என்ன பார்க்கப் போகிறீர்?' என்று கேட்டார். அவர் கேட்டதும் சோமனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து. 'ஐயா! இந்த பத்திரிகையில் லொத்தர் சீட்டு முடிவுகள் இருக்கின்றனவே அதைத்தான் பார்க்க ஆசைப்படுகிறேன்' என்று கூறினான். அவரும் பத்திரிகையைக் கொடுத்தார். சோமன் ஒவ்வொரு இலக்கத்தையும் உன்னிப்பாக கவனித்தான் திரும்பத்திரும்ப பார்த்தான் முதற் பரிசு பெற்ற இலக்கம் ஊ1...2...0...7...6..5 என்று அதில் இருந்தது. உடனே அவனுக்கு ஆனந்தம் எல்லை மீறியது. 'இதோ நான் பரிசுவாங்கப் போகிறேன். இன்றைக்கே கொழும்பு செல்ல வேண்டும். துள்ளி எழும்பினான்' அவன் பார்த்த போது பக்கத்தில் எவரும் இல்லை. பக்கத்தில் வாகனங்கள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன. தன் நிலையினை உணர்ந்தான். தான் கண்டது கனவு என்பதை உணர்ந்து கொண்டான். 'ஏழைக்கு ஏது இன்பம்' என்று எண்ணினான்.- சு.காபிலன், தரம் - 5A,யா/ மானிப்பாய் சோதிவேம்படி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா?78

01. இலங்கை மத்திய வங்கியின் ஆளுன ரின் பெயர் என்ன?
02. நீல நிற இரத்தத்தை உடைய உயிரினம் எது?
03. புதிதாக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கண் சத்திர சிகிச்சை நிபுணராக நியமிக்கப்பட்டவர் யார்?
04. கல்வி அமைச்சினால் தேசிய பாட சாலையாகத் தரமுயர்த்தப்பட்ட பாட சாலை எது?
5. யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முதற்தடவையாக 30 சக்கர நாற் காலிகள் வழங்கிய நிறுவனம் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 30.10.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? 77 இற்கான சரியான விடைகள்

1. 26 ஆவது பட்டமளிப்பு விழா.
2. கிளிநொச்சி.
3. வ.ஜஸ்மினன்.
4. ஒக்டோபர் - 15.
5. கணபதிப்பிள்ளை வே.கா.

### பரிசுபெறுவோர் விவரம்

1. ஜெ.துவாரகா, தரம் - 4C
யா.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
2. சி.சிவநயனி, தரம் - 2F
யா.இந்து ஆரம்ப பாடசாலை.
3. பா.துவாரகன், தரம் - 4
யா.நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
4. த.ரிக்ஷன், தரம் - 9E
யா.மத்திய கல்லூரி.
5. தி.சுதன், தரம் - 9C
உடுப்பிட்டி அ.மி.க.




## பழமொழிகள்

★அச்சாணியில்லாத தேர் முச்சாணும் ஓடாது.
★இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
★இளங்கன்று பயமறியாது.
★கந்தையானாலும் கசக்கிக்கட்டு.
★காகம் திட்டி மாடு சாகாது.
★குடிப்பது நீர் கொப்பளிப்பது பன்னீர்.
★கடுகு சிறியது காரம் பெரியது.
★ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.



த. அனோஷா, தரம் - 4 A,
சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை.

## விடுகதைகளும் விடைகளும்

★மேட்டு மேலே மிளகாய்ச் செடி அது என்ன?
மூக்குத்தி
★மஞ்சள் ஆஸ்பத்திரி வெள்ளை டாக்டர் அது என்ன? வாழைப்பழம்
★அம்மா அழுகிறாள். பிள்ளை சிரிக்கிறாள் அது என்ன? வானம்,பூமி
★பிறந்த பின் வளர்ந்தது வளர்ந்த பின் மறைந்தது அது என்ன? பற்கள்
★ இராத்திரி கூடிய உறவினர்களைக் காலையில் காணவே காணோம் அது என்ன?
நட்சத்திரங்கள்

சு.ஷாமதிலவி, தரம் 9 B,
யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலம்.

## வீடு நல்ல வீடு

வீடு வீடு வீடு
மிக்க நல்ல வீடு
எங்கள் அப்பா கட்டிய
இனிய பெரிய வீடு
ஓடு வேய்ந்த வீடு
ஒழுக்கில்லாத வீடு
பண்டம் பணம் வைத்துப்
பாதுகாக்கும் வீடு

நே. தமிழினி,
தரம் - 2A,
கிளி/ கிளிநொச்சி ம.க.வி.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..........................................................
தரம் :-..........................................................
பாடசாலை :-..........................................................
..........................................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 135

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | | ■ | 10 | | | ■ |
| ■ | | ■ | 11 | | | ■ | 12 |
| 13 | | 14 | | ■ | 15 | | |
| | ■ | 16 | | 17 | | ■ | |
| 18 | 19 | | ■ | | ■ | 20 | |
| 21 | | | | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. நூறு விடயங்களை ஒரே சமயத்தில் நோக்கு பவன்/ எந்நேரமும் அவதானத்துடன் இருப்பவன்.
2. சபை.
7. பெரிய நிலப்பரப்பு/ தத்து.
8. ரகளை/ ஆரவாரம்/ குழப்பம்.
9. திடீரென.
10. பயன்/ பெறுபேறு.
11. வலு.
13. நான்கு ரகம்.
15. பங்கு.
16. ருதுவடைதல்.
18. பக்குவம்.
20. அரைவாசி.
21. கூட்ட/ பெருக்க உதவும்.

### மேலிருந்து கீழ்

1. சேறு.
2. கடந்து செல்லல்.
3. தேர் இழுக்கும் கயிறு.
4. தாங்கள்.
5. ஒன்றுக்கு ஒன்று இணை/ ஒப்பானது என்பதைக் குறிக்கும்.
6. ஒரு மொழி.
8. அலட்டுதல்/ ஓயாமல் பேசல்.
10. பன்மையைக் குறிக்கும்.
11. விரோத மனப்பான்மை/ எதிர்த்தன்மை.
12. தீர்ப்புக் கூறுபவர்.
13. நான்கு முறை பத்து.
14. மரமஞ்சள் போன்ற ஒரு மருத்துவத் தாவரம்.
17. வழங்குக.
19. மறைவில் அடிப்பது.
20. பிரேதம் எடுத்துச் செல்வது இதில்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டு வதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றி லும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இல.133 இல் மேலிருந்து கீழ் கட்டம் 11 இற்கான தரவு 'சிவப்பு இரத்தம்' தவறிவிடப்பட்ட போதிலும் பெரும்பாலான வாசகர்கள் அதற்கான சரியான விடையைப் பூர்த்தி செய்திருந்தனர். இடம்பெற்ற தவறுக்கு வருந்துகிறோம்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 133 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சாவகாசம். (5)நடு. (6) திருமதி. (7)பல். (8)வான். (9)தூங்குக. (11)செய். (12) வரகு. (13)தரம். (14)வினா. (15) குமரன். (17)நண்பி. (18) ருது (19)முகாம். (21)திரைமறைவு. (22) கனா.

**மேலிருந்து கீழ்**

(1)சாதி. (2)வருவாய். (3)காமன். (4)சதி (5) நல்கு. (7) பங்கு. (9)தூரம். (10)கன்னாபின்னா (11) செங்குருதி. (12)வரன்முறை. (13)தர. (14) விண். (16)மதுரை. (17)நம். (20)காவு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 133 இற்கான சரி யான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **க.யமுனா,** சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு** — **திருமதி கோமதி தர்மலிங்கம்,** 'அருணோதயம்', நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு** — **ஏ.எம்.கமால்,** இல.24, ஏ.பி.லேன், சோனகதெரு, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** — **யோகநாதன் கௌதமி** குடமியன், வரணி.

**5 ஆம் பரிசு** — **இ.ரம்ஜா,** 2 ஆம் கட்டை, கல்வயல், சாவகச்சேரி.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 135**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 03.11.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.133இல் வெற்றி பெறுவோர் களது விவரம் 07.11.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### பாராட்டுப் பெறுவோர்

(1) **சி.ஜிந்துஜா,** யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

(2) **த.தேனுஜா,** யா/நடராஜா வித்தியாலயம், வேலணை.

(3) **சி.தர்மகுலராசா,** இல.106, அம்பலவாணர் வீதி, உடுவில்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# மோகவாசல்

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிருகவேட்கையினால் அலைப்புற்றான். முன்னே ராஜனாயிருந்த காலத்தில் போகசமுத்திரங்களில் சளைக்காது நீந்தித் திளைத்தவனல்லவா?

தாபத்துடன் 'மேனகா' என முனிவன் கூவி அழைத்தான்.

தேவர்கள் களிகொண்டு துள்ளினர். ரிஷிகள் 'ஓம்' எனக் கேலியாக மந்திர உச்சாடனம் செய்தனர்.

இறைவன் இதழ்களில் புன்சிரிப்பு. விழிகளில் விஷக்கிறக்கம்.

ரதிதேவி ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள். தன் நாதன் தோள்களில் சாய்ந்தாள்.

கீழே பூமியில்; மேனகா முனிவனை விழுங்கிக் கொண்டிருந்தாள்.

முனிவனது விரதங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. ஈவிரக்கமற்ற அவனது உண்மைத்தேடல் தளர்த்தப்பட்டது. ஒரேவிதமான சலிப்பூட்டும் தடத்திலே அவனது வாழ்க்கை செல்லலாயிற்று. திகட்டும் வரை மேனகையை அவன் தழுவிக் கிடந்தான்.

ஞானத்தை எய்துவதற்குப் பதில், குழந்தையை ஏந்த வேண்டியவனானான் முனிவன்!

முனிவனின் காய்ந்துப்போன கரங்களில் குழந்தை வீரிட்டழுதது. விதி சிரித்தது. கானகம் மானிட வாழ்வின் விசித்திரங்களைத் தரிசித்தலில், பெருமூச்செறிந்து ஓய்ந்தது.

மேனகைக்கு முனிவனிடம் சலிப்புத் தட்டிற்று. முனிவனது தழுவல்களில் முன்பு போல மூழ்கடிக்கும் ஆவேசம் இருக்கவில்லை. தவிர, தேவலோகத்தின் சௌகர்ய வாழ்வு எங்கே, கிழங்கையும், கனியையும் புசித்து தர்ப்பையின் மீது உறங்கும் இந்த மானிடன் எங்கே?

போகப் போக முனிவனின் உடலில் இன்ப வேட்கை குன்றிற்று. ஆண்டாண்டு காலமாக அடக்கிவைத்திருந்த இந்திரியங்கள் பீறிட்டுப் பாய்ந்து சென்றதும், முனிவனுக்குப் பெண்ணைக் கூடுவதில் ஒருவிதமான யந்திரீகப் பாங்கு மேலோங்கிற்று. மேனகையின் மேனியில் புதுமை எதுவுமில்லாமல் போவதாகத் தெரிந்தது. அவள் ஒரு சாதாரண பெண்ணே போன்று தோன்றினாள். அவளைக் காண்பதில் சலிப்பும், வெறுப்பும் தோன்றியது.

முனிவன் 'திருதிரு' வென விழித்தான்.

வீணை ஒலி தூரே கேட்டது. நாரதனின் மிதியடிகளின் ஓசையும் கலந்து வந்தது.

கிண்டலுக்கும், கலகத்துக்கும் பெயர் பெற்ற நாரதன்....

முனிவன் கூனிக் குறுகி நின்றான். அதளபாதாளத்தில் வீழ்ந்து புரள்வதாய் உழன்றான்.

ஒரு பொறி தட்டிற்று.

மோகம் என்பது ஒரு வாசல் தான். கண்ணையும் கருத்தையும் பறிக்கும் அலங்காரமான மாயவாசல். அந்த வாசலை ஒருதரம் நிதானமாகக் கடந்துவிட்டால் அதற்குமப்பால் பெரும் அதிசயங்கள் ஒன்றும் நிகழக் காத்திருக்கவில்லை என முனிவன் உணர்ந்தான். மோகவாசலைக்கடக்கும் தருணத்தில் ஏற்படும் கணநேரச் சிலிர்ப்புக்காக, ஆண்டாண்டு காலமாகக் கட்டி வளர்ந்த தனது தேஜஸை இழந்து விட்டோமே எனக் கலங்கினான்.

வசிஷ்டனின் பரிகாசத்துக்கு ஆளாவோமே எனவெண்ணி ஏங்கினான்.

முனிவன் மேனகையைக் கடைசித் தடவையாக அழைத்தான். அவனது குரலில் வழமைக்கு மாறான ஏதோ ஒன்று இருந்தது.

மேனகை அஞ்சினாள். சாபத்தை எதிர்கொள்ள, நடுங்கும் இதழ்களுடன் காத்து நின்றாள்.

முனிவனோ, ஒரு சிசுவை ஏந்துதல் போன்று அவளை மென்மையாகத் தழுவி நேத்திரங்களிலும், நுதலிலும் முத்தமிட்டான்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசற்கதவை நீ எனக்காகத் திறந்து விட்டாய்!"

மேனகையை அழைத்துச் செல்ல மின்னல்கள் இறங்க ஆரம்பித்தன.

"ஸ்வாமி.... தங்களது குழந்தை....?"

"குழந்தை என்னுடையதல்ல பெண்ணே.... அது பூமியின் புத்திரன்.... பூமி அவனைக் காக்கட்டும்." என்று மிகத் தெளிவுடன் பதில் சொன்னான் விசுவாமித்திரன்.

முனிவன் தனது பயணத்தை மீண்டும் மிக நிதானத்துடன் ஆரம்பித்தான். மிக அடர்ந்த கானகங்களையும் பனிபடர்ந்த மலைகளையும் நோக்கி அவன் சென்றான்.

மேனகை அவன் சென்ற திக்கை நோக்கி சிரம் தாழ்த்தி ஒருமுறை தொழுதாள். அவனது பாததூளியை எடுத்து சிரசில் தரித்துக் கொண்டு, பிரகாசமான ஒரு மின்னலுடன் மறைந்தாள்.

நிராதரவாக விடப்பட்ட குழந்தை அழுதது. வாழ்க்கை எதிரே நின்று அதைப் பயமுறுத்தியது. அழட்டும்! பூமியில் பிறந்தவர்கள் அழாமல் இருத்தல் கூடுமா?

விசுவாமித்திரனின் உறுதிமிக்க பயணத்தைக் கண்டு தேவர்கள் வெட்கித் தலை குனிந்தனர். ரிஷிகள் இடிந்தனர்.

"ஹே!.... முனிசிரேஷ்ட, உனது இஷ்டசித்தியை நீ அடைவாய்" என ஒரு அசரீரி முழங்கிற்று.

தேவலோகம்.

இறைவன் முகத்தில் சதா குமிண்சிரிப்பு. கண்களில் விஷக்கிறக்கம்.


இறைவிக்கு ஒரே வியப்பு. கூடவே சந்தேகம்.

"நாதா, தாங்கள் முனிவனுக்கு உதவி செய்தீர்களா, அல்ல தேவர்களுக்கா?"

"யாருக்கும் எனது உதவி தேவையில்லை, உபத்திரவமும் தேவையில்லை. அவரவர் அவரவருக்குரிய பாதையில் செல்லட்டும். இடையிடையே நான் கொஞ்சம் விளையாடுவேன். அதிலொரு இன்பம் பொழுது போகாதே!" என அலுத்துக்கொண்டான் இறைவன்.

நிசப்தம்.★

# தமது இசை வழங்கல்களால் ரசிகர்களை இசைவித்த மேதை கலாநிதி பஞ்சாபிகேசன்



**இசை உலகில் தனித்துவத்துடன் சேவையாற்றியவர் இவர். யாழ். பல்கலைக் கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்று இசை உலகிற்கு மட்டுமல்ல தென்மராட்சிப் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்தவர் நாதஸ்வர வித்துவான் மு.பஞ்சாபிகேசன். அவரது இசைப் பணி குறித்த கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

சிலரிடம் தோன்றிப் பலரிடம் சென்றால் அது கலை. பலரிடம் தோன்றிச் சிலரிடம் சென்றால் அது கலையே அல்ல. ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை தான் ஒரு பெரும் கலைஞர் தோன்றுவதுண்டு. என்பது நம்முன்னோர் வாக்கு.

ஒருவன் தன் உணர்ச்சிகளை கவிதை வடிவிலும், இன்னொருவன் சிற்ப வடிவங்களிலும் மற்றொருவன் இசை வடிவங்களை உருவாக்கி இசைத்தும் மகிழ்விக்கின்றனர். இவர்களைக் கலைஞர்களாகவும் மற்றவர்களை ரசிகர்களாகவும் பார்க்கின்றோம்.

இத்தகைய கலைஞர்களுள் போற்றப்படுபவர்கள் இசைக் கலைஞர்கள்.

இசை என்பது ஒரு உலகப் பொது மொழியாக இருப்பதே இதற்குக் காரணமாகும். இசையும் கலையும் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு வழிகளில் ரசிகர்களைச் சென்றடைகின்றன. அவற்றில் மக்களை இசையால் இசைவித்த வடிவங்களுள் ஒன்றுதான் நாதஸ்வர இசை வடிவமாகும்.

நாதஸ்வர இசையும் படிப்படியாக இசை வளர்ச்சியில் முன்னேற்றத்தை உண்டுபண்ணியபோது மக்கள் அதன் தன்மையை உணர்ந்து ரசிக்கத் தொடங்கினர். இத்தகைய ரசனையே நாதஸ்வரக் கலைஞர்கள் பலர் உருவாவதற்கு உந்துகோலாக அமைந்தது. ஒரு சிறந்த கலைஞர் முன்னேறுவதற்கு ரசிகர் களே முழுமுதல் காரணகர்த்தாக்கள் ஆகின்றனர். ரசிகர்களால் உருவாக்கப்படுபவரே கலைஞர் ஆகிறார்.

நமது கர்நாடக இசையின் அடித்தளமாக இருந்த இராஜவாத்தியம் நாதஸ்வரமாகும். இவ் வாத்தியத்தைக் கையாள்பவர் ரசிகர்களது மனங்களைக் கொள்ளை கொள்ளும் இசை மேதைகள் எனலாம். ஈழத்திலும் சரி இந்தியாவிலும் சரி கோயில் பிரவாகங்களிலும் தேரோடும் வீதிகளிலும் மணிக்கணக்காக நாதஸ்வரக் கச்சேரி செய்து தங்கள் மேதாவிலாசத்தை இவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

**நாதஸ்வர கானத்தால் மனதை மயங்கச் செய்த இசை வள்ளல்**

இசை என்பது கடல் போன்றது. பரந்து விரிந்த அந்த இசைக் கடலில் இசை மேதைகள் சாகித்திய கர்த்தாக்கள் என நல்முத்துக்கள் விளைந்துள்ளன. அப்படிப்பட்ட நல்முத்துக்களில் ஒரு முத்தாக, இசையுலகின் சொத்தாக நாதவித்தாக நமக்குக் கிடைத்திருப்பவர் தான் தமது மணியான நாதஸ்வர கானத்தினால் கேட்போர் மனதை மயங்கச் செய்யும் இசைவள்ளல், நாதஸ்வர கலாமணி கே.எம்.பஞ்சாபிகேசன் ஆவார்.

யாழ்.குடாநாட்டிலே கலைப் பாரம்பரியத்துக்கு ஒரு நிலைக்களனாய் விளங்குகின்ற தென்மராட்சி சாவகச்சேரியில் நல்லதோர் இசைப் பாரம்பரியத்தின் தோற்றுவாயாக அமைந்த கலைக் குடும்பத்திலே கலைப்பணியாற்றுவதற்கென அருமருந்தென தமிழ் மகனாக அவதரித்தார் பஞ்சாபிகேசன். ஈழத்தில் இசைப் பாரம்பரிய வழிவந்த கலைஞர்களுள் புகழ்பெற்ற கலைஞர் சிலருள் முதுபெரும் நாதஸ்வர வித்துவான் மு.பஞ்சாபிகேசன் முதன்மையானவராவார். நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் எழுபது வருடங்களாகக் கலைப்பணியை ஆற்றி வருகிறார். இவரது இசைக் கச்சேரிகள் நிகழாத கோயில்கள் யாழ்.குடாநாட்டில் இல்லை என்றே கூறலாம். எழுபது வருடங்களில் கோயில்களிலும் மங்கள நிகழ்வுகளிலும் இவரது கச்சேரிகள் ஏராளம் நிகழ்ந்துள்ளன.

1924 ஜூலை 01 ஆம் திகதி அன்றைய புகழ்பூத்த தவில் வித்துவான் கே.முருகப்பாபிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்த மகனாக இவர் அவதரித்தார். ஆரம்பக் கல்வியைச் சாவகச்சேரி இந்து பாடசாலையில் கற்று தனது 10 ஆவது வயதில் பாடசாலைக் கல்வியுடன் அன்றைய இசை மேதைகளான சண்முகம்பிள்ளை, அப்புலிங்கம்பிள்ளை ஆகியோரிடம் முறைப்படி நாதஸ்வர இசையைப் பயின்று, பின்னர் யாழ்ப்பாணம் இராமையாபிள்ளை, பீ.எஸ்.கந்தையாபிள்ளை ஆகியோரிடம் மாணவனாக இருந்து நாதஸ்வர இசை நுணுக்கங்களைப் பயின்றார்.

தனது 14 ஆவது வயதில் பருத்தித்துறை சித்தி விநாயகர் ஆலயத்தில் தனது முதலாவது கச்சேரியை நிகழ்த்தி இசை வாழ்வில் ஆரம்பப் புள்ளி பதித்தார்.

முன்னைய காலங்களில் நிகழ்வுகள் எதுவாயினும் ஒரு தவிலும் ஒரு நாதஸ்வரமுமே பயன்படுத்தப்பட்டு வந்தன. அந்த வழக்கத்தை மாற்றியமைத்த பெருமை இந்தக் குடும்பத்தையே சாரும். இவர் தனது தந்தை, மாமன், தம்பி ஆகியோருடன் ஒரு மேடையில் அமர்ந்து இசைக் கச்சேரி நடத்தி காலப்போக்கில் நால்வர் கொண்ட இசைக் குழுக்களாகச் செயற்பட முன்னுதாரண மாகத் திகழ்த பெருமை இவர்களையே சாரும்.

பஞ்சாபிகேசன் அவர்கள் தனது 18 ஆவது வயதில் இந்தியா தமிழ்நாடு சென்று அக் காலத்தில் நாதஸ்வர இசையால் அனைவரையும் மயங்கச் செய்த வித்துவான்களான திருவாவடுதுறை கக்காயி நடராஜசுந்தரம்பிள்ளையிடமும் ஐயம்பேட்டை வேணுகோபால்பிள்ளையிடமும் பயிற்சி பெறும் பாக்கியம் பெற்றார்.

இசைப் பயிற்சியை முடித்து யாழ்ப்பாணம் திரும்பிய பஞ்சாபிகேசன் தான் பயின்றவற்றை ரசிகர்களின் ரசனைக்கேற்றவாறு நாதஸ்வரம்மூலம் இசை பொழிந்து அனைவரின் உள்ளங்களையும் மகிழ வைத்தார்.

'கொண்டைக்கார நாதஸ்வர வித்துவான்' எனப் பெயர் பெற்று ரசிக சிரோன்மணிகளின் நாடித்துடிப்பை நன்கு அறிந்து தேவையான இடங்களில் பிரயோகித்து கச்சேரிகளில் நிறைவைத் தந்துவிடுவார் இவர்.

இவர் 1949 இல் அளவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் தம்பதியின் மகளான இரத்தினம் என்பவரை தனது வாழ்க்கைத் துணையாக ஏற்று ஆறு பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இவர்களது இரு புதல்வர்களான எம்.பி.நாகேந்திரன், எம்.பி.விக்னேஸ்வரன் ஆகியோர் சர்வதேச நாடுகளில் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான்களாகத் திகழ்கின்றனர்.

**தமிழகக் கலைஞர்களுடன் சேர்ந்து கச்சேரி செய்தவர்**

முன்னர் ஒரு காலகட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆலய உற்சவங்களுக்கு அழைத்து வரப்படும் நாதஸ்வர வித்துவான்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சேவைகளை வழங்கி வந்தனர். அக் காலங்களில் இந்த நாதஸ்வரக்




கலைஞர்களுடன் அமர்ந்திருந்து கச்சேரி செய்து தனது திறமையை மேலும் வளர்த்துக் கொண்டார்.

அம்பல் இராமச்சந்திரன், கோட்டூர் இராசரத்தினம், தர்மபுரி கோவிந்தராஜன் மெற்றாஸ் நடராஜசுந்தரம் போன்றோர்களுடன் சேர்ந்து கச்சேரி செய்தமை தம்மால் ஒருபோதும் மறக்க முடியாத அனுபவம் எனப் பஞ்சாபிகேசன் குறிப்பிட்டார்.

புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர் அமரர் காரைக்குறிச்சி அருணாசலத்தின் பாணியைப் பின்பற்றித் தனது கச்சேரிகளில் நாதஸ்வர சங்கீதத்தின் தனித்துவத்தைப் பேணி வருகிறார்.

**ஐயந்தன்**

யாழ்.மாவட்டத்தில் தனிப்பெரும் தவில் வித்துவானாகத் திகழ்ந்த ''லயஞான குபேர பூபதி'' அளவெட்டி தட்சணாமூர்த்தி சிறிதுகாலம் தவில் வாசிப்பதை நிறுத்தியிருந்தார். அவ்வேளையில் அவரை மீண்டும் இசை உலகிற்குச் சேவையாற்றத் தன்னுடன் இணைத்து இசைவேள்வி நடத்திய பெருமையும் பஞ்சாபிகேசனைச் சாரும்.

நாதஸ்வரக் கலையில் இவரது ஆற்றலை உணர்ந்து இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக் நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் இவரைத் தமது ஊருக்கு அழைத்துப் பெருமைப்படுத்தியதை அவரது வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாகக் கருதுவதாகவும் பஞ்சாபிகேசன் குறிப்பிட்டார்.

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் கச்சேரி செய்து கொண்டிருந்த வேளையில் ''நாகபாம்பு'' ஒன்று மேடையில் தோன்றி இவரது இசையில் மெய்மறந்து ஆடி மறைந்து போனமை அவரது இசைப் பணிக்கு அம்பாள் கொடுத்த அங்கீகாரம் என அந் நிகழ்வை நினைவு கூர்ந்தார்.

சாயி பக்தரான இவர் கடந்த 1996 ஆம் ஆண்டு பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு வாய் பேச முடியாத நிலையில் இருந்து சாயிபாபாவின் அருளால் பாபாவின் பிறந்த தினத்தன்று அனைவருடன் சரளமாகக் கதைத்து எல்லோரையும் திகைப்படையச் செய்தார்.

**இவரது இசைக்கு மதம் தடையில்லை**

நாதஸ்வரக் கலை தொடர்பான தமது கருத்துக்களை அவர் கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்தினார்:

''எனக்குத் தவில் கலையைவிட நாதஸ்வரத்தின் மீது கொண்ட தனிப்பட்ட ஈடுபாட்டினாலும் இந்தக் கலையைப் பயில்வதற்குத் தெரிவு செய்துகொண்டேன்.

காலத்திற்கேற்றவாறு நாதஸ்வரம் பயிலும் முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. நான் பயின்ற காலத்தில் குருகுல வாச முறையில் பயின்றேன். ஆனால் இன்றுள்ள வசதிகள் கலைச் சூழ்நிலைக்கேற்ற வாறு மாணவர்கள் குருவிடம் குறிப்பிட்ட நேரத்தில் பயின்று கொண்டிருக்கிறார்கள். சரியான சூழ்நிலை அமையாததால் தற்போது மாணவர் கள் சாதகம் பண்ணுவது அரிதாக உள்ளது. இதனால் நல்ல தேர்ச்சியுள்ள கலைஞர்கள் உருவாக நீண்டகாலம் தேவைப்படுகிறது''.

இவரின் இசைக்கு மதமொரு தடையில்லை, என்பதற்கு உதாரணமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மீலாத் உல் - நபி தின விழாவில் தனது இசையினை ஒரு இஸ்லாமிய சமய நிகழ்வில் வாசித்து முதன்முதலாக தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கௌரவ பதியுதீன் முகம்மது அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த வேளையில் இவரைக் கௌரவிக்கும் பொருட்டு கல்வி அமைச்சினால் ''நாதஸ்வர கான வாருதி'' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளார். தென்மராட்சி இலக்கிய மன்றத்தினர் ''நாதஸ்வர வித்துவ சிரோன்மணி'' எனும் பட்டத்தினையும், திருக்கேதீஸ்வரம் ஆலயத்தினர் ''இசைவள்ளல் நாதஸ்வர காலமணி'' என்றும் பட்டத்தினையும், சுன்னாகம் சிவன் கோயில் நிர்வாகத்தினர் ''நாதஸ்வரமானி'' என்றும் பட்டத்தினையும், இலங்கை அரசின் முதலாவது இந்து சமய கலாசார அமைச்சராக இருந்த செல்லையா இராசதுரை அவர்கள் கலை இலக்கிய விழாவில் ''ஸ்வரஞான திலகம்'' எனும் பட்டத்தினையும், 1993 இல் நடைபெற்ற கம்பன் விழாவில் கம்பன் கழகத்தினர் ''இசைப் பேரறிஞர்'' பட்டத்தையும் இவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு கலாசார அமைச்சராக இருந்த லக்ஸ்மன் ஜயக்கொடி அவர்களால் ''கலாபூஷணம்'' விருதும், வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் விழாவில் ''ஆளுநர் விருதும்'' இவருக்கு வழங்கப்பட்டன. யாழ்.இந்து சமய பேரவையினால் ''கலாபூசணம்'' பட்டமும், இவ்வாண்டு யாழ்.பல்கலைக்கழகத்தினால் கௌரவ ''கலாநிதி'' பட்டமும் வழங்கப்பட்டன.

சுமார் 70 வருட காலமாக நாதஸ்வர உலகில் சிறந்து விளங்கும் இவர் இலங்கை, இந்தியா, அயல் நாடுகள் ஆகியவற்றில் இசை நிகழ்ச்சிகளை நடத்தி பெருமை சேர்த்ததோடு நின்று விடாமல் வானொலி கள், தொலைக்காட்சிகளி லும் நாதஸ்வர இசை நிகழ்ச்சிகளை வழங்கி இசை மாணாக்கர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்

# சேவை நலன் பாராட்டு விழாச் சிறப்புமலர்

### பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினை 21.06.1998 இல் உருவாக்கியதில் மகத்தான சேவை புரிந்த அதிபராக திரு.மு.ஜெயகுமார் அவர்கள் திகழ்கின்றார். கடந்த 12 வருடகாலமாக எமது சங்கத்தின் தலைவராக இருந்து பல நூறு அங்கத்தவர்களைத் திரட்டி பாடசாலையின் வளர்ச்சியில் பழையமாணவர் சங்கத்தின் பங்களிப்பினையும் பெற்றுக் கொண்ட அதிபர் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்.

அவர் தனது பதவிக் காலத்தில் பாடசாலையின் உட்கட்டுமான வசதிகளை அபிவிருத்திசெய்து மாணவர்களது கற்றல் செயற்பாடுகளையும் மெருகூட்டி பாடசாலையின் பெறுபேற்றினையும் உயர்த்தியது மட்டுமன்றி எமது மாணவர்கள் தேசியமட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள வைத்த பெருமையும் அவருக்கே உரியதாகும்.

நேரம் தவறாமைக்கு, கடமையை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டு அன்புடன் கண்டிப்பும் இணைந்து நிர்வாகத்தை வழிகாட்டியமைக்கு அவரது வழிகாட்டலில் உயர்ந்து நிற்கும் மாணவர்களே சாட்சி. அவரது ஓய்வுக்காலம் சிறந்து விளங்கி குடும்பத்துடன் குதூகலமாய் நீடு வாழ எல்லாம் வல்ல துரையன் வளவு தான்தோன்றிப் பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகிறோம்.

*பழைய மாணவர் சங்கம்,*
*யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்.*

### அதிபர் பதவிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, சீரியபணி, சிறந்த முகாமைத்துவம் நேரமுகாமைத்துவம், திறமை ஆகிய தலமைத்துவப் பண்புகளைத் தன்னகத்தே கொண்ட சிறந்த நிர்வாகியாக அதிபர் திரு.மு.ஜெயகுமார் திகழ்ந்துள்ளதுடன் அதிபர் பதவிக்கு இலக்கணமாகவும் விளங்கியுள்ளார். இவரது ஓய்வுக்காலம் நீண்ட ஆயுளுடன் மகிழ்ச்சிகரமானதாகவும், பயனுள்ளதாகவும் அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

*இ.கணேசானந்தன், அதிபர்,*
*யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம், சுழிபுரம்.*

**Kumaran Hardware**
Dealer Building Materials, Paint & Electronic goods
Main Street, Pannagam.



**உயர்திரு. முத்துக்குமாரு ஜெயக்குமார்**
(S.L.P.S.1)B.A,Dip.in.Edu, M.Ed.

### கல்விகற்ற பாடசாலைகள்

★ ஆரம்பக் கல்வி:
யா/ கொக்குவில் சிலோன் கிறிஸ்தவ தமிழ் கலவன் பாடசாலை.
★ இடைநிலைக் கல்வி: யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி.

**சேவை விபரம்**

- வ/பெரிய புளியங் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 17.01.1972- 14.05.1972
- வ/ பேயாடி கூழாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 15.05.1972- 31.08.1972
- வ/ ஓமந்தை மகாவித்தியாலயம் - 01.09.1972-07.01.1975
- யா/பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை 09.01.1975- 31.12.1976
- இ/சாந்த அலோசியஸ் கல்லூரி - 01.01.1977- 19.01.1978
- இ/ இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம் 20.01.1978- 05.04.1980
- இ/இரத்தினபுரி மாவட்டம்- சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் 06.04.1980- 31.12.1981
- மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்- 01.01.1982- 31.05.1985
- யா/ அராலி இந்துக்கல்லூரி- 01.06.1985- 31.05.1989
- யா/ அராலி வடக்கு அ.மி.த.க.பாடசாலை- அதிபர் - 01.06.1989- 17.02.1998
- யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம் அதிபர் 18.02.1998- 14.10.2010

### பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வாழ்த்து

எண்பதாவது அகவையை நிறைவு செய்த தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம் தனது வளர்ச்சிப் பாதையில் பல்வேறு அதிபர்களின் சேவையை நிர்வாக செயற்பாட்டில் இணைத்து நின்றது.

எனினும் அதிபர் திரு.மு.ஜெயகுமார் அவர்களின் சேவைக் காலம் பாடசாலையின் ஒரு பொற்காலமாகும். கடமையே கண்ணாகக் கொண்டு செயற்பட்ட இவர் பாடசாலையின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிய பெருமைக்குரியவருமாவார்.

இலங்கை அதிபர் சேவையில் உயர்தரத்தை அடைந்தபோது பெரிய பாடசாலைகளுக்கு அதிபராகச் செல்லும் வாய்ப்புக்கள் கிடைத்தன. எனினும் எம் பாடசாலை மீதிருந்த பற்றினால் அவற்றை ஏற்றுக் கொள்ளாதிருந்தார்.

பாடசாலைக்கு வளம் சேர்க்கும் அதிபராக வரலாற்று முத்திரை பதித்த அதிபர் அவர்கள் பாடசாலையின் பௌதிக வளத்தையும் நிதி வளத்தையும் அதிகரிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்.

www.vickneswara.yolasite.com என் ற இணையத்தளத்தை உருவாக்கி எமது பாடசாலையை முழு உலகத்துடன் நெருங்கிய தொடர்புகொள்ளச் செய்தமை இவரது காலத்திலேயே ஆகும்.

சிறந்த அதிபராக எல்லோரினதும் பாராட்டைப் பெற்றுக்கொண்ட இவர் ஓய்வுக் காலத்தில் சிறப்பான வாழ்வு வாழ துரையன் வளவு பிள்ளையாரையும், பூதராசி அம்மனையும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

### ஆசிரியர் கழகத்தின் வாழ்த்து

பள்ளிச் சிறார்களுக்கு பாகற்காயாம் கணக்கை
வெல்லமாய் மாற்றி விருப்புடனே ஊட்டினீரே
பதின்மூன்று ஆண்டு பாடசாலையின் உயர்வுக்காய்
அந்தி பகல் பாராது உழைத்தவரே!
பூண்ட பணியாவும் புதுமையுற வைத்தவரே!
ஏதிலியாய் வந்த ஏழ்மை மிகு மாணவரை தோள் -
தனியே தட்டி துணிவு பெறச் செய்தவரே!
பணி பலவே செய்திட்டீர் மணி பலவே செலவிட்டீர்.
அணி கலனாய் பாடசாலைக்கு அற்புதமாய் மிளிர்ந்திட்டீர்
மணி விழாக் காணுகிறீர் மனம் குளிர்ந்து வாழ்த்துகின்றோம்.
பிணியாதும் அணுகாது பீடுற்று வாழியவே

*யா/ தொல்புரம் விக்கினேஸ்வர ஆசிரியர் கழகம்.*

**மகாலக்ஷ்மி களஞ்சியம்**
சீட்டிழுப்புத் திட்டம், கட்டடப்பொருள் வியாபாரம்
மடத்துப்பிள்ளையார் கோயிலடி, தொல்புரம்.

## ஸ்ரீமுருகன் அருள்மார்க்கண்டு சுவாமிகளின் 83ஆவது ஜெயந்தி தின விழா



இன்று (24.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9. மணியளவில் ஸ்ரீமுருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகளின் 83ஆவது ஜெயந்தி தின விழா லோட்டன் றோட், மார்க்கண்டேயர் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள ஸ்ரீமுருகன் அருள் நிலையத்தில் நடை பெறும். சுவாமிகளின் அருளாசி பெற்ற முருகன் அடியார்கள் ஜெயந்தி தின விழாவினை நடத்தவுள்ளனர். சுவாமிகளின் அன்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து அருளாசி பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முருகன் அடியார்கள்.

ஸ்ரீமுருகன் அருள்நிலையம்,
லோட்டன் றோட்,
மார்க்கண்டேயர் வீதி, மானிப்பாய். (90202)

ஸ்ரீ சாயிராம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




06.10.2010 அன்று யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற
செல்வி சுவர்ண்ஜா சோமசுந்தரம்
B.A. (Hons) தமிழ் சிறப்பு
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் பலபட்டங் களையும் சிறப்புக்களையும் பெற்றுஉயர ஸ்ரீ சாய்பாபாவை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தங்கை லண்டன் சுகர்ண்ஜா, சித்திரன், தம்பி அஜே, நிருஜா, தம்பி நிலான் கொழும்பு, தம்பி நிமல், பெரியப்பா, பெரியம்மா கொழும்பு, பெரியமாமா, மாமி, மைத்துனர், மைத்துனி நியூசிலாந்து, ராஜ், ராகுல் [illegible]
72/3, பனிக்கர் லேன்,திருநெல்வேலி.

**German Class**
German Deutsch Swiss மொழி வகுப்பு
Embussy பரீட்சைக்கான அடுத்த பிரிவு ஆரம்பம்.
Hospital Road, Jaffna College
தொடர்பு: 077824503

**இறைச்சிக்கோழி விற்பனை**
புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 450 மட்டுமே
விஜயகுமார்,
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

**German Swiss மொழிகள்**
German Swiss மொழி வகுப்புகள்
தமிழ்மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன.
10, Palaly Road,Jaffna.
T.P:0771604823

**வாகனம் விற்பனைக்கு**
32-54 Pajero jeep F/OM/ Year 1988 MIMD, 2.5 மில்லியனுக்கு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0714472411

**காணி விற்பனைக்கு**
சங்கரத்தையில் இரண்டு கடைகளும், 2 பரப்பு 7 குளி காணியும், நல்ல விளைச்சலைத் தரும் கிணற்றுடன் கூடிய 9 பரப்பு வயற் காணியும் வீதி ஓரத்தில் விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி.
இல :0785825403

**மணமகள் தேவை**
யாழ்.கௌரவ கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த அரச சேவையில் உள்ள பொறுப்புக்கள் அற்ற மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. முழு விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல:4082 C/o உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**
62 HP,J.K.4 லிஸ்டர் டீசல் எஞ்சின் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778689705

**சமையல் ஆள் தேவை**
சிறந்த முறையில் சைனிஸ், வெஸ்ரன், இந்தியன் உணவு வகைகள் சமைக்கக்கூடிய Cook தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய
Tel.No:0775174872, 0212228989

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ 1982, ரேவதி, உயரம் 5'8" Australia இல் PR உள்ள,49 பாவமுள்ள Ph.D. [illegible] 4657

**வேலையாள்கள் தேவை**
டயா எலக்ரோனிக்ஸ் ஸ்தாபனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை
* பில் கிளாக்
* காசாளர்
பெண்கள் விரும்பத்தக்கது நேரில் வரவும்
தொடர்பு:
டயா எலக்ரோனிக்ஸ்
இல.6,பலாலி வீதி,
திருநெல்வேலிச்சந்தி. (104963)

**விற்பனைக்கு**
எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ் சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
பிள்ளையார் மெட்டல்
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2097
024 222 0129

**விற்பனைக்கு**
எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:- சுப்பிரமணியம் சரவணபவன்
சிற்ப ஆசாரி, 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

**விற்பனைக்கு**
எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக்குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:- சி.சிவானந்தம்
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A-9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் காத்திரமான வெற்றிகரமான மருத்துவக் கல்விக்கு அடித்தளத்தை உருவாக்கியவர்

# சமூகத்தில் சுகநலம் பற்றிய விழிப்புணர்வை உயர்த்த அரும்பாடுபட்ட பேராசிரியர் நந்தி

**யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின்போது கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதி இடம்பெற்ற கடைசிநாள் நிகழ்வில் 'யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்வி' என்ற தலைப்பில் யாழ்.மருத்துவ பீடாதிபதி, பேராசிரியர் க.சிவபாலன் நிகழ்த்திய பேராசிரியர் செ.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) நினைவுப் பேருரையின் மூன்றாவதும் கடைசியுமான பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

**யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கல்வி 3**

**மாணவரின் ஆராய்ச்சி**

அனேகமான சுகநலம் சார்ந்த பிரச்சினைகள் விஞ்ஞானரீதியாக ஆராயப்படுவதில்லை. ஏனெனில் பாரம்பரிய பாடவிதானப்படி கற்பிக்கப்பட்ட வைத்தியருக்கு ஆய்வு முறைகள் தெரியாது. இத்தகைய வைத்தியர்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பவசமான பரிசோதனைகள் தவறுகளையும் பக்கச்சார்பான அணுகுமுறையையும் கொண்டிருக்கலாம். உலக சுகாதார நிறுவனம் 1988 இல், ''மாணவர்கள் சுகாதார ஆய்வுமுறைகளில் பயிற்றுவிக்கப்படவேண்டும். கற்பித்தலின் ஆழமும் கனதியும் சுகாதார ஆய்வை அறிமுகப்படுத்தல், ஆய்வு முறைகள் பெறுபேறுகள் தீர்மானமெடுத்தல் போன்றவற்றைக் கற்பித்தல் அல்லது மாணவரைச் சுகாதார ஆய்வுகளில் ஈடுபடுத்தல் எனும் வகையில் வேறுபடலாம்'' என அறிவுறுத்தியது. பேராசிரியர் சிவஞானசுந்தரம் மாணவ ஆராய்ச்சித் திட்டத்தைச் சமுதாய மருத்துவப் பாடவிதானத்தில் 1990 இல் சேர்த்தார். அதை இலகுவாக்குவதற்கு அவர் 'ஆய்வைக் கற்றல்' எனும் நூலை எழுதினார். அப் புத்தகம் எல்லா மருத்துவபீட மாணவரிடையேயும் ஆசிரியர் மத்தியிலும் பிரபல்யம் பெற்றது. ஆய்வுகூட ஆராய்ச்சி பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்களால் உயிரிரசாயன வியலூடாக இரண்டாமாண்டு மாணவருக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

**இனப் பெருக்க சுகநலம்**

மருத்துவ பாடவிதானத்தில் இனப் பெருக்க சுகநலம் குறைவாக அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பது பற்றி பேராசிரியர் சிவஞானசுந்தரம் மிகுந்த கவலை கொண்டிருந்தார். பாலியல், பெற்றோராயிருத்தல், இளைஞரின் பாலியல் பிரச்சினைகள் போன்ற விடயங்களை வெளிப்படையாகப் பேச எமது பாரம்பரிய பின்னணி இடம்கொடுப்பதில்லை. மேற்படி விடயங்கள் தொடர்பான புத்தகங்களை எமது நூலகத்துக்குக் கொடுப்பதில் அவர் அக்கறையாக இருந்தார். சுகவாழ்வுக்கான முக்கியமான மேற்படி விடயங்கள் பற்றி நாம் மிகக் குறைவாகவே அறிந்துள்ளோம் என அவர் கூறுவது வழக்கம். அவர் நெறிப்படுத்திய மாணவ ஆராய்ச்சிகளுள் பல இத்துறை சார்ந்தவையாக இருந்தன. எனது யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உரையில் இனப் பெருக்க சுகம் பற்றிப் பேசுவதாக நான் தீர்மானித்தபோது அவர் மிகவும் மகிழ்ந்தார். எமது சமூகத்தின் தனிநபர், குடும்ப மற்றும் சமுதாய சுகநலத்தை மேம்படுத்து வதற்கு இத்துறையில் நாம் அதிகமாக உழைக்க வேண்டியுள்ளது.

**மருத்துவ பாடவிதானத்தை உருவாக்குவதிலுள்ள சவால்கள்**

பாடவிதான உருவாக்கலில் தற்போதுள்ள பாரிய பிரச்சினை, ஒவ்வொரு விடயத்துக்குமான உள்ளடக்கத்தை மாணவரின் எதிர்காலப் பயன்பாடு அடிப்படையில் நியாயப்படுத்தக்கூடிய அளவுக்கு மட்டுப்படுத்துவதாக உள்ளது. உதாரணமாக வெளியிடங்களில் ஆரம்ப சுகநலப் பராமரிப்பு நிலையில் கடமையாற்றவிருக்கும் அல்லது குடும்ப மருத்துவத்துறையில் ஈடுபடவிருக்கும் ஒரு பட்டதாரியின் கற்றல் தேவைகளும் மருத்துவத்தின் பல்வேறு விசேட பிரிவுகளிலும் மேற்படிப்பில் ஈடுபடவிருக்கும் ஒரு பட்டதாரியின் கற்றல் தேவைகளும் பெருமளவில் வேறுபடுகின்றன. மேற்படிப்புக்கான விசேட துறைகள் சிகிச்சை மற்றும் நோய்த்தடுப்புப் பிரிவுகளில் பல்வேறு உப துறைகளாக விரிகின்றன. இவ்வாறு எல்லாத் துறைகளுக்கும் அவசியமான அடிப்படைக் கல்வியை வழங்கவேண்டிய நிலையில் இலங்கையிலுள்ள எல்லா மருத்துவ பீடங்களும் வகுத்துள்ள பாடவிதானம் யாழ்ப்பாணம் உட்பட 300 அலகுகளுக்கு மேற்பட்டதாக உள்ளன. சிறீலங்கா உயர்கல்விக்கான நிர்ணயிக்கப்பட்ட கற்றல் வருடத்துக்கு 30 அலகுகள் மட்டுமே. ஒவ்வொரு மாணவனும் தனது வருங்காலத்திற்குத் தேவையான விடயங்களை மட்டும் கற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டால் மாணவரின் கற்றல் இலகுவாகும். ஆனால், அதற்கேற்ற வகையில் மதிப்பீடு செய்வதற்கும் வழிவகை செய்யப்படவேண்டும்.

மாணவரின் உடனடித் தேவை உயர்தர வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சிக்குத் தயாராக வேண்டி இருப்பதால் மருத்துவபீடத்தில் கற்பிக்கப்படும் நோய்த்தவிர்ப்பு மற்றும் சமூகம் சார்ந்த விடயங்களில் மாணவர் அதிக அக்கறை காட்டுவதில்லை. மேலும் எல்லா மருத்துவபீட மாணவருக்கான திறமைப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டிய தேவை இருப்ப தாலும் எல்லா மருத்துவபீடங்களும் பொதுப்பரீட்சை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாலும் இறுதியாண்டுப் பரீட்சையை எமது விருப்பத்திற் கேற்றவாறு மாற்றியமைக்க முடியாதுள்ளது.

**இணைமருத்துவ உத்தியோகத்தரும் கல்வியும்**

''சுகம்'' என்ற கோட்பாடு உருவாக்கப்பட்ட போது 'நோய்த் தவிர்ப்பு மருத்துவம்' மருத்துவக்கல்வியின் அத்தியாவசியமான பகுதியாகியது. பாரம்பரிய மருத்துவப் பாடவிதானத்துக்குச் சவாலாக விளங்கிய இன்னுமொரு கோட்பாடு ''முதல் நிலை மருத்துவப் பராமரிப்பு''. பேராசிரியர் சிவஞானசுந்தரம் அடிக்கடி உச்சாடனம் செய்யும் மந்திரமாக இவ்விரு பதங்களும் விளங்கின. அல்மா ஆட்டாவில் 1978 இல் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவமான சர்வதேச மகாநாடு ''2000 ஆண்டில் அனைவருக்கும் சுகம்'' எனும் கொள்கையையும் அதை அடைவதற்கு முதல்நிலை மருத்துவப் பராமரிப்பை முக்கியமான அணுகுமுறையாகவும் பிரகடனப்படுத்தியது. அதற்கு முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட சரியான எண்ணிக்கையான மருத்துவ உத்தியோகத்தரை சுகாதாரப் பராமரிப்பு அமைப்பினுள் ஈடுபடுத்துவது மிகமிக அவசியமாகியது. பாரம்பரிய மருத்தவப் பாடவிதான அடிப்படையில் பயிற்றுவிக்கப் படும் வைத்தியர்கள் இச்செயற்பாட்டை முன்னெடுக்கப் பொருத்தமற்றவர்கள் எனவும் கருதப்பட்டது.



ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது போல மருத்துவக் கல்வி என்பது மருத்துவத் துறைக்கான விற்பன்னர்களை உருவாக்குவது. பண்டைக் காலத்தில் வைத்தியர் மட்டுமே மருத்துவத்துறைக்கான ஒரே வகையான விற்பன்னர்களாக இருந்தனர். மருத்துவம் விஞ்ஞான ரீதியாக வளர்ந்து நோய்கள் பற்றியும் அவற்றின் பராமரிப்புப் பற்றியுமான விளக்கம் அதிகரித்துவர பல்வேறு வகையான மருத்துவ சேவை யாளர்கள் உள்வாங்கப்பட்டனர். ஆனால் அவர்கள் வைத்தியரின் கட்டளைகளை நிறைவேற்றும் உதவியாளராகவே கருதப்பட்டனர்.

தாய், சேய் நலனை மட்டுமே கடமையாகக் கொண்டிருந்த பொது மருத்துவ மாதுவைப் பிரசவத்துக்கு முந்திய, பிரசவத்திற்குப் பிந்திய, பிரசவ கால, குழந்தைகள், பள்ளிசெல் லாச் சிறுவர், குடும்பத் திட்ட மிடல், நீண்டகால மற்றும் கடுமையான நோயாளர் போன்ற பலவகையான ஆரம்ப நிலைக் கவனிப்பையும் பல மட்டங்களிலும் சுகாதாரக் கல்வியூட்டலையும் வழங்கக்கூடிய குடும்ப நல உத்தியோகத்தராக மாற்றியதில் பேராசிரியர் சிவஞானசுந்தரமும் பங்காற்றியிருந்தார்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் இணை மருத்துவ சேவையாளரை அறிவூட்டி அவர்களை மருத்துவக் குழுவின் அங்கத்தவராக மதிக்கவேண்டுமென விரும்பினார். அவர் மருத்துவக் கல்வி மற்றும் சமூக மருத்துவம் சார்ந்த பல உலக சுகாதார நிறுவன நியமனங்களில் கடமையாற்றியதோடு இத்துறைகளில் நடத்தப்பட்ட சர்வதேச கருத்தரங்குகளில் பங்காற்றியுமுள்ளார். அவற்றில் இணைமருத்துவக் சேவையாளரின் கல்வியுழ் அடங்கியிருந்தது. இணைமருத்துவ சேவையாளருக்குக் கற்பிக்கும் முழுமையான நிறுவனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உருவாக்க வேண்டுமென அவர் அரும்பாடுபட்டார். அவர் இணைமருத்துவ கல்லூரியொன்றை யாழ். பல்கலைக்கழக ஒருங்கிணைந்த திட்டத்தில் சேர்ப்பிக்கவும் இணைமருத்துவ விஞ்ஞானக் கற்கைநெறிகளை மருத்துவபீட அமைப்பினுள்ளே ஆரம்பிக்கவும் விரும்பினார். அந்த இலக்கை நோக்கிய முதற்படியாக மருத்துவபீடத்தின் நிறுவன எதிர்ப்பார்ப்பு களில் அதைச் சேர்த்திருந்தார். நான்காவது நிறுவன எதிர்பார்ப்பு, ''சுகாதார பராமரிப்பு அமைப்பினுள்ள இணை மருத்துவ உத்தியோகத்தருக்கான கற்கை நெறிகளை வழங்கல்''.

இணைமருத்துவ உத்தியோகத்தருக்கு பட்டப் படிப்பை வழங்குவதன் தேவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது அண்மைக்காலத்தில் உருவான மருத்துவக் கல்லூரிகள் ''மருத்துவ விஞ்ஞானங்களின் பீடம்'' என்ற வகையில் தமக்குப் பெயரிட்டுள்ளமையிலிருந்தும், இணைமருத்துவக் கற்கை நெறிகளுக்கு மாணவரை அனுமதிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளமையிலிருந்தும் தெளிவாகிறது. ஆயினும் முன்னர் நிறுவப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் மருத்துவர் களை மட்டும் கற்பிப்பது எனும் நிலையிலிருந்து மாற முடியவில்லை. பேராசிரியர் சிவஞானசுந்தரம் யாழ். மருத்துவ பீடத்தை மருத்துவ விஞ்ஞானங்களின் பீடமாக மாற்றுவதற்கு அவ்வப்போது முயன்றபோது இங்கிருந்த போர் நிலைமையும் ஆசிரியர் பற்றாக்குறையும் அதைச் சாத்தியமற்றதாக்கி விட்டன. உலக சுகாதார நிறுவனத்தின் செயல் மையம் 1960 களில் மருத்துவ பீடங்களின் ஆளணி விருத்தியாக இருந்து, மருத்துவக் கல்வியை மாற்றியமைப் பதற்காக மாறி இறுதியாக சுகநல ஆள்ணி விருத்தியாக மாறுவதற்குப் பேராசிரியர் சிவஞான சுந்தரம் அவர்களும் ஒரு காரணராக இருந்ததுடன் அதை நடைமுறைப்படுத்தவும் உதவினார்.

**யாழ்ப்பாணத்தில் இணைமருத்துவக் கற்கைநெறிகள்**

எண்பதுகளின் நடுப்பகுதியில் வடக்குக் கிழக்கு வைத்தியசாலைகளில் நிலவிய கடுமையான ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில் தனியார் இணைமருத்துவக் கல்லூரியொன்றை யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பல சந்திப்புக்களின்பின் மாணவர் அனுமதிக்காகத் தெரிவுசெய்யும் நிலைவரை முன்னேறி இறுதிக்கட்டத்தில் போர் நிலைமை மோசமானதால் அம் முயற்சி கைவிடப்பட்டது.

சமூக மருத்துவத்துறை 1998 ஆவது ஆண்டளவில் பொது சுகாதாரப் பரிசோதகர் கற்கை நெறியைச் சுகாதார அமைச்சின் முன்அனுமதியுடன் நடத்தியது. இங்கு பயிற்றுவிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திறமைசாலிகளாகவும் வினைத்திறன் மிக்கவர்களாகவும் சிறந்த சுகாதாரச் சேவையாளர்களாகவும் மிளிர்ந்தனர். அக்கற்கை நெறி தற்போது பிராந்தியச் சுகாதாரப் பணிப்பாளரினால் மருத்துவ பீட ஆசிரியர்களின் உதவியுடன் நடத்தப்படுகின்றது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கிய சுய நிதியில் நடத்தப்படும் கற்கைநெறிகளுக்கான அனுமதியைப் பயன்படுத்தி இப்பிரதேசத்தின் சுகாதாரச் சேவையாளர் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முயற்சியாகச் சமுதாய மருத்துவத்துறையில் சுகாதாரக் கற்கை அலகு ஒன்றை மருத்துவபீடம் ஆரம்பித்து மருந்தியல் சான்றிதழ் கற்கை, சமூக சுகாதார டிப்ளோமா, இயன் மருத்துவ டிப்ளோமா, மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகளை நடத்தியது. ஆனால், மருத்துவ பீட ஆசிரியர் பற்றாக்குறையுடன் வேறுபல காரணங்களால் முதல் அணி கற்கையை நிறைவு செய்தபின் மேலதிக அணிகளை உள்வாங்குவது பிற்போடப்பட்டது. இலங்கையில் இணைமருத்துவக் கல்விக்குப் பல்கலைக்கழகச் சான்றிதழ் அல்லது பட்டம் வழங்கிய முதல் சந்தர்ப்பம் இதுவாக அமைந்தது. இது பல பல்கலைக்கழகங்களில் சலசலப்பை ஏற்படுத்தி, இதுபோன்ற டிப்ளோமாக் கற்கை நெறிகளை ஆரம்பிக்கத் தூண்டின. விரைவிலே தொழிற்சங்கங்களும் சுகாதார அமைச்சும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இத்துறைகளில் பட்டப்படிப்பை ஆரம்பிக்கும்படி வேண்டின. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் மருந்தியல், தாதியியல் மற்றும் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பை 2006 இல் ஆரம்பித்தோம். இணை மருத்துவக் கற்கை நெறிகள் ஆசிரியர்களின் வேலைப் பளுவை மிக அதிகமாக்கி விட்டதால் சுயநிதிக் கற்கைகளுக்கு மாணவரை அனுமதிப்பது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. காலப்போக்கில் இணை மருத்துவக் கற்கை நெறிகள் தனிப்பீடமாக வளர்ச்சியடைய மருத்துவபீடம் மீண்டும் மருத்துவ மாணவருக்கான கற்பித்தலை மட்டும் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் மருத்துவக் கற்கைநெறி மருத்துவ மாணவருக்குச் சுகாதார சேவையை வழங்குவதில் ஏனைய இணைமருத்துவ உத்தியோகத்தரின் பங்கை விளங்கிக்கொள்ளவும் அவர்களைச் சுகநலக் குழுவின் அங்கத்தவராக மதிக்கவும் கற்பிக்கவும் வேண்டும். பேராசிரியர் சிவஞான சுந்தரம் இவ்விடயத்தில் அதிக அக்கறை கொண்டிருந்தார். முதற்படியாக மருத்துவ மாணவருக்கான இருவார தாதியியல் செய்முறைப்பயிற்சியை அறிமுகம் செய்தார். ஆனால், தாதிய பயிற்றுவிப்பாளர் புற்றாக்குறையால் அம்முயற்சி கைவிடப்பட வேண்டியதாயிற்று.

*(24 ஆம் பக்கம் பார்க்க....)*



**பேராசிரியர் க.சிவபாலன்,**
**மருத்துவ பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விற்பனைக்கு

புதிய சொப்பிங் பாக் தயாரிக்கும் மெஷின் விற்பனைக்குண்டு.
தொடர்பு இல:- 400, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212226634, 0778736561

## விற்பனைக்கு

12:8 அடி கடைக்குரிய Sun Glassஇல் ஆன முன் மறைப்பு Fittingஉம், 3½ மாதம் முடிவடைந்த பெண் கொக்கர் ஸ்பனியல் கறுப்பு மற்றும் கறுப்பும் வெள்ளையும் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6721687, 28, பாரதி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (105030)


# நீ.மரிய சேவியர் அடிகளாருக்கு எமது வாழ்த்துக்கள்



கடந்த 06.10.2010இல் எமது மன்றத்தின் இயக்குநர் நீ.மரிய சேவியர் அடிகளாருக்கு யாழ்.பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதி (Ph.D.h.c) பட்டம் வழங்கப்பட்டதையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம. ஏற்கனவே B.Th., L.Th.(Rome), புலவர் (மதுரை), M.A., Ph.D.(London), D.Th. (Passau Germany) போன்ற கல்விசார் பட்டங்களைப்பெற்று, கிரேக்கம், எபிரேயம், லத்தீன் உட்பட பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில் புலமைபெற்ற அடிகளார் மேற்புலத்தின் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் கருத்தரங்குகளையும், விரிவுரைகளையும் நடத்தி உள்ளார். உலகின் பல நாடுகளுக்கு (அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா) கலைப்பயணங்களை மேற்கொண்டு கலை நிகழ்ச்சிகளையும், கலைசார் விரிவுரைகளையும் நடத்தியதுடன் சைவ சித்தாந்தத்தின் பெறுமானத்தையும் உலகறிய செய்துள்ளார்.

பல்துறைசார் கல்வித்தகைமையும், பன்மொழிப்புலமையும், பல்கலை ஆளுமையும் பெற்ற அடிகளார் ஒரு சிறந்த சமூகத்தொண்டனும்கூட. இதன் காரணமாகவே இவருக்கு ''கலைத்தூது'', ''கலைஞானவித்தகர்'', ''கலா மேதை'', ''கலைச்சுடர்'', ''கலையின் காவலர்'' எனும் விருதுகளை வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் அவர் பின்னால் அணிவகுத்து நிற்கும் திருமறைக்கலாமன்ற (சி.பி.ஆட்ஸ், றங்ககலா கேந்த்ரய) கலைஞர்களும், தொண்டர்களுமாகிய நாம் அவரை வாழ்த்தி நிற்கின்றோம்.

### இலங்கை திருமறைக்கலாமன்ற மையங்கள்

| | |
|---|---|
| ✱மாத்தறை | ✱புத்தளம் |
| ✱காலி | ✱வவுனியா |
| ✱அம்பாந்தோட்டை | ✱கொழும்பு |
| ✱அவிசாவளை | ✱பாணந்துறை |
| ✱மொனராகலை | ✱கிளிநொச்சி |
| ✱கண்டி | ✱மன்னார் |
| ✱பொலநறுவை | ✱மட்டக்களப்பு |
| ✱அனுராதபுரம் | ✱திருகோணமலை |
| ✱இரத்தினபுரி | ✱ஹப்புத்தளை |
| ✱யாழ்ப்பாணம் | ✱இளவாலை |

சர்வதேச திருமறைக்கலாமன்ற மையங்கள்.

(சி/572111)

# யாழ்ப்பாணத்தில் காத்திரமான வெற்றிகரமான.....

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

**உதவி மருத்துவர் கற்கைநெறி**

1980 களின் ஆரம்பத்தில் கிராமப்புறங்களின் மருத்துவர் தேவையை நிவர்த்திக்க உதவி வைத்தியர் கற்கைநெறியை அரசு மீண்டும் ஆரம்பித்தது. பேராசிரியர் சிவஞானசுந்தரம் யாழ்ப்பாண மையத்தை பொறுப்பேற்று அதன் இணைப்பாளராகச் செயற்பட்டு அவ்வேளை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட வைத்தியர் பற்றாக்குறை நீங்க உதவினார்.

**ஏனைய மருத்துவ முறைகள்**

மாற்று மருத்துவ முறைகளிலும் பேராசிரியர் அக்கறை கொண்டிருந்தார். எல்லா மருத்துவ முறைகளிலும் உள்ள சிறப்புக்கள் மக்களுக்குப் பயன்படவேண்டுமெனவும் நோயாளர் நன்மை கருதி பல்வேறு மருத்துவங்களையும் மேற்கொள்ளும் வைத்தியரி டையே குறிப்பாக சித்தமருத்துவருடன் நோயாளர் பரிமாற்றம் இருக்க வேண்டுமென அவர் அடிக்கடி கூறுவார். மருத்துவ மாணவர்கள் இவைகளைப்பற்றி ஏதாவது ஒரு நிலையில் இருக்க வேண்டுமென அவர் நினைத்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தில் சித்தமருத்துவ அலகு விருத்தியடைய அவர் தன்னாலான அனைத்து உதவி களையும் வழங்கியிருந்தார். தமிழரின் மருத்துவமுறை எனப்படும் சித்த மருத்துவம் எமது பிரதேசத்தில் சிறந்தோங்க வேண்டுமென அவர் பெருவிருப்புக் கொண்டிருந்தார்.

**மக்கள் கல்வியும் சமூகச் சீர்திருத்தமும்**

பேராசியர் சிவஞானசுந்தரத்துக்கு மருத்துவ உத்தியோகத்தரைக் கற்பிப்பதுடன் மருத்துவக் கற்பித்தல் நிறைவடையவில்லை. அவருடைய பிரதான அக்கறை சமூகத்தில் சுகநலம் பற்றிய விழிப்புணர்வை உயர்த்துவதாகவே இருந்தது. அவர் ஒரு இளவலாக சமூகத்தில் காணப்பட்ட தப்பான கருத்துக்களையும் பிழையான செயற்பாடுகளையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் இவற்றுக்கெதிராகப் போராடும் கருவியாகப் பேனாவை எடுத்துக்கொண்டார். அவர் எழுதிய சிறுகதைகள் பல தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மூன்று நாவல்களுடன் பல சுகநலக் கல்வியூட்டும் ஆக்கங்களைக் கடித வடிவிலும் மனிதமேம்பாட்டுக்கான புத்தகங்ளையும் அவர் ஆக்கியுள்ளார். அவரது ஆக்கங்கள் பல்வேறு சுகநல மற்றும் சமூகச் சீர்திருத்த விடயங்களை மையமாகக் கொண்டு நேர்மறைச் சிந்தனையை மக்களுக்கு ஏற்படுத்தி சுகநலம் மிக்கதும் நிறைவானதுமான வாழ்வுக்கு இட்டுசெல்வதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

**ஆக்கங்களின் தொகுப்பு**

- ✱ அருமைத் தங்கைக்கு... (தாயாகப்போகும் தங்கைக்குப் பிரபல டாக்டர் எழுதிய கடிதங்கள்) 1960.
- ✱ அன்புள்ள நந்தினி-(குழந்தை வளர்ப்புப் பற்றிய கடிதங்கள்)1973.
- ✱ உங்களைப்பற்றிய - சிறுவர் அறிவு நூல் 1973.
- ✱ தம்பி தங்கைக்கு - இளைஞர் அறிவு நூல் 1996.
- ✱ மலைக்கொழுந்து நாவல் -(சமூக சீர்திருத்தம்) 1964.
- ✱ குரங்குகள் - நாடகம் -1975.
- ✱ தங்கச்சியம்மா - (மருத்துவ மாது மற்றும் கொலறாவைக் கட்டுப்படுத்தல்) 1977.
- ✱ நம்பிக்கைகள் - நாவல் (மருத்துவ மாணவரினதும் வைத்தியர்களினதும் எதிர்பார்ப்புகளும் நடைமுறைச் சிக்கல்களும் அவர்களைப் பற்றிய சமூக நம்பிக்கைகளும்) 1989.
- ✱ ஊர் நம்புமா? -1966-1947 முதல் எழுதிய சிறுகதைகள்.
- ✱ கண்களுக்கு அப்பால் - சிறுகதைத் தொகுப்பு-1984.
- ✱ நந்தியின் கதைகள் -1994.
- ✱ தரிசனம் -சிறுகதைத் தொகுப்பு -2002.
- ✱ அன்பார்ந்த சாயி அடியார்களுக்கு -1992.
- ✱ சாயியின் குரலும் வள்ளுவர் குறளும்- மனித மேம்பாட்டுக்கல்வி நூல்-2000
- ✱ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி - பாடசாலை ஆசிரியருக்கான கை நூல் -2003.

**மருத்துவப் பாடவிதானத்தில் மக்கள் கல்வி**

பேராசிரியரின் வழியில் மக்கள் கல்வியூட்டலில் மருத்துவ மாணவர் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 'வெளிக்கள சுகநலச் செயற்பாடு' சமூக மருத்துவத்துறையால் உருவாக்கப்பட்டு அதற்கான மதிப்பீடும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**நிறைவாக**

பேராசிரியர் சிவஞானசுந்தரம் ''சொல்லிய வண்ணம் செயல்'' என்பதற்கு எடுத்துகாட்டாக வாழ்ந்ததுடன் அவரது உருவாக்கங்கள் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர் யாழப்பாணத்தில் காத்திரமான, சிறந்த, வெற்றிகரமான மருத்துவக் கல்விக்கான அடித்தளத்தை உருவாக்கித் தந்துள்ளார். அவரைச் சுற்றியிருந்த அனைவரது ஒத்துழைப்பையும் அவர் பெற்றிருந்தார். அவரிட்ட அத்திவாரத்தை மாளிகையாகக் கட்டியெழுப்புவது எம் அனைவரதும் கடமையாகும். ✱




## நாகபூஷணி திருமணசேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன்கள், மணமகள்கள் Directers, Doctors, Engineers, Accountants, Bankers, Teachers, CIMA, B.Sc., M.Sc., Ph.D மற்றும் பட்டதாரிகள் சகல அரச, தனியார் துறைகளில் பணி புரியும் மணமகன்கள், மணமகள்கள் எம்மிடம் உள்ளனர். துரிதமாகவும் மிகச் சிறந்த முறையிலும் நீங்கள்விரும்பும் மணமகன்/மணமகளைப் பெற்றுக்கொள்ள நேரிலோ/Fax மூலமோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகள் யாவும் இலவசம்.

தொடர்பு:- Nakapoosany Wedding Service
நாகபூஷணி திருமண சேவை
125, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Fax No.021 222 9306 T.P. No.021 222 9306
(யாழ்.மாநகரசபை சுகாதாரப் பணிமனை முன்பாக) H.P.No.0771387596

## காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, கொத்தாவத்தையில் (வரதன் வைத்தியசாலை முன் ஒழுங்கை) கிணற்றுடன் 2 ¼ பரப்பும் மற்றும் 1 ¾ பரப்புக் காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0778693321, 0778994951

## மணமகன் தேவை

இந்துக் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7இல் செவ்வாய் உடைய 25 வயதுடைய, சித்திரை நட்சத்திரம், 5'6'' அடி உயரமுடைய படித்த பெண்ணிற்கு பெற்றோர் வெளிநாட்டிலோ உள்நாட்டிலோ தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு:-0750395712

## தேவை

Direct Marketing Sale Representative
எமது நிறுவனத்தின் பொருள்களை விற்பனை செய்ய/ நேரடி விநியோக விற்பனை பிரதிநிதி தேவை. மாதாந்தம் ரூபா 25,000/= மேல் வருமானம் ஈட்ட முடியும். சுயவிவரக் கோவையுடன் (C.V) நேரில் வரவும். திங்கள், செவ்வாய் 10 மணி - 12 மணி
தொடர்பு: New Keen Marketing
"Tharma Bavanam'
Uppuma Daththady
K.K.S. Road,
Kondavil West, Kondavil. 077 4710002
(105017)

கொழும்பு நகரில் பரபரப்பாக விற்பனையாகிவரும் நிலங்கா (Nilanka) தயாரிப்பான Express வீட்டுப்பாவனைப் பொருள்கள் இப்போது வடபகுதிக்கான ஏக விநியோகஸ்தர்கள்

## ஏசியன் பேனிச்சர்




- ★ உங்கள் வீட்டு கழிவறைகளை சுத்தமாக வைத்திருக்க (Tollet Bowl Cleaner)
- ★ தரையை சுத்தமாக வைத்திருக்க (Tile Cleaner)
- ★ யன்னல்களை பளிச்சென்று வைத்திருக்க (Glass Cleaner)
- ★ வீட்டுப் பாத்திரங்களை மினுமினுப்பாக வைத்திருக்க (Liquid Soap)
- ★ பாடசாலை சீருடைகள் - பளிச்சென்று வெள்ளையாக (Super Bleach - Liquid Soap)
- ★ வாகனங்களை பளபளப்பாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க (Car wash)
- ★ ஹொட்டலுக்குத் தேவையான கை சுத்தம் செய்தல் (Hand wash)
- ★ அலுவலகம் மற்றும் கடைகளை நறுமணமாக வைத்திருக்க 3 விதமான வாசனைத் திரவியங்கள் (Air Freshener)

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட கழிவுடன்

Asian Furniture
133, Power House Road, Jaffna. (பஸ்நிலையம் அருகில்)
0773583879, 021 2227892




UNIQUE OPPORTUNITY AT SPECTRA SKILLS
19, Stanley Road
( 2 nd Floor, Peo ple's Bank),
Jaffna.
T.P. 021 222 1422, 1423.
25 th to 29th october 2010
between 4 p.m- 6 p.m

- ✱Ministry of Tourism Scholarship Programme
- ✱Work Study Programme in Singapore
- ✱CIMA - Rapid Results Programme
- ✱சுற்றுலா அமைச்சின் மாபெரும் புலமைப்பரிசில்
- ✱சிங்கப்பூரில் வேலை மற்றும் கல்வி
- ✱CIMA கல்வி தொடர்பான விளக்கங்கள்

A\L பூர்த்தி செய்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் வாய்ப்பை எதிர்நோக்குபவர்கள் அனைவரும் இதில் பங்குபற்றலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புக் காய்ச்சல் கண்ட என்னை மாட்டுவண்டியில் ஏற்றிச் சென்று மானிப்பாய் வைத்தியசாலையில் சேர்த்தனர்

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

ஆவணப் பெட்டகம் 15

தாண்டவன்

**குறிப்பு**

*யாழ்ப்பாணத்தில் தாம் கடமையாற்றிய வேளையில் தமது சிவில் நிர்வாகக் கடமைகளின்போது தாம் பெற்ற அனுபவங்கள் குறித்து லியனார்ட் வூலப் தாம் எழுதிய நூலில் விபரித்துள்ள குறிப்புக்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.*

பூநகரிக்கான வீதி அமைக்கும் பணியில் பொதுமக்கள் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள், அவர்களுக்கு எவ்வளவு அரிசி தேவை என்ற விபரங்களைக் கணக்கெடுத்துக் கொண்டு நான் யாழ்ப்பாணம் திரும்பினேன். யாழ்ப்பாணம் திரும்பும் போது காலநிலை சற்று மாறுதலாக இருந்தது. கடல் கொந்தளிப்பாகக் காணப்பட்டதுடன் வெயிலும் கடுமையாக இருந்தது. நான் வரும்போது சிறிது உணவை எடுத்து வந்திருந்தேன். ஆயினும் எடுத்து வந்த உணவை என்னால் சாப்பிட முடியவில்லை.

மறுநாள் காலையில் நித்திரையால் எழுந்தபோது கடுமையான தலையிடி என்னை வாட்டியது. என்னுடன் தங்கியிருந்த நில அளவையாளர் ஷிப்டன் (Shipton) காலை உணவுக்காக என்னை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

அன்றைய தினம் காலை உணவாக முட்டை அப்பம் தயாரிக்கப்பட்டிருந்தது. இங்கு வசித்துவரும் ஐரோப்பியர்களுக்கு அப்பம் என்றார் மிக விருப்பம். என்னால் சாப்பிட முடியவில்லை. ஷிப்டன் எனது உடல் சூட்டைப் பரிசோதித்துப் பார்த்தார். எனது உடல் வெப்பநிலை மிக அதிகமாகக் காணப்பட்டது.

நான் மலேரியாக் காய்ச்சல் தாக்கத்துக்கு ஆளாகியிருப்பதாக ஷிப்டன் கூறினார். அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த வைத்தியசாலைகள் எவையும் ஐரோப்பியர்களைப் பராமரிக்கக்கூடிய வசதியைக் கொண்டிருக்கவில்லை. ஷிப்டன் மானிப்பாய்க்குச் சென்று அமெரிக்க மிஷனால் நடத்தப்பட்ட மருத்துவ மனையிலிருந்த அமெரிக்க மருத்துவரை அழைத்து வந்தார். அவர் என்னைப் பரிசோதித்து விட்டு நான் தைபோயிட் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். ஒரு மெத்தையில் படுக்க வைக்கப்பட்டு மாட்டு வண்டியில் ஏற்றி மானிப்பாய்க்கு நான் கொண்டு செல்லப்பட்டேன்.

அந்த மருத்துவமனையில் எங்குமே சுகயீனமுற்ற ஒரு ஐரோப்பியனைப் பராமரிக்கக் கூடிய இடம் காணப்படவில்லை. நான் ஒரு சிறிய அறையில் தங்கவைக்கப்பட்டேன். அந்த அறைக்கு ஒரேயொரு ஜன்னல் தான் இருந்தது. அதுவும் நிலத்திலிருந்து பத்தடி உயரத்தில்.

அந்த மருத்துவர் மிகவும் மென்மையானவர். அந்த மருத்துவமனையில் ஒரேயொரு பயிற்றப்பட்ட தாதி மட்டுமே பணி புரிந்தார். அவர் ஒரு தமிழ்ப்பெண், அது வரை அவர் வெள்ளைக்காரர்களைத் தொட்டது கிடையாது. அத்துடன் அந்தத் தாதி மிகவும் கூச்ச சுபாவமுடைய்வராகக் காணப்பட்டார். எனது வாய்க்குள் தேமாமீட்டரை வைப்பதற்குக்கூட அவர் கூச்சப்பட்டார். இதனால் நானே தேமாமீட்டரை எடுத்து எனது உடல் வெப்பநிலையைப் பரிசோதித்துப் பதிவு செய்தேன்.

நான் மருத்துவமனையிலிருந்த காலத்தில் எனது வேலைக்காரன் அப்புக்குட்டி ஒரு தாதியைப் போல் மிகவும் சிறப்பான முறையில் என்னைக் கவனித்தான். நான் தைபோயிட் காய்ச்சலில் பீடிக்கப்பட்டிருந்த இரண்டு மூன்று வாரங்களும் உப்புக்கஞ்சி மட்டுமே எனக்கு உணவாக வழங்கப்பட்டது. ஒரு நாள் நான் நித்திரைவிட்டு எழுந்தபோது எனக்கு முன்னால் மூன்று வெள்ளைத்தொப்பியணிந்தவர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் எனக்குச் சலாமிட்டுவிட்டு 'ஐயா இங்கே நீங்கள் செத்துக்கொண்டிருப்பதாகக் கூறி உங்களைக் கவனிப்பதற்காகவே நாங்கள் அனுப்பப்பட்டுள்ளோம்' என்றனர்.

நான் எனது கண்களைக் கசக்கி விட்டு காண்பது கனவா என்று யோசித்தேன். நெருப்புக்காய்ச்சல் காரணமாக நான் எனது உடற்பலம், மூளைவலு என்பனவற்றை இழந்திருந்தேன். யாழ்ப்பாணக் கடற்கரையோரமாக ஒரு வீட்டில் நான் தங்கவைக்கப்பட்டிருந்தேன். ஒரு நாள் மெல்ல மெல்ல நடந்து சென்று டெனிஸ் விளையாடுவதை ரசித்துக்கொண்டிருந்தேன். திடீரென தலை கிறுகிறுக்கத் தொடங்கியது, வானம் இருண்டு கொண்டு வருவது போலிருந்தது. உடலில் மின்சாரம் தாக்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது. நான் லீவு எடுத்துக்கொண்டு கண்டிக்குச் சென்றேன்.

1906 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. பெப்ரவரி மாதம் மன்னாரில் நடைபெறவுள்ள முத்துக்குளிப்புக்குக் கோட்டு சுப்பிரிண்டனாக என்னைப்போக முடியுமா என்று கேட்டு. அது உண்மையில் ஒரு நல்ல வேலை, நான் வருவதாகத் தந்தியடித்து விட்டு மறுநாள் யாழ்ப்பாணம் புறப்பட்டேன்.

முத்துக்குளிப்பு சுப்பிரிண்டனாகப் பணியாற்றிய ஹோர்னெல் (Hornell) முத்துப்படுக்கைகளில் இலையுதிர்காலத்தில் ஆய்வு செய்து இம்முறை அதிகமுத்து விளையும் எனத் தெரிவித்திருந்தார்.

1906 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நான்கு குடியியல் உத்தியோகத்தர்களுடன் மன்னார் நோக்கிப் புறப்பட்டார். ஜோன் ஸ்கொட் மன்னார் உதவி அரச அதிபர், மக்கலம் ஸ்ரீவன்சன் (Macolom Stevenson) (இவர் என்னைவிட மூன்று வருடங்கள் சீனியர்) உதவி பொலிஸ் சுப்பிரிண்டன். இவர்களுடன் நானும் புறப்பட்டேன்.

மறிச்சுக்கட்டி என்ற இடத்தில்தான் முத்துக்குளிப்பு நடைபெறும். முத்துக்குளிப்பு நடைபெறாத நேரத்தில் ''மறிச்சுக்கட்டி'' வரை படத்தில் இருந்து நீங்கி விடும். மறிச்சுக்கட்டி ஒரு காட்டுப்பிரதேசம். அத்துடன் மணற்பாங்கான பிரதேசம், வீதிகளெதுவும் கிடையாது. மறிச்சுக்கட்டிக்குச் செல்வதற்குக் கடலால்தான் போக வேண்டும். மறிச்சுக்கட்டியில் துறைமுகம் எதுவும் கிடையாது. கொழும்பிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வரும் படகுகளும் நீராவிக்கப்பல்களுமே நங்கூரமிட்டிருக்கும். ஆசியாக் கண்டம் முழுவதிலுமிருந்து சுமார் முப்பதாயிரம் பேர் முத்துக்குளிப்புக் காலத்தில் மறிச்சுக்கட்டிக்கு வருவார்கள். சுழியோடிகள், நகை வியாபாரிகள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விநியோகஸ்தர்கள் (Dealers) கடைக்காரர், முதலீட்டாளர்கள் ஆகியோருடன் கிறிமினல்கள், கொள்ளைக் கோஷ்டியினர் என்போரும் வருவர். இவர்கள் அனைவரும் தங்குவதற்கெனத் தற்காலிக நகரமொன்றை அரசாங்க அதிபர் நிர்மாணிப்பார். தானும் சக உத்தியோகத்தர்களும் தங்குவதற்கென பங்களா. சுழியோடிகள், வர்த்தகர்கள், வியாபாரிகள் தங்குவதற்குக் குடில்கள். இவை யாவும் மரத்தினாலும் கிடுகினாலும் அமைக்கப்படும்.

(வளரும்)

---

# செண்பகப் பூத் தைலமும் பாதிரிப்பட்டைக் கசாயமும் வாத நோய்க்குக் கை கண்ட மருந்துகள்

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**செண்பாக மரம்**

**வேறுபெயர்:** சண்பகம்

**தாவரவியற்பெயர்:** Michelia Champaka. (மைக்கேலியா சம்பகா)


**குடும்பம் :** Magnoliaceae (மைக்னோலியேசியே)

**சிங்களப்பெயர் :** சபு

**சமஸ்கிருதப்பெயர் :** சம்பகா

**ஆங்கிலப் பெயர்:** Golden Chamoac

செண்பகப்பூ சிவனுக்குரியது. பூசைக்குரிய எண்வகை மலர்களில் ஒன்று. இது மரவகுப்புக்குரியது. தனி இலைகள். மாவிலை போல்



நீண்டிருக்கும். சித்திரை வைகாசியில் பூக்கும். பூக்கள் மஞ்சள் நிறம். நறுமணமுள்ளவை. இது வருடந்தோறும் பூக்காமல் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை பூப்பது வழக்கம். இதன் இலைச் சாற்றைத் தேனுடன் கலந்து வயிற்று வலிக்குக் கொடுக்கலாம்.

பூவை இரவில் ஒரு கோப்பை நீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் பூ ஊறிய நீரைப் பருகி வந்தால் குன்மம், வயிற்றுப்புண், வெள்ளை சாய்தல் என்பன மாறும்.

பூவை நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சித் தலைக்கு வைத்துவர தலைவலி குணமாகும். வாதவலி, மூட்டு வாதத்துக்கும் இந்த எண்ணெயைப் பூசலாம். முறைச் சுரத்துக்குப் பட்டையைக் குடிநீர் செய்து கொடுக்கலாம்.

**பாதிரி மரம்**

**வேறுபெயர்** - பாடலம், பாடலி.

**தாவரவியற்பெயர்:** Stereospermum Suaveolens (ஸ்ரீரியோஸ்பேமம் சுவாவியோலென்ஸ்)

**குடும்பம்:** Bignoniaceae (பிக்னோனியேசியே)

**சிங்களப் பெயர்:** பலோல்

**சமஸ்கிருதப் பெயர்:** பாடல

**ஆங்கிலப் பெயர்:** Messenger of Spring

பாதிரிப் பூ அம்பிகைக்கு மிகவும் பிரியமானது. ''பாதிரி அம்பிகைக்கு அணியின் இல்லாள் எய்தும்'' அதாவது பாதிரிப் பூவை அம்பிகைக்கு அணிவித்து



வழிபட்டால் நல்ல மனைவி கிடைப்பாள் என்கிறது புட்பவிதி.

பாதிரி மர வகுப்புக்குரியது. வெயிற் காலத்தில் இது இலைகளையெல்லாம் உதிர்த்து மொட்டையாக நிற்கும். கூட்டிலைகள் எதிரான இலையொழுங்கு. பூக்கள் செந்நீல ஊதாநிறம். புறவிதழ் மஞ்சள் நிறம். பெரிய பூ. நறுமணமுள்ளது. பூவைப் பானையிலுள்ள நீரில் இட்டு வைத்தால் நீர் மட்டுமன்றி, பானையும் பூவின் மணத்தை வீசுமாம். காய்கள் நீளமானவை.

இதன் வேர்ப்பட்டையைத் தனித்தாவது, வில்வை வேர்ப்பட்டை, பெருமுன்னை வேர்ப்பட்டை, பெருங்குமிழ்வேர், தழுதாழைவேர் என்பவற்றுடன் சேர்த்தாவது குடிநீர் செய்து கொடுக்க மூட்டுவாதம், வாதவீக்கம், வாதவலி, வாதப்பிடிப்பு என்பன நீங்கும்.

பூச்சாற்றுக்குத் தேன் கலந்து உள்ளுக்குக் கொடுக்க விக்கல் தணியும்.

இதன் இலையை நீர் விட்டரைத்து தலைக்குத் தேய்த்து முழுகிவர தீக்குற்றம் நீங்கும். உடலுக்குக் குளிர்ச்சியுண்டாகும்.

**புன்னை**

**வேறுபெயர்** - நாகம், புன்னாகம்

**தாவரவியற்பெயர்:** Calophyllum inophyllum (கலோபைலம் இனோபைலம்)


**குடும்பம்:** Guttiferae (கட்டி ஃபேரே)

**சிங்களப் பெயர்:** தோம்ப, தேம்ப

**சமஸ்கிருதப் பெயர்:** புன்னாக

**ஆங்கிலப் பெயர்:** Alexandrian Laurel

இது சிறு மரவகுப்புக்குரியது. தனி இலைகள். நீள் வட்டவடிவமானவை. கரும்பச்சை நிறம். கொத்தாகப் பூக்கும். பூக்கள் வெண்மை நிறம். காய் உருண்டை வடிவானது. விதையிலிருந்து எடுக்கப்படும்



எண்ணெய் புன்னையெண்ணெய் எனப்படும். இது வாத வீக்கம், வாதப்பிடிப்பு, வாதநோ என்பவற்றுக்குப் பூச உகந்தது.

இதன் இலை அல்லது பூவைத் தண்ணீரில் ஊறவைத்து, அதனால் கண்களைக் கழுவிவர கண் வீக்கம், கண்கடி என்பன நீங்கும்.

விதையை நீர் விட்டரைத்துச் சூடாக்கி வாத வீக்கங்களுக்குப் பற்றிடலாம்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடுகிறது.....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பொருத்தும் பணிகள் இடம்பெற்ற வேளையில் ஏற்பட்ட 'நிஷா' புயலினால் பணிகள் மேலும் தாமதமடைந்தன. பின்னர் ஒருவாறு பணிகள் முடிவடைந்து மின்விநியோகம் ஆரம்பமானது. அந்த நிறுவனத்தின் ஒரு மின்பிறப்பாக்கிதான் இப்போது செயற்படுகிறது. மற்றவை செயற்படத் தொடங்கியதும் 24 மணிநேர மின் விநியோகம் நடைபெறும் என்று அப்போது கூறப்பட்டது. ஆயினும் அது நடைபெறவில்லை. இன்றுவரை ஒப்பந்தம் செய்யப்பட்ட அளவு மின்சாரத்தை அந்த நிறுவனத்தால் வழங்கமுடியவில்லை. குடாநாட்டின் முழுமையான மின் விநியோகத்துக்கு கிட்டத்தட்ட 36 மெகா வாட்ஸ் மின்சாரம் தேவை. ஆயினும் இப்போது 15 மெகா வாட்ஸ் மின்சாரத்தையே 'நொதேர்ண் பவர்' நிறுவனம் வழங்குகிறது. மிகுதியாகவுள்ள மின்சாரம் மின்சார சபையிடம் ஏற்கனவே உள்ள பழைய மின்பிறப்பாக்கிகள் மூலம் ஈடுசெய்யப்படுகிறது. அந்தப் பழைய மின்பிறப்பாக்கிகளும் தொடர்ச்சியான செயற்திறன் அற்றவை. 'நொதேர்ண் பவர்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகள் கைவிடும் வேளைகளில் இந்தப் பழைய இயந்திரங்களே கைகொடுக்கின்றன. ஒருவகையில் 'நொதேர்ண் பவர்' நிறுவனத்தைக் காப்பாற்றும் கடமையையும் அவை செய்கின்றன.

இதேவேளை குடாநாட்டில் காற்றலை மூலமான மின்சாரத்தை உற்பத்தி செய்வது பற்றியும் மலேசிய நிறுவனம் ஒன்று ஆராய்ந்துள்ளது. முதற்கட்டமாகக் கீரிமலை முதல் மாதகல் வரையான 10 கிலோ மீற்றர் வரை காற்றலைகளை உருவாக்க காற்றாடிகளைப் பொருத்த அந்த நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. எனினும் இந்தத் திட்டம் எப்போது சாத்தியப்படும் என்பது கேள்விக்குரியதே.

'நொதேர்ண் பவர்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகள் இப்போது அடிக்கடி பழுதடைகின்றன. இதனால்தான் இந்த மின்வெட்டு. குறித்த நிறுவனம் ஒப்பந்தம் செய்த அளவு மின்சாரத்தை இனிமேல் வழங்காது என்று கூறும் அளவுக்கு நிலைமை மிகவும் அபாய கட்டத்தை எட்டியிருக்கிறது. அப்படியாயின் தொடர்ந்தும் ஏன் அந்த நிறுவனத்தை வைத்திருக்க வேண்டும். ஒப்பந்தத்தை உடனடியாக ரத்துச் செய்து முழுமையான மின் தேவையை ஈடுசெய்யக்கூடிய வேறு நிறுவனங்களைப் பார்க்க வேண்டியது தானே? இதனை யாழ்ப்பாண மின்சாரசபை அதிகாரிகள் செய்யாமல் தொடர்ந்து மௌனம் காப்பது தான் ஏன் என்று விளங்கவில்லை. அவர்கள் அதனைச் செய்யத் தயங்குவதற்கான காரணம் என்ன? இதனை அந்த அதிகாரிகள் உடன் தெளிவுபடுத்த வேண்டும். இந்த மின்தடைக்கான உண்மைக் காரணம் மக்களைச் சென்றடையவேண்டும். 'நொதேர்ண் பவர்' நிறுவனத்தின் அதிகாரிகளுடன் சேர்த்து தாமும் முன்வந்து நிலைமையை மக்களுக்கு தெளிவாக முன்வைக்க வேண்டும். அதனை விடுத்துத் தொடர்ந்து மௌனம் காத்தால் அந்த மௌனம் ஏதோ ஒரு விடயத்துக்கான சம்மதத்தின் அறிகுறி என்றே எண்ணத் தோன்றும்.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற வடக்கு அபிவிருத்திக் கூட்டத்தில் குடாநாட்டுக்கு 24 மணிநேரம் மின் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். மின் வழங்கும் இயந்திரங்கள் பழுதடைந்தால் அவற்றைத் திருத்த உடன் ஏற்பாடு செய்யுமாறும், இல்லாவிட்டால் வேறு இயந்திரங்களைப் பொருத்தி 24 மணிநேர மின்விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதியே கூறிவிட்ட பின்னர் இனியும் ஏன் தாமதிக்க வேண்டும். அவர் சொன்னதை உடனடியாகவே செய்யவேண்டியதுதானே? அதைத்தான் குடாநாட்டு மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இதற்குப் பின்னரும் இந்த விடயத்தில் தாமதம் - பின்னடிப்பு காட்டப்படுமானால் அதற்குப் பின்னால் ஏதோ 'சம்திங்' இருப்பதாகவே சிந்திக்க வேண்டியுள்ளது. அந்த நிலை ஏற்படாமல் யாழ்ப்பாண மின்சார சபை அதிகாரிகள் செயற்பட்டால் குடாநாட்டு மக்கள் அதனைப் பெரிதும் வரவேற்பர். ✱


## உந்துருளி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள உந்துருளி NPJS தொடர் இலக்கம் Press Cup C - 50 Japan (Load Bicycle) விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 9997814, 021 2264793 (கி/572130)

## Build your future with LIMKOKWING University-Malaysia

Open Day/ Consultations

Visit us on Saturday 6th November from 9.00am to 6.00pm at the Jaffna MPCS Auditorium, KKS Road, Jaffna.

Begin your career path soon after your O/Ls at LIMKOKWING University and step in to a world of opportunities. With us, you now have the advantage of pursuing a foreign degree in Malaysia with minimal expenses!

Contact: 0776 565258 & 0777 260554

## இதோ ஓர் அரிய வாய்ப்பு

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க தத்தளிக்கிறீர்களா?

மாதாந்த வருமானம் போதாமல் இருக்கிறதா?

உங்கள் கனவுகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறதா?

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் முயற்சிக்கு ஏற்ற ஊதியம்

பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வருமானம் பெற

அழையுங்கள் செல்வி 0112623481 0714228241

## அமெரிக்க வீஸா லொத்தர்

மணமுடிக்காதவர் விண்ணப்பிக்க. GCE O/L (பூரண சித்தி) தேவை, (*conditions apply)
1. அமெரிக்க வீஸாவிற்கென ஸ்ருடியோவில் எடுத்த கலர் படம் ஒன்றுடன் ஆங்கிலத்தில்: 2. FULL NAME, 3. DATE OF BIRTH, 4.PLACE OF BIRTH, ADDRESS, PHONE, EMAIL. (தேவைப்படின் செய்து தரப்படும்.)
BBS Netting, A/C 7244197 Bank of Ceylon வங்கியில் பணம் இட்ட ரசீது. அல்லது மணிஓடர் Director, BBS Netting, Dehiwala Post office ல் பெறுவதற்கு.
கட்டணம் 475/- (Closing Date 03/11/2010)
30/10/2010 முன் கிடைக்கும் வண்ணம் தபாலில் அனுப்பவும்.
Director, BBS Netting, 3/14, PINWATTA ROAD, DEHIWALA.

அமெரிக்க வீஸாவை லொத்தர் மூலம் பெற்றுச் செல்லவிருப்பவர்களுக்கு! அதிமுக்கிய விபரங்களுடன் ஆங்கிலப் புத்தகம் ஒன்று எம்மிடமுண்டு.
Call 0775811106 WWW.BBSNETTING.COM


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நடேஸ்வரி



வேலணையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை நிரந்தரவதிவிடமாகவும், ஜேர்மனியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை நடேஸ்வரி 19.10.2010 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற திரு திருமதி நாகலிங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு திருமதி கந்தசாமி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் துணைவியாரும், பேரின்பவதனி (பாமா) அவர்களின் பாசமிகு தாயாரும், சிவகுமார் (தம்பி) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அருமைச் சகோதரியும், சண்முகராசா வின் மாமியாரும், கந்தராசா (ஜேர்மனி), வீரசிங்கம் (கொழும்பு), சின்னதம்பி சிவகடாட்சம், செல்வேந்திரன், தவம்(கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், குணம் தங்கன் (கொழும்பு), வவிசாரதா (கனடா), சிறிகரன் (லண்டன்), றாசினி (கொழும்பு), தவா, காலஞ்சென்ற மல்லிகாராணி மற்றும் செல்வராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிலானி, நிசாந்தினி, கபல்குமார் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.10.2010) திங்கட்கிழமை 2 மணிக்கு Stadtbergen Strae 80 a, 86157 Augsburg மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு. திருமதி சிவகுமார்

Kolbergstr.18
86167 Augsburg,
West Germany. (105028)

தொடர்புகளுக்கு:
சிவகுமார் ஜேர்மனி
தொ.பே: 49821718298


## மணமகன் தேவை

யாழ். இந்து வேளாள குடும்பம் 1988இல் பிறந்த, அனுசம் 8இல் செவ்வாய், கிரகபாவம் 76, வங்கி உத்தியோகத்தரான மணமகளுக்குப் பெற்றோர் பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கிறார்கள். அரச சேவை, வங்கிச்சேவை, தனியார் துறையில் உள்ளோர் விரும்பத்தக்கது. ஜாதகம், தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு : விளம்பர இலக்கம் : 4083, மே/பா : உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

கொழும்பில் தங்கி வேலைசெய்யக்கூடிய வீட்டுப்பணிப்பெண்கள் தேவை. மாத சம்பளம் 10,000/= இற்கு மேல் வழங்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும்.
0114551800,
0773944583.

## வீடு விற்பனைக்கு

பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் 2 பரப்பு காணியில் 3 அறைகள், 2 ஹோல், சமையல் அறை, சாப்பாட்டு அறை, குளியல் அறை என்பவற்றுடன் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0775016848

## கடைகள் வாடகைக்கு

யாழ். நகரப் பகுதியில் 3 கடைகள் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 0214900582, 0779229041

## தவறிவிட்டது

மிஷன் பாடசாலை வீதி, கோண்டாவில் எனும் முகவரியைச் சேர்ந்த இராசேந்திரம் சசிக்குமார்என்பவரது தே.அ.அட்டை(810962356 V), சாரதி அனுமதிப் பத்திரம், வாகனவரிப்பத்திரம், தொழில் அ.அட்டை, A.T.M அட்டை என்பன அடங்கிய பேஸ் யாழ்ப்பாணத்திற்கும் குறி கட்டுவானிற்கும் இடையில் 21.10.2010 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 021 3211974

## தவறிவிட்டது

குழந்தைவேலு சபாபதிப்பிள்ளை என்பவரின் தேசிய சேமிப்பு வங்கிப் புத்தகம் மற்றும் அதுதொடர்பான ஆவணங்கள் என்பன அடங்கிய கைப்பை யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் செல்லும் தனியார் பேருந்தில் தவறிவிட்டது. (2.30 - 3 மணிக்குள்) கண்டெடுத்தவர்கள் 233, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ அல்லது 222 6064 என்ற தொ.பே இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (105031)

## வீடு, காணி விற்பனைக்கு

கண்டி வீதி (A9), கச்சேரியில் இருந்து 500 M தொலைவில் 2¾ பரப்புக் காணியில் அமைந்த 4 அறைகள், வாகனத் தரிப்பிட வசதியுமுள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 3209465 (105035)

## காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, மீசாலையில் (அல்லாரை றோட்டிற்கும் காட்டுவளவு கந்தசாமி கோயிலுக்கும் இடையில்) 2½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 6354224 (105027)

## வீடு வாடகைக்கு

யாழ். பருத்தித்துறை வீதியில் நீர்வேலிச் சந்திக்கு அருகில் கிணற்றுப் பங்குடன் கூடிய 2,000 சதுர அடி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : விளம்பர இல. 4084,
C/O : உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, சங்கத்தானையில் புகையிரத நிலையத்துக்கு அருகில் பொற்கொல்லை வீதியில் உள்ள வீடும் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
032 4924335, 077 9978123, 077 6569929 (105025)

## WANTED

Office/Showroom space in Jaffna

Required in the heart of Jaffna town for a mercantile establishment. Please send in details immediately as a visit to Jaffna is being shortly planned for inspection.

Contact: Chanaka Kekulawala
0777-571063 / 011-2688705
Email: bae@mackwoods.com


## மரண அறிவித்தல்

### திருமதி சிவனேஸ்வரி கந்தையா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனேஸ்வரி கந்தையா நேற்று (23.10.2010) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் தற்போது தெகிவளையில் வசிக்கும் இளைப்பாறிய பொறியியலாளரான (E.E.Highways RDA) S.V. கந்தையாவின் அன்பு மனைவியும் கலா, கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பார்த்தீபன், உஸாராணி ஆகியோரின் மாமியாரும் சங்கரி, வர்ஸ்சினி, அபர்ணா ஆகியோரின் பேர்த்தியும் உரும்பிராய் சரசாலையார் வளவு மலேயன் பென்சனியர் காலஞ்சென்ற பொன்னையா சிவக் கொழுந்து தம்பதியரின் அருமை மகளும் தையல்சுந்தரம், பரந்தாமன், புவனேஸ்வரி, இலங்கைநாதன் (ஈஸ்வரி) காலஞ் சென்ற சிவபாதம் ஆகியோரின் சகோதரியும் மாவிட்ட புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன்- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் பெரியதம்பி, கனகரத்தினம் காலஞ் சென்றவர்களான திருமதி பொன்னுத்துரை, பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 35,மொர்பட்கிறசன், தெகிவளை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.10.2010) திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, மொர்பட்கிறசன்,
தெகிவளை.
0112738310

தகவல்:
S.V. கந்தையா (கணவர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கும் விரியும் ஒடுக்குமுறை

## புலம் பெயர்ந்தவர்களையும் புலம் பெயர்பவர்களையும் இலக்கு வைக்கும் இலங்கை அரசு

சந்திரசேகர ஆசாத்

ஞாயிறு காரம்

இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மறைந்த லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களுக்கு ஒரு தனியிடம் உண்டு. விடுதலைப்புலிகளை அமெரிக்கா உட்படப் பல நாடுகள் பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றாகப் பிரகடனம் செய்தமைக்கு அவருடைய தீவிர முயற்சிகள் பெரும் பங்கு வகித்தன என்பதை எவராலும் மறந்துவிட முடியாது. மேற்கு நாடுகள் விடுதலைப்புலிகளை அழியவும் விடாமல் வெற்றி கொள்ளவும் விடாமல் இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் அளவிலே வைத்திருக்க வேண்டும் என்ற அவர்களின் போராட்ட அமைப்புக்கள் தொடர்பான கொள்கை அடிப்படை காரணமாக இருந்த போதிலும் மேற்படி தடையை ஏற்படுத்துவதில் கதிர்காமர் அவர்களின் முயற்சியைக் குறைத்து மதிப்பிட முடியாது. இவர் எவ்வளவு தான் இலங்கை அரசுக்கு விசுவாசமாகச் செயற்பட்ட போதிலும், இவர் பிரதமராக வரக்கூடிய சந்தர்ப்பம் சிங்கள அதிகார பீடத்தால் தமிழர் என்ற காரணத்துக்காக நிராகரிக்கப்பட்டமையையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும். இன்று அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்கான கோரிக்கைகளை மழுங்கடிக்கவும், நிராகரிக்கவும், குழப்பியடிக்கவும் துணை போகும் அரசியல் வாதிகளும் சிங்கள அதிகார பீடத்தால் தமிழ் மக்களுக்கு எதிராகத் தமிழரையே பாவிக்குமளவுக்கு மட்டுமே பயன் படுத்தப்படுவர் என்பதைக் கதிர்காமரின் அனுபவத்தி லிருந்து உணர்ந்து கொள்ள வேண்டும். எப்படியிருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கு இடையூறு செய்ததில் கதிர்காமரின் பங்கு காத்திரமானது.

இப்போது கதிர்காமரைப் போன்று பெயரையும் புகழையும் பெற இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் தீவிர முயற்சியில் இறங்கியிருப்பதாகத் தோன்றுகிறது. அவர் நிதியமைச்சு உட்பட பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்த ஆற்றலும், விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களின் போது அரசுத்தரப்பில் தலைமைப் பிரதிநிதியாகச் செயற்பட்ட அனுபவமும் கொண்டவர். அதைவிட எந்தக் கட்சி ஆட்சிக்கு வந் தாலும் அதில் கூசாமல் அமைச்சுப் பதவி வகிக்கும் வல்லமையும் கொண்டவர். அவருக்குப் பேரும் புகழும் கிட்டுவது என்பது மிக மிக நியாயமானதுதான். ஆனால் அவர் கதிர்காமரை ஒத்த வழியில் தமிழினத் துக்குத் தீங்கு பயக்கும் விதத்தில் செயற்பட முயல்வது தான் நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயம்.

இவர் அண்மையில் அவுஸ்திரேலிய அரசிடம் இலங்கையிலிருந்து சென்று அங்கு அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களுக்குத் தஞ்சம் கொடுக்க வேண்டாம் எனவும் அவர்களை உடனடியாகத் திருப்பி அனுப்பிவிடும் படியும் கேட்டிருந்தார். ஏற்கனவே இவர் இத்தகைய கோரிக்கையை இலங்கைத் தூதுவர் மூலம் கனடா விடமும் விடுத்திருந்தார். இதேவேளை வெளிநாடு களுக்குச் செல்லும் நோக்குடன் தாய்லாந்தில் தங்கியிருந்து கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்களை உடனடியாக இலங்கைக்கு திருப்பியனுப்பும்படி இலங்கை அரசு கோரி வருகிறது. அமைச்சர் பீரிஸ் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அங்கெல்லாம் அதிகமாகப் பாவிக்கும் வார்த்தைகள் பயங்கரவாதம், ஆள்கடத்தல் என்பனவாகும்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக வெளிநாடுகளில் அணி திரள்கின்றனர் எனவும் விடுதலைப்புலிகளே இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் பிரசாரம் செய்து வருகிறார். மேற்குலக நாடுகள் பயங்கர வாதம், ஆள்கடத்தல் ஆகிய இரு நடவடிக்கைகளையும் விரும்புவதில்லை. எனவே தான் புலம்பெயர்ந்த, புலம்பெயரும் தமிழர்களுடன் இந்த இருவார்த்தைகளையும் விடுதலைப்புலிகளையும் இணைப்பதன் மூலம் தமிழர் விரோத நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளார். இவரின் முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான எந்தவித அறிகுறிகளும் தென்படாத போதிலும், இவர்கள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் கூட தமிழ் மக்களின் இயல்பு வாழ்வையும் நிம்மதியையும் குலைக்கும் வஞ்சக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

உண்மையில் இலங்கை அரசாங்கம் ஒரு நியாயபூர்வமான நிலைப்பாட்டை எடுப்பதானால் தமிழ் மக்கள் ஏன் புலம்பெயர்ந்தார்கள்? ஏன் புலம்பெயர்ந்து கொண்டு இருக்கிறார்கள்? என்பதை ஆராய்ந்து அதற்கான காரணிகளை அகற்ற வேண்டும். அதை விடுத்து புலம்பெயர்வைத் தடுக்கப் பல்வேறு எதிர் நடவடிக்கைகளை எடுப்பது கூட தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையின் ஒரு பகுதிதான்.

புலப்பெயர்வுகளின் போதும் புலம்பெயர்ந்த பின்பும் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல.

வசதிகளற்ற படகுகளில் நீண்ட தூர கடற்பயணம், அதன் ஒவ்வாமை,நோய்கள், உயிரிழப்புக்கள், பனி படர்ந்த பிரதேசங்களை நடந்து கடத்தல், மூடப்பட்ட வாகனங்களில் நீண்ட தூரம் பயணித்தல், அப்போது சாவடைதல், தடுப்பு முகாம்களிலும், சிறைகளிலும் வாடுதல் போன்ற பெருந்துன்பங்களுக்கு முகங்கொடுத்தே எமது மக்கள் புலம்பெயர்கின்றனர்.

உயிராபத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் நீண்ட பயணங்களை மேற்கொள்கின்றார்களென்றால் அதற்கு அவர்கள் இலங்கையில் தங்கியிருக்க முடியாத வலுவான காரணங்கள் இருக்கின்றன என்பது தான் உண்மை. புலம்பெயர்பவர்களில் பலர் பொருளாதாரக் காரணங்களுக்காகவே புலம்பெயர்கின்றனர் என்பது உண்மையானாலும் பொருளாதாரம் தேடி ஓடுவதற்கும்கூட காரணம், இனஒடுக்கு முறை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைகளும் ஓரவஞ்சனையும்தான்.

1977 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று அடியெடுத்துக் கொடுத்த ஒருபெரும் இன அழிப்புக் கலவரம் ஏற்படுத்தப்பட்டது. பல்லா யிரம் தமிழர்கள் உயிரிழந்தனர். உடைமைகள் சூறை யாடப்பட்டன. தொழில் நிலையங்கள், வாகனங்கள் எரியூட்டப்பட்டன. பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உயிரைக் காக்க வடக்கு நோக்கி ஓடினர். தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது என்ற நிலையேற்பட்ட போதுதான் பெருமளவான புலப்பெயர்வு மேற்கொள்ளப் பட்டது. ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் இந்தியாவுக்கும் இன்னும் பல ஆயிரம் பேர் மேற்கு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். அதாவது பொதுமக்கள் புலம்பெயர்ந்தார்கள் என்பதை விடப் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதே உண்மையாகும்.

1983 இல் இடம்பெற்ற இன ஒழிப்புக் கலவரங்களின் பின்பும் இதே காரணத்துக்காகவே பெருமளவிலான புலப்பெயர்வு இடம்பெற்றது.

இவ்விரு இன அழிப்புக் கலவரங்கள் மூலம் தமிழர்கள் இலங்கைத் தீவில் தமது நியாயமான உரிமைகளுடன் சமாதானமாகவும் இன ஐக்கியத்துடனும் வாழ முடியாது என்பது திட்டவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நிலையில் ஒரு பகுதியினர் புலம்பெயர ஏனையோர் பிரிந்து சென்று தமிழ்நாடு அமைப்பது என்ற முடிவுக்கு வந்தனர். இதன் காரணமாகவே ஆயுதப் போராட்டம் வலுப்பெற்று காலப்போக்கில் பெரும் போராக வெடித்தது. இப்போது விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு போர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

ஆனாலும் பாதுகாப்பு என்ற பேரில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்படும் அடக்கு முறைகளும் கெடுபிடி களும் பன்மடங்கு அதிகரித்துவிட்டன. போரின் இறுதி நாள்களின் போது இராணுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற ஏறக்குறைய மூன்றே முக்கால் லட்சம் பொது மக்கள் செட்டிக்குளத்தில் நிவா ரண முகாம்கள் என்ற பெயரில் திறந்த வெளிச் சிறைச்சாலைகளி லும் முள்ளுக்கம்பி வேலிகளுக்குள்ளும் முடக்கப்பட்டனர். அவர்கள் வெளியேறவோ, வெளியாளருடன் தொடர்பு கொள்ளவோ அனுமதிக்கப்படவில்லை. அவர்களைச் சந்திக்கப் போகும் உறவினர்கள் கூட பல கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். அது மட்டுமன்றி நிவாரண முகாம்களில் அடைக்கப்பட்டவர்களில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டுத் தடுப்பு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பல வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாக 9 மாதங்களின் பின்பு மக்கள் வெளியே சென்று வர அனுமதிக்கபட்டனர். போதிய மருத்துவ வசதியோ, ஊட்டச்சத்துள்ள உணவுகளோ, குடிக்க குளிக்கப் போதிய நீர் வசதியோ இன்றிப் பல முதியவர்கள் மரணமடைந்தனர். பலர் நோயாளிகளாகினர். விசாரணை என்ற பெயரில் படையினராலும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட சிலராலும் கொண்டு செல்லப்பட்ட இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். பல இளைஞர்களும் இளம் பெண்களும் காணாமற் போயினர். அவர்கள் பற்றிய தகவல்கள் இன்று வரை வெளியிடப்படவில்லை.

வெயில், மழை, பனி போன்ற எந்த நிலைமையிலும் கூடாரங்களுக்குள் இரண்டு மூன்று குடும்பங்கள் சமாளிக்க வேண்டியிருந்தது.

உணவு, நீர், மலசலகூடங்கள் என்பவற்றிற்கும் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஒரு வருடம் கழிந்த நிலையில் பகுதி பகுதியாக மக்களை மீள்குடியேற்றம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இன்னும் கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் பேர் இந்த முகாம்களிலேயே வாடுகின்றனர்.

மீள்குடியேற்றம் என்பது கூட ஒரு கூடாரத்துணியுடன் அல்லது பன்னிரண்டு தகரங்களுடன் மக்கள் கொண்டு வந்து கொட்டப்பட்டமையாகவே இடம்பெற்றது. ஒரு சிலருக்கு விவசாய உள்ளீடுகள் சில உபகரணங்கள் வழங்கப்பட்டாலும் பெரும் பான்மையோர் நிவாரணப் பொருள்களை நம்பியே வாழும் நிலை நிலவுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லைக் கூட விற்க முடியாமல் உள்ளனர். மழைகாலம் ஆரம்பித்தால் நெல்லைப் பாதுகாப்பாக வைக்க முடியாமல் போவதுடன் குடியிருக்கவே முடியாத நிலை ஏற்படும். இன்னொருறம் பலர் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேற அனுமதிக்கப்படாது இடைத்தங்கல் முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் காணிகளில் இராணுவக் குடியிருப்புக்கள் என்ற பேரில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிதாகப் பல நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. காணுமிடமெங்கும் காவலரண்களும் படையினரின் நடமாட்டமுமே தெரிகின்றன. பல இடங்களில் மக்களின் நடமாட்டங்கள் கூட விசாரணைக்கு உட்படுத்தப் படுகின்றன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் சந்திப்புக்கள் கூட புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்படுகின்றன. அது மட்டுமன்றி இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறிக் கொண்டு வரும் சிலர் மீள்குடியேற்றப்பகுதிகளில் புகுந்து விசாரணை என்ற பெயரில் மக்களை மிரட்டுகின்றனர். சிலரை அழைத்துச் சென்று தடுப்பு முகாம்களில் அடைக்கின்றனர்.

வன்னி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது நிதி, நீதி நிர்வாகம், வானொலி, தொலைக்காட்சி, வங்கி பலவித தொழில் நிறுவனங்கள் போன்ற பல அமைப்புகளை நடத்தி வந்தனர். அவற்றில் மாதச் சம்பளத்துக்கு வேலை செய்த பணியாளர்கள் கூட கைது செய்யப்பட்டுத் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இப்படியாக தமிழ் மக்கள் இன்று வாய்திறக்க முடியாத அடிமைகளாகவும் இயல்பு வாழ்வோ அமைதியான வாழ்வோ கிட்டாதவர்களாகவும் இன்னல்கள் சுமக்கிறார்கள்.

இப்படியான ஒரு கொடிய நிலையிலிருந்து மீள புலம்பெயர்வை ஒரு வழியாகக் கொள்கின்றனர். இலங்கை அரசின் கொடுமைகளைத் தாங்க முடியாது இடம்பெயரும் தமிழ் மக்களை ஆள்கடத்தலுடன் தொடர்பு படுத்துவதன் மூலம் அமைச்சர் பீரிஸ் வெளிநாடுகள் தஞ்சம் கொடுப்பதைத் தவிர்க்கவும் தாங்கள் தமிழ் மக்கள் மேல் மேற்கொள்ளும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளையும் மறைக்க முயல்கிறார்.

இங்கு தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக அவர்கள் வாய்திறக்க முடியாத நிலையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்கள் உறவுகளுக்காகக் குரல் கொடுப்பதை அவர் பயங்கரவாதமாக வர்ணிக்கிறார்.

அமைச்சரின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தமிழ் மக்களை தங்கள் கட்டுப்பாட்டில் அடிமைகளாக வைத்து அவர்களின் தேசியம், சுய நிர்ணயவுரிமை என்பவற்றை அழிக்கும் நோக்கம் கொண்டவை என்பதை உணர வைக்கின்றன. அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் இலங்கை அரசியலில் இன்னொரு லக்ஸ்மன் கதிர்காமராகப் பெயர் எடுக்கலாம். ஆனால் உலகம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இன ஒடுக்கு முறை தொடர்பாகவும் அவதானித்துக் கொண்டே இருக்கும் என்பதை அவர் புரிந்து கொள்ளும் நிலைமை வெகு விரைவிலேயே ஏற்படும்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கல்லவா?

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்தல் மண்ணிலே செம்மொழி விழா



"எங்கள் தமிழும் எங்கள் வாழ்வும் மங்காத செல்வமென்று சங்கே முழங்கு'' கடலின் பேரிரைச்சலையும் தாண்டி ஓங்கி ஒலிக்கின்றன நம்பிக்கையைச் சுமந்து வருகின்ற வரிகள்.செம்மொழி விழாவை எடுத்து தமிழுக்குச் சிறப்புச் சேர்க்கின்ற மன்னார் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் ஒலிபெருக்கியினுதவியோடு இந்த வார்த்தைகளை அந்தப் பகுதியெங்கும் தவழவிட்டிருந்தார். மிக நீண்ட காலத்துக்குப் பிறகு தமிழுக்கு விழா எடுக்கும் மன்னார் மண் பூரிப்பால் மலர்ந்திருந்தது. தன் பங்குக்கும் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் காற்றும் தன் கரங்களைப் பலங்கொண்ட மட்டும் அசைத்து, மகிழ்வோடு வாழ்த்துக்கூறிக் கொண்டிருந்தது.



வழமையாகவே நமது விழாக்களின் போது அழைப்பிதழில் குறிக்கப்பட்டிருக்கும் நேரத்தை விடவும், குறைந்தது 1 மணித்தியாலமாவது தாமதித்தே ஆரம்பிப்பதென்பதை ஒரு எழுதப்படாத விதி போல மிகக்கவனமாகப் பன்பற்றி வருகின்றோம். நல்லவேளையாக அப்படி எதுவும் இல்லாமல். சொன்ன நேரத்துக்கே விழாவை ஆரம்பித்து விட்டார்கள் மன்னார் தமிழ்ச்சங்கத்தினர். மன்னார் பாலத்திலிருந்து நகர மண்டபம் வரைக்கும் பண்பாட்டுப் பேரணி நகர்ந்து வந்தது. மஞ்சள், சிவப்பு வர்ணங்களைக் கொண்ட கொடிகளை ஏந்திக்கொண்டு, மோட்டார்சைக்கிள்கள் முன்னே வழிகாட்ட , பின்னே தமிழ் இன்னிசைக் குழுவினர் அணிவகுத்தபடி வந்தனர்.ஆனாலும் ஹார்மோனியக் கருவியை சுமந்து வந்த மாணவிகள் அதன்மேல் மெலோடிக்கா என்ற கருவியை வைத்து இசைத்துக்கொண்டு வந்தது கொஞ்சம் நெருடவே செய்தது. இன்னிசைக் குழுவினரின் இசைக்கேற்ப பாடசாலை மாணவிகளும் , மாணவர்களும் அணிவகுத்து சீராகப் பயணித்தனர். ஆயினும் தமிழுக்கு விழா எடுக்கும் தருணமொன்றில் அணிவகுத்து வந்த மாணவர்களும் மாணவியரும் தமிழ்க்கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் உடைகளை அணிந்து வந்திருந்தால் சில விமர்சனங்களைத் தவிர்த்திருக்க முடியும்.இன்னிய முழக்கத்தின் ஒலி மெல்ல மறைய, எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது திருவள்ளுவர்,ஒளவையார்,பாரதியார், தனிநாயகம் அடிகளார் என்று தமிழுக்காகவே வாழ்ந்து மறைந்த பெரியார்களாக வேடமிட்ட மாணவர்களை ஏந்திக்கொண்டு ஒருவாகனம். (கடற்கரையோர வெயிலையும்" தாக்குப்பிடித்துகொண்டு சிலைகளைப் போலவே அசையாது இறுதிவரை வந்த அந்த மாணவர்களின் பொறுமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.) அதற்கடுத்து தமிழர்களின் பாரம்பரியக்கலைவடிவங்களில் ஒன்றான பொய்க்கால் குதிரைகளைச் சுமந்து, அரச உடைகளை அணிந்து கொண்டு நால்வர் தாளம் பிசகாது ஆடி வந்தனர். அதனைத் தொடர்ந்து மங்கள வாத்தியங்களின் முழக்கத்தோடு விருந்தினர்களும், விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த பேராளர்களும் அழைத்து வரப்பட்டனர். மிகச்சிறிய பண்பாட்டுப்பேரணிதான். ஒரு சில குறைகளைத்தவிர்த்துப் பார்த்தால்-இரு நாள்கள் மட்டுமே அவகாசமிருக்கையில் அவசரத்தின் நடுவேபண்பாட்டுப் பேரணியை ஒழுங்கமைத்ததாக ஏற்பாட்டாளர்கள் கூறிய போதிலும்- கச்சிதமாக அமைந்திருந்தது.

பண்பாட்டுப்பேரணி நகர மண்டபத்துக்குள் நுழைந்ததும் வழமையான மாலை மரியாதைகள், மங்கல விளக்கேற்றல்,தமிழ்த்தாய் வாழ்த்து என்ற அம்சங்களுடன் முதல்நாள் நிகழ்வுகள் செயலுருப்பெறத்தொடங்கின.அரங்கிலே உரையாற்றிய அனைவரும் மிகக்கவனமாக நேர ஒழுங்கினைப்பின்பற்றியமை நிகழ்வினைத் தொய்வின்றிப் பார்ப்பதற்கு வழியமைத்தது.ஒவ்வொருவரும் தமிழின் பெருமைகளையும் அது செம்மொழியாவதற்குரிய எத்தகைய தகுதிகளைக் கொண்டுள்ளது எனவும் பட்டியலிட்டாலும், அரைத்த மாவையே அரைக்காமல் வெவ்வேறான கோணங்களில் அவற்றை முன்வைத்த விதம் இரசனைப்புள்ளியை அதிகரிக்கச்செய்தது.

''போரால் மக்களுக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறுவதற்கு முன்னர், அவர்களது அழிவுகள் ,இழப்புகள் என்பவற்றின் வலிகள் மறைவதற்கு முன்னர் இந்தச் செம்மொழி விழா தேவைதானா என்ற கேள்விகள் எழக்கூடும். ஆனால் உண்மையில் எத்தகைய அழிவுகள் ஏற்பட்டாலும் தமிழ் மொழியையும், தமிழர்களின் தன்மான உணர்வையும் , தமிழ்ப்பண்பாட்டையும் எவராலும் அழிக்க முடியாது என்பதைப் பறைசாற்றுவதற்கு செம்மொழிவிழா காலத்தின் தேவையாகவுள்ளது.எத்தனையோ மொழிகள் உலகில் இருக்கின்ற போதும் , செம்மொழி என்னும் பெருமை, குறித்த சில மொழிகளுக்கு மட்டுமே உண்டு. ஒரு மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்படுவதற்கு சில தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும். தொன்மை மிக்கதாகவும், வேறு மொழிகளிலிருந்து பிரிந்து வராமல் சுயசார்பானதாக-தானே தாய்மொழியாக- இருக்கவேண்டும். அது தவிர விரிந்த ஆழமான காலத்தால் முந்திய இலக்கிய வடிவங்களைக் கொண்டிருக்கவேண்டும்.இவை அனைத்துமே போதிய அளவில் எம் தமிழ்மொழிக்கு உண்டு. ஆயினும் நீண்ட காலத்தாமதத்துக்குப் பின்னரே செம்மொழி அந்தஸ்து கிடைத்துள்ளது. கிரேக்கம்



லத்தீன், எதிரேனியம், சீனம், சம்ஸ்கிருதம் ஆகிய செம்மொழிகளின் வரிசையில் இப்போது தமிழும் இணைந்துள்ளது. இதில் இன்னொரு சிறப்பும் உண்டு. இந்தச் செம்மொழிகளில் சீனமொழிதவிர ஏனைய மொழிகள் யாவும் தற்காலத்தில் பயன்பாட்டிலிருந்து தொலைந்து செத்த மொழிகளாகமாறி விட்டன. ஆனால் தமிழ் மொழி இன்றைக்கும் தன் இளமை குலையாது, கன்னி




மொழியாகச் செழிப்போடு விளங்குகின்றது.

இத்தகைய பெருமை மிகு தமிழ்மொழிக்கு விழா எடுப்பதால் எமது மன்னார் தமிழ்ச்சங்கத்துக்குத்தான் பெருமை வந்து சேர்கின்றது'' ஆழமான- அளவான - உரை மூலம் விழாவின் நோக்கம், தமிழின் சிறப்பு என்பவற்றை விளக்கினார் மன்னார் தமிழ்ச்சங்கத்

## செம்மொழியால்

தலைவர் தமிழ்நேசன் அடிகள்.

''மன்னார் மண்ணிலே இத்தகையதொரு மிகப்பெரும் விழாவை எடுப்பதில் இருக்கும் சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றையெல்லாம் தாண்டி செம்மொழிவிழாவை நடத்துகின்ற மன்னார் தமிழ்ச்சங்கத்தினரை எப்படிப் பாராட்டுவதென்று வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருக்கிறேன். தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்கும் ,தமிழின் பெருமையை உலகெல்லாம் பரப்புவதற்கும் பாடுபட்ட தனிநாயகம் அடிகளைப் போன்றே, தமிழுக்காகவே உழைக்கின்ற தமிழ்ச்சங்கத்தின் தலைவர் தமிழ்நேசன் அடிகளையும் பார்க்கின்றேன். தமிழின் சிறப்பை மீண்டும் உலகின் முன் நிலைநிறுத்த வந்த இன்னொரு தனிநாயகம் அடிகளாக , தமிழ்நேசன் அடிகளாரையும் அடையாளப்படுத்தமுடியும்" யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மன்னார் தமிழ்ச்சங்கத்தின் பணிகளைப் பாராட்டினார்.

இதுவரையும் தமிழுக்கு அரசு சார்ந்த திணைக்களங்களே அரைகுறையாக விழா எடுத்து வரும் சூழலில், அந்நிலையை மாற்றி , ஒரு தனி அமைப்பாலும் வெகு சிறப்பாக செம்மொழி விழாவை நடத்த முடியும் என்பதை விழாவின் முதல் நாளிலேயே மன்னார் தமிழ்ச்சங்கத்தினர் நிரூபித்து விட்டனர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வாய்ச்சொல் சோறு போடாது

தமிழ் மக்களின் சுயகௌரவம், பண்பாட்டு விழுமியங்கள் என்பன பாதிக்கப்படாத வகையில் அரசியல் தீர்வொன்று எட்டப்பட வேண்டும்-

அத்தகைய அரசியல் தீர்வை அடைவதில் நாம் உறுதியாக உள்ளோம். எமக்குள்ளே பொதுப் பிரச்சினை ஒன்று இருக்கத்தான் செய்கிறது. எல்லோரும் ஒன்றுபடுவதன் மூலம் அதனைத் தீர்த்துக்கொள்ளலாம்-

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பெண்களை விடுவித்த நிகழ்வில் உரையாற்றிய புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் டியு குணசேகர இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சர் டியு குணகேகரவின் இந்தக் கருத்து, அல்லது விருப்பம் நியாயமானதே; வரவேற்கத்தக்கதே. இடதுசாரித் தத்துவங்களின் பிடிமானம் உள்ள அவரது கருத்து இவ்வாறு வெளிப்பட்டிருப்பது ஒன்றும் புதியதல்ல. ஆனால், ஆனால்... ஆனால்...

டியு அமைச்சராக அங்கம் வகிக்கும் அரசு அதே கருத்துடன் இருக்கிறதா என்பது உறுதியாகத் தெரியவில்லை. இந்தக் கருத்தை அவரது தலைவரும் சகபாடிகளும் விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டு அந்தத் திசைநாடிச் செயற்படுவார்களா என்பதே பென்னம்பெரிய கேள்வி.

தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கை, அவர்களது சுய கௌரவத்தை ஆதார சுருதியாகக் கொண்டதே. எந்த மனிதனும் தான் சுயகௌரவத்துடன் வாழ வேண்டும் என்றே விரும்புவான். அதுவே மனித வாழ்க்கையின் உள்ளுடல். அவனுக்குரிய- அவனுக்குச் சேர வேண்டிய- நியாயமான அடிப்படை உரிமைகள் கிடைத்தாலே அவனது சுயகௌரவம் காப்பற்றப்பட்டு விட்டதாக உணரமுடியும்; திருப்தி அடைய இயலும்.

இந்த யாதார்த்தம் சிங்கள் அரசியல் தலைவர்களுக்கு ஒன்றும் தெரியாததுமல்ல. ஆனால் தாங்கள் எண்ணிக்கையில் அதிகமானோர் என்பதால், தங்களிடம் அதிக நிலப்பரப்பு உண்டு என்பதால் சிறுபான்மையினரான தமிழர்களை அடக்கி ஒடுக்கி, இரண்டாம் தரப்பிரசைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற ஒவ்வாத போக்கே அவர்களிடம் என்றும் மேலிட்டு நிற்கின்றது.

இனவாதத்திலும், மேலாண்மைப் போக்கிலும் ஊறிவிட்ட அவர்களால் தமிழர்களின் சுயகௌரவம் குறித்தோ அவர்களது பாரம்பரியம், பண்பாடு, அடிப்படை அரசியல் உரிமை குறித்துத்தோ சிந்திக்க கிஞ்சித்தும் மனம் ஏவாது. இதுவே பெரும்பான்மையினர், தமிழர் உரிமைகளை மறுப்பதற்கு அவர்களை அடக்கி ஆள்வதற்குமான மூலகாரணம்.

இனப்பிரச்சினைக்கு நியாயமான, நீதியான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அறுபது வருடங்களாகச் சிங்களத் தலைவர்கள் பின்னடிப்பதற்கும் அது விடயத்தில் காலம் கடத்துவதற்கும் இதுவே பின்னணி.

இத்தகைய தலைவர்களின் மனங்களை மாற்றி தமிழர்களுக்கு நியாயம் வழங்கத் தூண்டும் அரசியல் பலமும் மனத்துணிவும் அமைச்சர் டியுவிடம் உண்டா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

அவரது அரச தலைவரான ஜனாதிபதி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதினைத் தாமதிக்க, இழுத்தடிக்க, தம்மால் இயன்ற தந்திரோபாயங்களையும் உத்திகளையும் கையாண்டு வருகின்றார். ஆகக் கடைசியாக தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவது சாத்தியமானால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியம் என்று அறிவித்திருக்கின்றார்.

எனவே, அமைச்சர் டியு குணசேகர போன்றோர் தம்மால் இயன்றால் தமது தலைவரை ஆக்கபூர்மான பக்கத்துக்குத் திருப்புவதற்குக் கூட்டாக முயற்சி எடுக்க வேண்டும். இனி எந்தக் காரியமும் அவர் மனம்போல் தான் நடைபெறும். ஆகவே இதனை மனதில் கொண்டு டியு போன்றவர்கள் அவரது மனம் அறிந்து கருத்துகளை வெளியிட வேண்டும்.

இதற்கிடையில் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வு செய்வதே பொருத்தம் என்று பிரிட்டனில் அந்நாட்டு அமைச்சர்களிடம் தெரிவித்திருக்கின்றார் வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். இவ்வாறு அமைச்சர்கள் நாட்டுக்கு நாடு சென்று 'சித்தாந்தம்' பேசுவது, பிரசாரம் செய்வது தமிழ் மக்களின் சுயகௌரவத்தை காக்கும் விதத்தில் எதுவுமே நடக்கப் போவதில்லை என்பதற்கான குறியீடுகளே அன்றி ஆக்கபூர்வமான, பயன்தரவல்ல நிலைக்கு இட்டுச்செல்லக்கூடிய குணங்குறி அல்ல. இவர்களின் வாய்ச்சொல் தமிழர்களின் அரசியல் மீட்சிக்குத் துளிதானும் உதவாது. மாறாக வெறும் வாய் வேதாந்தமாகக் காலத்தை வாங்கிச் செல்லும்.

# இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்பு கட்டாரிலும் கிட்டாது போகும் அபாயம்

கொழும்பு, ஒக்.24

கட்டாரிலுள்ள இலங்கைக்கான தூதரகத்தின் செயற்பாடு காரணமாக அந்த நாட்டின் வேலைவாய்ப்புச் சந்தையில் இலங்கையருக்கான வாய்ப்புகள் இழக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையர்களைப் பணிக்கு அமர்த்திக் கொள்ளும் அந்த நாட்டு எஜமானர்கள் தாம் பணியில் அமர்த்திக் கொள்ளும் ஒவ்வொரு ஊழியர் தொடர்பாகவும் தனித்தனி வேலை வாய்ப்பு ஒப்பந்தங்களை முன்வைக்க வேண்டுமென கட்டாரிலுள்ள இலங்கைக்கான தூதரகம் விதித்துள்ள புதிய கட்டுப்பாடே இந்த நிலைக்குக் காரணம் என ஆண் பணியாளர்களை அனுப்பி வைக்கும் வெளி நாட்டு வேலை வாய்ப்பு முகவரான ஏ.எச்.எம்.அன்ஸார் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் வேலை வாய்ப்பு வெற்றிடங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படுவோருக்கான ஒப்பந்தங்களை ஒரே தடவையில் முன்வைப்பதே வழமையாக இருந்தது.

கடந்த ஆண்டின் ஜூலை மாதத்தில் விதிக்கப்பட்டுள்ள புதிய சட்ட விதிகளுக்கு அமைய, இலங்கையர்களைப் பணியில் இணைத்துக்கொள்ளும் போது, தனித்தனியாக ஒவ்வொரு பணியாளருக்காகவும், அடிக்கடி தூதரகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளதால் கால விரையமும் சிரமமும் ஏற்படுகின்றது.இதனால் இலங்கைப் பணியாளர்களுக்குப் பதிலாக நேபாளம், இந்தோனேசியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து பணியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு கட்டார் நாட்டு எஜமானர்கள் முன்வந்துள்ளதாகவும் அன்ஸார் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைப்பாடு தொடர்பாக கட்டாரிலுள்ள வெளிநாட்டு முகவர்கள் ஒருங்கிணைந்து இலங்கை ஜனாதிபதிக்கு எழுத்து மூல முறைப்பாடொன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கட்டாரிலுள்ள இலங்கைக்கான தூதுவருடன் பேச்சு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் எந்தவித பயனும் கிட்டவில்லை எனவும் அவர் கூறினார்.

கடந்த ஜூலை மாதம் வரை மாதாந்தம் 3, 000 பேர் வரை இலங்கையர்கள் கட்டார் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுள்ளனரெனவும், தற்போது மாதமொன்றில் 500 பேர் மட்டுமே கட்டார் வேலை வாய்ப்புகளுக்குச் செல்ல முடிகிறது எனவும் அன்ஸார் மேலும் கூறினார். (த-22)

# சங்குப்பிட்டிப் பாலப் புனரமைப்பு டிசெம்பருக்குள் முடியவேண்டும்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஒக்.24

பூநகரியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் சங்குப்பிட்டிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் முடிக்குமாறு பெருந்தெருக்கள் அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதியன்று பெருந்தெருக்கள் அமைச்சின் அதிகாரிகளுடன் அலரிமாளிகையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார் குறிப்பாக பூநகரி மற்றும் யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரச் செயற்பாடுகளின் முக்கிய மார்க்கமாக இந்தப் பாலம் உள்ளதால் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பால நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் தென் பகுதிக்கான அதிவேக மார்க்கத்தை விரைவுபடுத்துமாறும் 2011 ஆம் ஆண்டாகும் போது அதன் நிர்மாணப் பணிகள் முடிவுக்கு வர வேண்டும் என்றும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (த-22)

# மருத்துவ பீடங்களில் ஆண்டு தோறும் 30 பூட்டான் மாணவர்களுக்கு அனுமதி

கொழும்பு, ஒக்.24

ஒவ்வொரு ஆண்டும் இலங்கையின் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் பூட்டான் மாணவர்கள் 30 பேரை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை மற்றும் பூட்டான் நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது எனவும், அதற்கமைய அந்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களில் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் உள்வாங்கப்பட்டு இந்த நாட்டு மாணவர்களுடன் மருத்துவ விஞ்ஞானக் கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டின் தேசியப் பல்கலைக்கழகங்களைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கு வெளிநாட்டு மாணவர்களும் அவற்றில் கல்வியைப் பெறும் நிலைப்பாட்டை உருவாக்க வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

# சத்தியசாயி நிலையத்தில் விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.24

திருநெல்வேலியிலுள்ள சத்திய சாயி நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் 'வெற்றிக்கு நம்பிக்கை அவசியம்' எனும் கருப்பொருளில் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தியும், 'இறை அனுபவம்' எனும் கருப்பொருளில் வைத்தியகலாநிதி சி.சிவகோணேசனும் உரை நிகழ்த்துவர்.

அத்துடன் நிலைய இளைஞர் அணியின் 'பரீட்சைக்கு நேரமாச்சு' எனும் தலைப்பிலான நாடகமும் இடம் பெறவுள்ளது. (த-16)

# ஆனையிறவு உப்பளத்தின் ஊழியருக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக்.24

ஆனையிறவுப் பிராந்திய உப்பளத்தின் முன்னாள் ஊழியர்கள் அனைவருக்கும் தொழில் திணைக்களத்தால் சம்பள நிலுவை மற்றும் சட்டரீதியான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இக்கொடுப்பனவுகள் வவுனியாவில் இன்றும், யாழ்ப்பாணத்தில் நாளையும் தொழில் திணைக்களத்தால் பெயர் அறிவிக்கப்பட்ட 50 ஊழியர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு மிகுதி ஊழியர்களுக்கு கட்டம் கட்டமாக கொடுப்பனவுகள் வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கொடுப்பனவுக[ள்] பெறுவதற்கும் அவர்களை அடையாளம் காண்பதற்காகவும் இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் இலங்கை உப்புக் கம்பனிக் கிளையின் முன்னாள் செயலாளர் வே.சுந்தரலிங்கம் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கத்தில் யாரேனும் முன்னாள் உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்கள் இருப்பின் அவ்வாறான உறுப்பினர்களின் சட்டபூர்வ வாரிசுகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அவர்களது தற்போதைய முகவரிகளை அறியத் தருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (15)

# இலங்கையில் உள்ள செல்பேசிகளில் 30 வீதமானவை தரநிர்ணயம் அற்றவை

## தொலைத்தொடர்பு ஆணைக்குழு தகவல்

கொழும்பு, ஒக்.24

இலங்கையில் விற்பனை செய்யப்படும் செல்லிடத் தொலைபேசிகளில் 30 வீதமானவை முறையான தரநிர்ணயம் அற்றவை எனவும் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிப்பவையெனவும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இத்தகைய செல்பேசிகளை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் அனைத்துச் செல்பேசிகளும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளன. அவ்விதம் பதிவு செய்யப்படாத தரநிர்ணயமற்ற செல்பேசிகள் பெருமளவில் இப்போது சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே அடுத்த ஆண்டு முதல் புதிதாகச் செல்பேசிகளைக் கொள்வனவு செய்வோர் மேற்படி ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள நட்சத்திரத்தின் குறியீட்டுடன் (✱) ரீ.ஆர்.சி. என்ற எழுத்துக்களும் உள்ளதா என்பதைக் கவனித்து வாங்குவதன் மூலம் பாவனைக்குப் பொருந்தாத செல்பேசிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் செல்பேசிகளை இறக்குமதி செய்யும், சந்தைப்படுத்தும் நிறுவனங்களுக்கு ஓராண்டுகால அவகாசத்தை வழங்கி இத்தகைய தரம் குறைந்த தொலைபேசிகளை அகற்றுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரீ.ஆர்.சி. எழுத்துக்களை கொண்டிருக்காத செல்பேசிகளுக்குத் தொடர்புகளை வழங்க வேண்டாமெனவும் தொலைபேசி நிறுவனங்களுக்கு அறிவுறுத்துவதன் மூலம் தரமற்ற தொலைபேசிகளைத் தடை செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 08 | | 25.10.2010 திங்கட்கிழமை |
| திதி: | : | துதியை மு.ப. 9.18 வரை |
| நட்சத்திரம் | : | கார்த்திகை பி.இ. 01.23 வரை |
| சுபநேரம் | : | 12.02 - 01.32 வரை |
| ராகுகாலம் | : | 07.32 - 09.02 வரை |

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழா கூடைப்பந்தாட்டம் பரபரப்பாக நடந்த இறுதியாட்டங்கள்

## ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ், பெண்கள் பிரிவில் கன்னியர் மடம் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஒக்.24

'உதயன்' நாளிதழ் வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்தப் பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றுமாலை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஆண் கள் பிரிவில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக் கழக அணியும் பெண்கள் பிரிவில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை அணி யும் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தன.

இந்தச் சுற்றுப்போட்டித் தொடரில் இறுதியாட்டங்கள் நேற்று மின்னொளியில் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந் தாடத் திடலில் இடம்பெற் றன.

நேற்றுமாலை மின் ஒளியில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் திருக்குடும்பக் கன் னியர் மட பாடசாலை அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட் டுக் கழக அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்றவண்ணம் இருந்தனர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது திருக் குடும்பக் கன்னியர் மட பாடசாலை அணியினர் 26:16 என்ற புள்ளி அடிப்படையில் முன்னணியில் இருந்தனர்.


கூடைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் பங்குபற்றிய ஆண், பெண் அணிகளின் வீரர்களை 'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனுக்கு அறிமுகம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

இரண்டாம் பாதி ஆட்டத்திற் காக ஆட்டம் தொடங்கிய போது இரண்டு அணியினரும் மிக உற் சாகத்தோடு தமது அணி வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கோடு மிகவும் உத்வேகத்தோடு இருஅணி யினரும் மோதிக் கொண்டனர்.

எனினும் ஆட்ட நிறைவில் திருக்குடும்பக் கன்னியர் மட பாட சாலை அணி 43:27 என்ற புள்ளி அடிப்படையில் பமிலியஸ் விளை யாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டு சம்பியன் ஆனது.

இதனைத் தொடர்ந்து ஆண் களுக்கான இறுதியாட்டம் இடம்பெற் றது. சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளை யாட்டுக் கழக அணி மோதி யது.

இரு அணியினரும் ஆட் டம் தொடங்கியது முதல் தத்தமது அணியே வெற்றி பெற வேண்டும் என்ற நோக் கோடு மோதினர்.

ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் தமது ஆட்ட வேகத்தை அதிகரித்து மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர்.

ஆட்டம் இடைவேளைக் காக இடைநிறுத்தப்பட்ட போது சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக் கழக அணி 38:33 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம் பித்த போது இரண்டு அணியின ரும் மிக ஆக்ரோசத்தோடு முட்டி மோதி மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர்

எந்த அணி வெற்றி பெறும் என்று கூறமுடியாத அளவில் இரு அணியினரும் மோதிக்கொண்டு புள்ளிகளைப் பெற்றவண்ணம் இருந்தனர்.

ஆட்டம் முடிவதற்கு 15 நிமி டங்கள் இருக்கையில் சென்ற லைட்ஸ் (சொக்ஸ்) அணியினர் எதிர் அணியினரின் தடுப்புகளை யும் மீறி புள்ளிகளைப் பெற்றனர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் எதிர் அணி யினரின் தடுப்புகளை மீறிப் புள்ளிகளைப் பெற்றனர்.

எனினும் ஆட்ட நிறைவில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி யினர் 80:71 என்ற புள்ளி அடிப் படையில் ஜொலிஸ்ரார் அணியை வெற்றிகொண்டு சம்பியன் ஆகி னர். (ஐ-23)

## இறுதிப்போட்டி இன்று

வலி.வடக்கு ஒக்.24

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணி யம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்திய 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு தெல்லிப்பழை பூமா விளை யாட்டுக் கழக மைதானத்தில் சி.தயாளபாலன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி லலித் வீரசிங்க, ஆசிரியர் கே. சசிக்குமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர் சி.தவராசா, பூமா விளை யாட்டுக் கழகத் தலைவர் சி.உமாகரனும் கலந்து கொள்வுள்ளார்கள்.

இறுதிப் போட்டியில் நாச்சிமார்கோயில் காமாட்சி வி. கவும், உரும்பிராய் திருக்குமரன் வி. கவும் மோதவுள்ளன. மற்றுமொரு காட்சிப்போட்டியில் உடுவில் கிங்ஸ்ஸ்ரார் வி.கவும் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் வி.கவும் மோதவுள்ளன. (த-86)

### பாடசாலைகள் 15 வயதுப் பிரிவுத் துடுப்பாட்டம்

## கனிஸ்ரன் ஆறு விக்கெட்டுக்களை சாய்க்க இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது யாழ்.சென்றல்

யாழ்ப்பாணம், ஒக்.24

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் துடுப் பாட்டச் சங்கத்தினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்டுவரும் 15 வயதுப் பிரிவினருக் கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி யாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி 86 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது.

கடந்த சனிக்கிழமை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

யாழ்.மத்தியகல்லூரி அணி 46.5 ஓவர்க ளின் நிறைவில் சகல விக்கெட்டுகளை யும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

அலன்டிலேன் 46 ஓட்டங்களையும், ஜெயந்திரன் 21 ஓட்டங்களையும், யூலியஸ் கனிஸ்ரன் 16 ஓட் டங்களையும் சௌமிதரன் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி அணி வீரர் களான அனுராஜ் 4.5 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், மயூரன் 5 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டங்க ளைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் பிரசாந் 10 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், வசிகரன் 9 ஓவர் கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை யும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய மகாஜனக் கல்லூரி அணியினர் 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்கள் மட்டும் பெற்றனர்

சிந்துயன் 11 ஓட்டங்களையும், ஜெனந்தன் 8 ஓட்டங்களையும், சரன் ஜன் 5 ஓட்டங்களையும் தமது அணிக் காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்தியகல் லூரி அணி வீரர்களான யூலியஸ் கனிஸ்ரன் 7.1 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும், சௌமிதரன் 8 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட் டங்களைக் கொடுத்து 03 விக்கெட்டுகளையும், ஜெயந்திரன் 3 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை யும் வீழ்த்தினர். (ஐ-23)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மானிப்பாய் சோதிவேம்படி
வித்தியாசாலை மாணவன்
செல்வன் வசீகன் சிவசத்திநாதன் (சசி)
2010 தரம் ஐந்தின் புலமைப் பரிசில் பரீட்சையில்
164 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார்.
அவர் கல்வித் துறையில் பல சாதனைகள்
படைத்து மேலோங்கி வளர வாழ்த்துவோர்.

திரு .திருமதி சிவபாலன் (பெரியப்பா, பெரியம்மா)
ஜீவானந்தம் (பெரியண்ணா),
ஜீவகன் (சின்னண்ணா),
அப்பம்மா மற்றும் உறவுகள்.

கூழாவடி லேன்,
ஆனைக்கோட்டை.



## நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயம் நாகர்கோயில்

### ஆலய திருப்பணிச்சபை அமைப்பது தொடர்பான அவசரக் கூட்டம்

இடம் : நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய முன்றில்.
காலம் : 07.11.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி.
தலைமை : மு. சிதம்பரப்பிள்ளை
(ஆலய பரம்பரைத் தலைவரும், நம்பிக்கைப்பொறுப்பாளரும்).

நிகழ்ச்சிநிரல்

1. இறைவணக்கம்.
2. தலைவர் உரை.
3. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் உரை.
4. ஆலய புனரமைப்புத் தொடர்பான விடயங்கள்.
5. திருப்பணிச்சபைத் தெரிவு.
6. பிற விடயங்கள்.
7. நன்றியுரை.

கடந்தகால நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் சிதைவடைந்துள்ள ஆலயத்தினை உடன் புனரமைத்து கும்பாபிஷேகம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நாகர்கோயில் வாழ் மக்கள், திருவிழா உபயகாரர் அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்து ஆலயத் திருப்பணியில் ஈடுபடும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மு.சிதம்பரப்பிள்ளை
(தலைவர்)


### யாழ்.லீக்கின் உதைபந்தாட்டச் சுற்றில் ஆதிசக்தி அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்.லீக்கின் அனுசரணை யுடன் புத்தூர் எவ றெஸ்ட் விளையாட் டுக் கழகம் நடத்தி வரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் ஆதி சக்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த வியாழக் கிழமை எவ றெஸ்ட் விளையாட் டுக்கழக மைதா னத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் கழக அணி மோதியது. இதில் ஆதி சக்தி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண் டது. (உ-23)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். நூலகத்தை முற்றுகையிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்க வேண்டி வரும்'' என மிரட்டினார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் பின்வாங்கினர். சம்பவ இடத்திற்கு வந்த படையினரும் வளாவிருந்தனர்.

யார் வந்தாலும் தாம் நூலகத்திற்குள் சென்றே தீரவேண்டும் என்று தென்னிலங்கைவாசிகள் விடாப்பிடியாக நின்றனர். இதனை அடுத்து நூலக நிர்வாகிகள் அவர்களுடன் பேச்சு நடத்தினர். அதே சமயம் பாதுகாப்புத் தரப்பினர் யாழ். மாநகர முதல்வருடன் தொடர்பு கொண்டு பேசினர். நிர்ப்பந்தங்களும் அழுத்தங்களும் அதிகரித்ததை அடுத்து மாலை 5.30 மணியளவில் தென்னிலங்கைவாசிகள் நூலகத்திற்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொது நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்ததாவது:-

யாழ். பொது நூலகத்தில் மருத்துவச் சங்க மாநாடு நடைபெற்றதால் சுற்றுலாப் பயணிகளை உள்ளே அனுமதிப்பதில்லை என முடிவெடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான அறிவித்தல் பதாகையும் வைக்கப்பட்டிருந்தது.

நேற்று மாலை நூலகத்திற்கு வந்த சுற்றுலாப் பயணிகள் தம்மை உள்ளே விடுமாறு வாயில் காவலர்களுடன் தகராறில் ஈடுபட்டனர். இதனை அடுத்து அங்கு வந்த பொலீஸார், இராணுவத்தினர் இந்த விடயத்தில் தலையிட்டதனால் சுற்றுலாப் பயணிகள் உள்ளே அனு மதிக்கப்பட்டனர் - என்றார்.

சம்பவம் குறித்து பலாலி படைத்தள ஊடகப் பிரிவு தெரிவித்தாவது:-

மாத்தறை, காலியில் இருந்து வந்த உல்லாசப் பயணிகள் காலையில் நூலகத்துக்குச் சென்று நூலகத்தைப் பார்வையிடப் போவதாகக் கேட்டுள்ளனர். அவர்களை மாலையில் வருமாறு அங்கிருந்தவர்கள் கூறி உள்ளனர். அதன்படி மாலையில் சென்ற அவர்கள் உள்ளே நுழைய முடியாதவாறு நுழைவாயில் இழுத்து மூடப்பட்டிருந்தது. அங்கிருந்த காவலர் மக்கள் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

மக்கள் அவருடன் வாக்குவாதப்பட்டனர். உடனே அவர்கள் தன்னைத் தாக்க முற்படுகின்றனர் என அவர் மாநகர முதல்வருக்குத் தகவல் கொடுத்தார். இதனை அறிந்த, உல்லாசப் பயணிகளுடன் வந்திருந்த உலக உணவுத் திட்ட அதிகாரி ஒருவர் எமக்கு அறிவித்தார்.

காவலர் சொன்ன விடயத்தில் உண்மை எதுவுமில்லை. பின்னர் அங்கு வந்த பொலிஸ் அதிகாரியும் படை அதிகாரியும் முதல்வருடன் தொடர்பு கொண்டதை அடுத்து பயணிகள் நூலகத்தைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர் - என்று குறிப்பிட்டார்.

(உ-ஐ)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை யின் முன்னாள் ஓய்வு பெற்ற



சங்கீத ஆசிரியர்

அமரர்

**அருணாசலம் சோமசுந்தரம்**

அவர்கள் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகவும் துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயர் உற்றி ருக்கும் குடும்பத் தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்


அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/கனகரத்தினம் ம.ம.வி.,
யாழ்ப்பாணம்.

(சி/571762)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் இரகுநாதன்

*(இலகுப்பிள்ளை)*



ஆவரங்கால் கிழக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இரகுநாதன் (இலகுப்பிள்ளை) நேற்று (23.10.2010) சனிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்கி வீதி,*
*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.*

தகவல் :
**மனைவி, பிள்ளைகள்.**

(105122)

### சரவணமுத்து வைரமுத்து



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து வைரமுத்து நேற்று (23.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் புஸ்பலதா (லண்டன்), புஸ்பராஜன் (லண்டன்), புஸ்பரஜனி, புஸ்பகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யசோதரன் (லண்டன்), நிரோஜா (லண்டன்), குகதாசன் (பிரான்ஸ்), சுபத்திரா (ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும் கனகம்மா, சிவபாக்கியம், இரத்தினமலர், மலர்மணி, தங்கேஸ்வரன், குகனேஸ்வரி, யோகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரீதா, யதுண், யாதவி ஆகியோரின் அருமைப் பேரனும் செல்வராசா (பிரான்ஸ்), யோகேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.10.2010) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

தகவல் :
**குடும்பத்தினர்.**

(105107)


## தேவை

வெள்ளவத்தை வீட்டில் தங்கி இருந்து வேலை செய்ய, சமைக்கத் தெரிந்த இளம் பெண் தேவை.
(தரகர் தேவை இல்லை)
தொடர்புக்கு : 0786525103

## தவறிவிட்டது

23/10/2010 அன்று கன்னாதிட்டிச் சந்திக்கும் மானிப்பாய் வீதி கூழாவடிக்கும் இடையில் இரண்டு திறப்புக் கோர்வைகள் நீலநிறப்பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள விலாசத்திலோ அல்லது தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீபவனம்,
கூழாவடிலேன்,
ஆனைக்கோட்டை.

திரு.M.யாழ்ராஜ்
தொ.பே.எண் - 0776986914, 0776623564.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் தட்டாதெரு எனும் வீதியில் (இத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) 4½ பரப்புச் சதுரக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு : 0774071551
0214900670

## காணி விற்பனைக்கு

திக்கம் சாராய வடிசாலைக்கு முன்பாகவுள்ள RDA றோட்டில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0773630497, 0113088279

## கடை வாடகைக்கு

யாழ். கே.கே.எஸ் வீதியில் இல.77இல் அமைந்துள்ள கடை வாடகைக்குண்டு. (திருமுருகன் கொம் நெற்றிற்கு அருகில்)
தொடர்பு : 0772356355, 0779937402

## வீடு வாடகைக்கு

கச்சேரி - நல்லூர் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட 5 அறை வீடு வாடகைக்குண்டு (தொலைபேசி வசதியும் உண்டு)
தொடர்பு : 0777654585

## வீடு வாடகைக்கு

வட்டுக்கோட்டையில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு : 0213211126

## தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, சாவல்கட்டு என்னும் முகவரியினைச் சேர்ந்த நடராசா நிரஞ்சன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (830374760V) உட்பட பல ஆவணங்களுடன் பேர்ஸ் நட்டா தெருச் சந்திக்கும், உயரப்புலத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியிலோ அல்லது கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தந்துதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.
தொடர்பு : 0779227225

## வீடு விற்பனை

முஸ்லிம் கல்லூரி வீதி, கற்குள லேன், கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் 1½ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 0774561727

## மக்ஸ்சல் CD Land

ஆங்கிலம், தமிழ், ஹிந்தி பழைய
DVD போட்டோக்கள் : 5/=
VCD போட்டோக்கள் : 4/= (செற்)
விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு :-
பலாலி றோட், கோண்டாவில்,
டிப்போ முத்தொளி வீடியோ அருகில். (No-1)
T.P : 0215675550

## வீடு விற்பனைக்கு

உடுவில் தெற்கு, முருகமூர்த்தி கோயிலடியில் 3¼ பரப்புக் காணியில் அமைந்த வீடு (5 அறைகள், 2 ஹோல்) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0777491589
★ தரகர் தேவையில்லை.


## மரண அறிவித்தல்கள்

### நாகன் அம்பலவாணர்



இணுவில் கிழக்கு, காரைக்கால் லேனைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாவும் கொண்ட நாகன் அம்பலவாணர் நேற்று (23.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், விஸ்வநாதன் (ஜெயா-ஜேர்மனி), யோகேஸ்வரி (விசி-இணுவில்), கலையரசி (கலா-லண்டன்), சாரதா (சாந்தா-ஜேர்மனி), கோடீஸ்வரன் (கிருபா- ஜேர்மனி), கதிர்காமநாதன் (சுதா-லண்டன்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜவேல் (ரவி-மருமகன்).
[உரிமையாளர் :- சிற்றூர்தி: 60-5320
தெல்லிப்பழை-769]
காரைக்கால் றோட், இணுவில் கிழக்கு.

தகவல் :
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(105049)

### திருமதி ரகுகுமார் செல்வரஞ்சினி

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ரகுகுமார் செல்வரஞ்சினி (14.10.2010) வியாழக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் ரகுகுமாரின் அன்பு மனைவியும் அறிவரசனின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் சரோசினிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும், வலந்தலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சாவித்திரிதேவி தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வராணி, செல்வராசா, செல்வமலர், செல்வரூபி, செல்வகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகுமாரி காலஞ்சென்றவர்களான பானுமதி, சிவகுமார் மற்றும் வசந்தகுமாரி, நந்தகுமார், பூபாலசிங்கம், விநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது துக்க அனுஷ்டிப்பு காரைநகர், சந்தம் புளியடியில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*சந்தம்புளியடி,*
*காரைநகர்.*

தகவல்:
**திருமதி சரோசினிஅம்மா செல்வரத்தினம் (தாய்)**

(105106)

### திருமதி பொன்னம்பலம் செல்லம்மா



தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், குரு வீதி, காங்கேசன்துறை குருநாதசுவாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் செல்லம்மா நேற்று (23.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம்- முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிற்றம்பலம், காலஞ்சென்ற வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர், றிபேக் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலச்சந்திரன், காலஞ்சென்ற பத்மநாதன் (பொலிஸ் சாஜன்ட் மேஜர்), காலஞ்சென்ற கமலநாதன் (பொலிஸ் சாஜன்ட்) மற்றும் மனோரஞ்சிதமலர், காலஞ்சென்ற யோகநாதன் (ராணுவ மேஜர்), விமலநாதன் (பொறுப்பதிகாரி, லங்கா சிமெந்து நிறுவனம், யாழ்.) ஆகியோரின் அன்புத்தாயாரும், பரமானந்த தேவி, பிறேமவதிராணி (கனடா), காந்திமதி, சுசிலாதேவி (லண்டன்), காலஞ்சென்ற தவராஜா(உதவிப் பொலிஸ் அதிகாரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை, அழகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும், தமிழ்ச்செல்வி (ஆசிரியை), தமிழ்பிரியா (வவுனியா வளாகம்), சிவனேசன் (செலான்வங்கி, யாழ்ப்பாணம்), கலையரசி (கனடா), எழிலரசி (கனடா), பொன்னம்பலம் (கனடா), திருவேந்தன், எழில்வேந்தன், பத்மவேந்தன், பத்மதர்ஷினி (கனடா), பத்மஜெனனி, புவனசிறிகரன் (கனடா), நந்தீஸ்வரன் (கனடா), கணேசநாதன் (கனடா), நிரோஜன், வபித்ரா, சுஜித்ரா, திருச்செந்தூரன், பத்மகஜானி (லண்டன்), யோகசீலன் (லண்டன்), பானுமதி, ரகுவர்மன், துஸ்யந்தி, ரவிவர்மன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சிவபிரித்தன், பிரணவி, துளசிகன் (கனடா), சப்ராஜ், வைஸ்ணவி, சாய்ராம் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2010) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு உரும்பிராய் வடக்கு, (நகுலன் கடை முன்வீதி) உரும்பிராயில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நகுலன்கடை முன்வீதி,*
*உரும்பிராய்.*

தகவல்:
**த.மனோரஞ்சிதமலர் (மகள்)**

(105105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## லண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு.

**No Need IELTS**

**Bank Sponsorship**
ஒழுங்குசெய்துதரப்படும்.



*West London College,*
*Ethames Graduate School,*
*East London College,*
*Cambridge Ruskin International College* போன்ற பிரபலமான **UKBA Highly Trusted** கல்லூரிகளில் உயர்கல்வி கற்க ஓர் அரியசந்தர்ப்பம்.
சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
January, February Intake இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விசாவிற்கு 100 % உத்தரவாதம்.

கடந்த வாரத்திலும் எமது மாணவர்கள் பலர் விசாக்களைப் பெற்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

*SM Consultant services*
148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.
Mobile: 0774528818, Tel: 0215673818, Fax: 0212223818.
E-mail: mg1404_2009@yahoo.com

---

தீபாவளியை முன்னிட்டு.....

## சிற்றிஷன் போய்ஸ் செலக்சன் & ரெய்லரிங்



தீபாவளியை முன்னிட்டு கோட் சூட் வகைகள் புதியமொடல் ஜீன்ஸ் வகைகள், சேட், ரீ-சேட் வகைகள், சேட்டிங் சூட்டிங், தொப்பி, பெல்ற், பேர்ஸ் வகைகள் போன்றவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும், Juki, Hara, Over Lock Machines, மெசின் உதிரிப்பாகங்கள், தையல் உபகரணங்கள், நூல் வகைகள் அனைத்தையும் கொழும்பு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- ரீ சேட் வகைகள் அதிகூடிய சிறப்புத் தள்ளுபடி. தலைப்பாகை, புதிய, பழைய கோட்வகைகள் வாடகைக்குண்டு.

இல.01, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

கிளை- இல.302,பலாலி வீதி, ஆலடிச்சந்தி, திருநெல்வேலி.
T.P: 0776143301

---

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், திருத்துதல், மாபிள் பதித்தல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், வர்ணம் பூசுதல் போன்ற வேலைகள் குறித்த காலத்தில் தரமாகவும் நியாயவிலையிலும் செய்துகொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION, JAFFNA
தொடர்புகளுக்கு : 0776679364, 0213207202, 0213218088

---

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax:222 4460

**CMPUTER REPAIRING**

Computer (Laptop, Desktop) Monitor, UPS, என்பன உங்கள் நிறுவனம் or வீடுகளுக்கு வந்து பழுதுபார்த்து கொடுக்கப்படும். உங்கள் கணனிகளில் ஏற்படும் வைரஸ் பிரச்சனைகளுக்கு (ESET Smart Security 1Year License Verson with 1GB Kingston Micro SD Free. Rs. 1860 மட்டுமே) அனைத்து கணனிகளின் உதிரிப்பாகங்களையும் குறைந்த விலைகளிலும், உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
(கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)

---

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA

| | |
|---|---|
| PHYSICS | K.SELVAN B.sc. (Hons) |
| DAY CLASS | 2011 A/L |
| ELECTRICITY | மின்புலம் |
| துரித மீட்டல் வினா விடை | ஆரம்பம்-25/10/2010 |
| ஆரம்பம்-26/10/2010 | MON,THU-(6.00)P.M |
| TUE,THU-(5.00)P.M | |

---

**தொழில் ஒன்று தொடங்க விரும்புவோர்களுக்கு**

Royal wood (றோயல் வூட்) நிறுவத்தினால் உற்பத்திசெய்யப்பட்ட தளபாடங்களை யாழ். நகரில் விற்பனை செய்வதற்கு பொருத்தமான ஒரு இடம் தேவை. இடம் தர விரும்புவோர் பங்காளராக இணைந்து செயற்படக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
தொடர்புகளுக்கு:-0772010020

---

**STR TRAVELS**
யாழ்-கொழும்பு சேவை ஆசனப் பதிவுகளிற்கு
021-4921921

---

விசேட விலையில் சர்வதேச நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**Metro Travels & Tours (PVT) Ltd**
62/33, Stanly Ling Road, Jaffna.
தொடர்புகளுக்கு: 0215673555/666
Fax: 021 222 0404
E-Mail: info@metrotravels.lk

---

உன்னுநராசீ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தச்சட்டமூலத்தினால் மலையகத் தமிழர்களும் முஸ்லிம் மக்களும் பெரிதாகப் பாதிக்கப்படுவர்"- என்றும் மாவை மேலும் கூறினார்.
(உ-ஐ)

---

வீட்டையோ வேலைத் தளத்தையோ எந்தநேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க

**CCTV Camera**



தொடர்பு:
இல.111/2,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
*Hot Line:* 0750421776

---

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
**(Centre for International Language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

---

**காணி தேவை**

நிறுவனத் தேவைக்கு யாழ்.நகரப் பகுதியில் 10 தொடக்கம் 15 பரப்புக் காணி உடன் தேவை
தொடர்பு:-0777729780 (சி/572136)

---



**கலைமகள் அழகு நிலா பயிற்சி நிலையம்**

பெண்களே உங்களுக்கான அரிய சந்தர்ப்பம் நழுவவிடாதீர்கள்..!
வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 20 வயதிற்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கும் தந்தையை இழந்த இளம் பெண் பிள்ளைகளுக்குமான ஏழுநாள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சி முடிவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை இடம்பெறும். பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் தங்களது கிராம அலுவலர் அத்தாட்சிப் பத்திரத் துடன் சமூகமளிக்கவும்.

பயிற்சிகள்
- ★ Facial (எட்டு வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening (2 வகை)
- ★ Hair Perming
- ★ Hot Oil massage
- ★ Hair Cutting
- ★ Hair dry
- ★ Hair Colouring
- ★ Pedeicure manicure
- ★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
- ★ Bleaching
- ★ Bridal make up (5 வகை)

நேர்முகப் பரீட்சை: 29.10.2010, 30.10.2010
காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை
அனுமதிக் கட்டணம்: 2000/=,
பயிற்சிகள் ஆரம்பம்: 01.11.2010,
பயிற்சி நேரம்: மு.ப 9.30மணி-பி.ப. 4 மணிவரை.

கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

---

**தேவை**

யாழ். நகரில் இயங்கும் கல்வி நிறுவனத்திற்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற அல்லது ஆங்கில பட்டதாரி அலுவலக வேலைக்கும், பெண் வரவேற்பாளர் ஒருவரும் உடனடியாகத் தேவைப்படுகிறார்.
தொடர்புகளுக்கு-0777919293
e-mail:- manager@sec.edu.lk.

---

**விற்பனைக்கு**

**TOYATA HILUX Double Cab, 1991 MODEL**
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு நேரம் மாலை 4.00-6.00.
ச.திரவியம், 42, சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. T.P.-077-6139559

---

**VACANCY**

விற்பனை உதவியாளர், கணக்குப்பதிவாளர், (ஆண்/பெண்) ஆசனப்பதிவாளர்.
STR Multi Center, 45, Adiyapatham Rd, Thirunelvely. T.P-0777570150
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திருமண அழைப்பிதழ்கள் விற்பனைக்குண்டு.

---

**Galaxy Cabs**
Call us 021 3201201
யாழ் நகரில் முதல் முதலில் அறிமுகமாக்குகின்றோம். Call Cabs சேவையை. 35/= Per Km.

---

**உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்கள கரமான நிகழ்வுகளுக்கு....**

திருமண அழைப்பிதழ் காட்சியறை — Wedding Card Show Room

**மதி கலர்ஸ் பிறின்டர்ஸ்**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 500 க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம் புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக....
இணையதளம்:-www.mathicolours.com

இந்திய கணனி வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசாரத்துக்கேற்ற வர்ணக் கலண்டர்கள்(சாமிப் படம், சீனரி, பேபிப்படம், சினிமா)
- * 2011 ஆம் ஆண்டு பஞ்சாங்கக் கலண்டர் -A3
- * 2011 ஆம் ஆண்டு மாதாந்தக் கலண்டர் -A2
- * கொழும்பு விலையிலும் குறைவாக - மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

(முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளலாம்)
15/2, முருகேசர் லேன்,
நல்லூர்.
(சி/572140)
T.P.:- 021 222 9285
0777 222 524

---

**வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை**
**தீபாவளிப் பண்டிகை விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்**

ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்

DHL WORLDWIDE EXPRESS
➤ TCN Express
No-28,Nelson Place, Colombo-6

**திருமுருகன் கொம் ஹெற்**
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
➤ இல-46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. ➤ பிரதான வீதி, நெல்லியடி.
➤ இல-6,திருநகர் பிரதான வீதி ,கிளிநொச்சி. ➤ 4, மில் றோட் ,வவுனியா.

---

நீங்கள் **16** வயதுக்கு மேற்பட்டவரா! **Government** Schol.
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
**BIT, CIMA-UK, Engineering-USA**
A/L, O/L தேவையில்லை
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Closing Date 25.10.2010
**Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA , Hardware, ICDL**
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் ,
SMS your name & course to 772 395 895 & Get Schol.
**MCS**
Supported By UNDP/JRRP
324, Palaly Road,Campus Junction,Jaffna.

---

# Mr. Concrete

For all your concrete needs!

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். புலோலியில் இயங்கும் தனியார் கொங்கிறீட் கொம்பனிக்கு உடனடியாக வேலைக்கு ஆள்கள் தேவை.

உடனே தொடர்பு கொள்ளவும்.

Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk
Factory: புலோலி தெற்கு
Tel: 0217 222 333

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

WESTERN UNION | yes!

money transfer

yes!

# வெஸ்டர்ன் யூனியன் மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தினைப் பெற்று பெறுமதி மிக்க பரிசுகளை வென்றிட ஒரு அரிய சந்தர்ப்பம்!



மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் தங்க நாணயங்களை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகள் ஐவரில் ஒருவராகவோ அல்லது ஐரோப்பாவிற்கான பயணமொன்றினை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகளாகவோ விரும்புகிறீர்களா?

2010 ஒக்டோபர் 20ஆம் திகதியிலிருந்து எந்தவொரு வட பிராந்திய வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதிகள் மூலமாகவும் பணத்தைப் பெற்றுக்கொண்டால், மாதாந்தம் இடம்பெறும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் நீங்களும் பங்குபற்றி தங்க நாணயங்களையும், இருவர் ஐரோப்பா பயணிப்பதற்கான அதிர்ஷ்டத்தினையும் வென்றிடலாம்

| சீட்டிழுப்பு | வெற்றியாளர் தொகை | சீட்டிழுப்பு திகதி | பரிசுகள் |
|---|---|---|---|
| 1 வது சீட்டிழுப்பு | 05 | 24 நவம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 2 வது சீட்டிழுப்பு | 05 | 28 டிசெம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 3 வதும் இறுதியுமான சீட்டிழுப்பு | 07 | 17 ஜனவரி 2011 | 5 தங்க நாணயங்களுடன் இருவருக்கான ஐரோப்பா பயண டிக்கெட் |

தாமதம் செய்யாதீர்கள்! உடனேயே பணம் அனுப்புபவருக்கு அறிவித்து பெறுமதிமிக்க பரிசுகளை றிடும் சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள்.
மேலும் விபரங்களுக்கு எந்தவொரு வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதி நிலையங்களையும் அணுகுங்கள்.

## வெஸ்டர்ன் யூனியன்

- விரைவானது
- நம்பிக்கையானது
- இலகுவானது
- சட்டபூர்வமானது
- நாடளாவிய 4100 பிரதிநிதிகளையும் இலங்கையின் வட பகுதியில் 70 கிளைகளையும் உள்ளடக்கியது.

- இந்நிகழ்வு 2010 ஒக்டோபர் 20ஆம் திகதி ஆரம்பித்து 2011 ஜனவரி 15ஆம் திகதியுடன் முடிவடையும்.
- 5 தங்க நாணயங்களின் வெற்றியாளர்கள் ஒவ்வொரு மாதமும்: 24 நவம்பர் 2010, 28 டிசெம்பர் 2010, 17 ஜனவரி 2011. ஒரு சீட்டிழுப்பில் பங்குபற்றும் ஒருவர் ஒரு தங்க நாணயத்தினை மாத்திரமே வெல்லலாம். வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் ஒருவர் எத்தனை சீட்டிழுப்பிலும் பங்குபற்றலாம்.
- எந்த அளவு பணத்தினைப் பெற்றுக்கொண்டாலும் ஒரு பரிமாற்றத்தினை மேற்கொள்ளும் ஒருவர் ஒரு முறை மாத்திரமே பங்கு பற்றுவதற்கு தகுதியுடையவராவார்.
- ஐரோப்பா பயணத்திற்கான வெற்றிபெறும் தகுதி இருவருக்கு உரியது.
- இச்சீட்டிழுப்பு 2011 ஜனவரி 17 ஆம் திகதி இடம்பெறும்.
- இதன் ஏற்பாட்டாளர் முன்னறிவத்தலின்றி பயணிக்கும் நாட்டில் மாறுதலை ஏற்படுத்தலாம்.
- வெற்றியாளாகள் தமது பரிசுகளை 2011 ஜனவரி 22ஆம் திகதி இடம்பெறும் இறுதி இசை விழாவின்போது பெற்றுக்கொள்ளலாம். பரிசுகளை பெறுவதற்கான இறுதித் திகதி 2011 பெப்ருவரி 15ஆம் திகதியாகும். பயணச் சீட்டுகளை வெல்வோர் பயணிக்கும் தினத்தினை சீட்டுகளை பெறமுன்னரே அறிவிக்கவேண்டும்.
- ஏற்பாட்டாளரின் அனுமதியுடன், விமானச் சீட்டினை பணமாக மாற்றிக் கொள்ளலாம்.
- பயணச் சீட்டும், சேவையும் மூன்றாந்தரப்பினர் அல்லது பயண முகவரினாலோ மேற்கொள்ளப்படும். இச்சேவையினரால் அளிக்கப்படும் சேவைக்கோ பயண செலவு மற்றும் மேலதிக வரிக்கட்டணங்கள் வீசா கட்டணங்கள் அல்லது பயணத்தின்போது ஏற்படும் செலவுகளுக்கு வெஸ்டர்ன் யூனியன் பொறுப்பாளிகள் அல்ல.

licence No. WP/GT/3168

**தங்க நாணயங்கள் மற்றும் ஐரோப்பா பயண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு நிபந்தனைகளையும் சட்ட திட்டங்களையும் உள்ளடக்கும்**

பிரதான பிரதிநிதிகள்

MMBL Money Master | NDB வங்கி | மக்கள் வங்கி | ශ්‍රී ලංකා තැපෑල இலங்கை அஞ்சல் SRI LANKA POST | UNION BANK If it's important to you, it's important to us

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள் (அகரவரிசைப்படி)

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
2. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
3. இந்தியன் பாங்க்
4. இலங்கை வங்கி
5. எம்சிபி பாங்க் லிமிடெட்
6. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
7. கபீப் பாங்க் லிமிடெட்
8. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
9. சம்பத் பாங்க் பிஎல்சி
10. சிற்றி பாங்க் என்ஏ
11. செலான் பாங்க் பிஎல்சி
12. டீஎவ்சீசீ வர்த்தன பாங்க் லிமிடெட்
13. டொயிஷ் பாங்க் ஏஜி
14. நெசனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
15. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
16. கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
17. பப்ளிக் பாங்க் பெர்காட்
18. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
19. மக்கள் வங்கி
20. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்
21. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
22. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஷியல் சேர்விசஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட் (*)
9. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் கம்பனி லிமிடெட்
10. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
11. கப்பிட்டல் றீச் லீசிங் பிஎல்சி
12. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
13. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
14. கொமர்சல் கிறடிட் லிமிடெட்
15. சிங்கர் பினான்ஸ் (லங்கா) லிமிடெட்
16. சிலிங்கோ இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் றியல்டி லிமிடெட் (*)
17. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
18. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
19. சிற்றிசன்ஸ் டிவெலப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
21. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. செங்கடகல பினான்ஸ் கம்பனி லிமிடெட்
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி (*)
26. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
27. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
28. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
29. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட்ஸ் லிமிடெட்
30. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
31. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ற் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
33. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
34. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
35. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
36. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

### முக்கியமாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது

- மேற்கூறப்பட்ட நிறுவனங்களில் பணத்தை வைப்பிலிடும்போது பொதுமக்கள் தங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் எடுத்தல் வேண்டும்.
- உங்கள் வைப்புக்களின் பாதுகாப்புக்கு மத்திய வங்கி உத்தரவாதம் அளிக்க முடியாது.
- இந்நிறுவனங்கள், அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் உங்கள் வைப்புக்களை பாதுகாப்பதற்காக, மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை அனுமதியளிக்கப்படாத அல்லது இடர்நேர்வான நிறுவனங்களில் வைப்புச் செய்யாமல் அவற்றை பாதுகாக்கும்படி பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவதுடன் அப்படியான நிறுவனங்களினால் வைப்புக்கள் திரும்பச் செலுத்தப்படாத பழைய சம்பவங்களையும் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளவும் வேண்டப்படுகின்றனர்.

**இலங்கை மத்திய வங்கி**

தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொலைநகல் 2477711,
மின்னஞ்சல்: banksup@cbsl.lk
தொலைபேசி: 2477500, 2477504 தொலைநகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA 60 growth& stability

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லிக்கனி

## முதுமைக்குச் சவால்

இளமையை விரும்பாதவர்கள் எவரும் இருக்க முடியாது. இளமையின் வேகம், செயல்பாடு, புத்துணர்வு போன்றவை முதுமையில் கிடைப்பதில்லை. ஆனால் முதுமையை வென்று என்றும் இளமையுடனும் துடிப்புடனும் அதே உத்வேகத்துடனும், அனுபவமிக்க இளைஞர்களாக சிலர் வலம் வருவதை நாம் இன்றும் காணலாம்.

இளமையின் வேகம் மனதில் என்றும் வற்றாத நதியாக ஓடிக்கொண்டிருக்கும். அதுபோல் நம் நாட்டில் ஏராளமானோர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். சித்தர்கள், ஞானிகள் எப்போதும் இளைஞன் போல் வலம் வந்ததை பல ஏடுகள் மூலம் அறியலாம்.

எப்படி இவர்களுக்கு முதுமை நெருங்காமல் என்றும் இளமையுடன் வாழ்கிறார்கள் என்று பார்த்தோமானால் அவர்களின் உணவுக் கட்டுப்பாடும், உடற்பயிற்சியும் தான் காரணம்.

முதுமை என்பது இயற்கை தரும் அனுபவ மருந்து. அந்த முதுமையையும் இளமையாகக் கொண்டு வர பல அற்புதங்களை இயற்கையே படைத்துள்ளது.

ஆனால் இதைப் பயன்படுத்தாமல் அலட்சியம் செய்த சிலர் 30 வயதிலே 60 வயது முதியவர்போல் தோற்றமளிக்கின்றனர்.

அதற்குக் காரணம் முறையற்ற உணவும், உடற்பயிற்சியின்மையுமே ஆகும்.

இப்படி இளமையை முதுமையாக்கி உடலை நோய்களின் கூடாரமாக மாற்றியிருக்கும் இக்கால சமுதாயத்தை அன்றே உணர்ந்து என்றும் இளமையுடன் தோற்றமளிக்க 'தேரையர்' என்ற சித்தர் தான் எழுதிய 'தேரன் கண்ட உண்மை' என்னும் நூலில் மூப்புளகா யந்தணிந்து மோகம் பிறக்குமிள மாப்பிளை போலேயழகு வாய்க்குமே சேப்புவருங்கோமய முறுங் கறியை கொள்ளவி ரண்டுபங்கா யாமலக முண்ணமுறையால் பொருள்' எனக்கூறியுள்ளார்.

முதுமையைத் தொட்டவர்கள் இளமை நிறைந்த மாப்பிள்ளைகள் போல் அழகுடன் இருக்க நெல்லிக் கனியை பாகம் செய்து சாப்பிடச் சொல்கின்றனர்.

அரசன் அதியமான் தனக்குக் கிடைத்த அற்புத நெல்லிக்கனியை தான் உண்ணாமல் சங்கத்தமிழ் கண்ட மூதாட்டி ஔவைக்குக் கொடுத்ததாக பல வரலாற்று நூல்கள் மூலம் அறிகிறோம். இதிலிருந்து நெல்லிக்கனியின் அற்புதங்கள் அனைவருக்கும் புரியவரும்.

முதுமையை தடுக்கும் குணம் நெல்லிக்கனிக்கு உண்டு என்பதை சித்தர்கள் முதல் பாமரர் வரை அறிவர். ஆனால் நவீன ஆராய்ச்சி மூலம் இதை உண்மை என உரைத்திருக்கின்றனர்.

ஆண்டி ஒக்ஸிடேட் என்பது உடலில் உள்ள நச்சுப்பொருள்களை அகற்றி நோய் நொடிகளிலிருந்து உடலைக் காத்து முதுமையை விரட்டி என்றும் இளமையுடன் உடலை நன்னிலையில் இருக்கச் செய்யும் சக்தி இதற்குண்டு.

நெல்லிக்கனி பித்தத்தைச் சமப்படுத்தும்

பித்த அதிகரிப்பே முதுமைக்கும், உடல் சோர்வுக்கும் முக்கிய காரணமாகிறது. பித்தத்தைக் குறைத்து உடலிலும் இரத்தத்திலும் தேங்கியுள்ள கொழுப்புகளை உடைத்து கரைத்து வெளியேற்றும் தன்மை நெல்லிக்கனிக்கு உண்டு.

### நெல்லிக்கனியின் சிறப்பு

நெல்லிக்கனியின் சிறப்புகளில் ஒரு புத்தகமே எழுதும் அளவுக்குப் பயனுள்ளது.

தோடம்பழத்தை விட நெல்லிக்கனியில் 20 மடங்கு விற்றிமின் 'சி' சத்து நிறைந்துள்ளது.

அப்பிள் பழத்தை விட 3 மடங்கு புரதச் சத்து நெல்லியில் உள்ளது. அஸ்கார்பிக் அமிலம் என்னும் உயிர்ச்சத்து 160 மடங்கு நெல்லிக்கனியில் உள்ளது.

நெல்லிக்கனியில் உள்ள விற்றமின் 'சி' சத்து உடலில் உள்ள இரும்புச் சத்து உட்கிரகிக்கப்படுவதை ஊக்கப்படுத்துகிறது.

எச்.ஐ.வி, இன்புளுன்சா ஆகிய வைரஸ்கள் தாக்காமல் தடுக்கிறது.

இதய நாளங்களில், இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சீராக செயல்பட வைக்கிறது. இருதய அடைப்பை தடுக்கிறது.

மேலும் கார்போவைதரேற், நார்ச்சத்து, இரும்புச்சத்து, புரோட்டின், கால்சியம், பொஸ்பரஸ், விற்றமின் 'பி' கொம்ப்ளக்ஸ் நிறைந்துள்ளது.

# எரிபொருள் சிக்கனமானது என்பதால்

எமக்கு விடுதலை! எமக்கு விடுதலை! எமக்கு விடுதலை!




நவீன யுனுஜ தொழில்நுட்பம் எரிபொருள் செலவைக் குறைப்பதால் உங்களுக்கு விடுதலை

நம் நாட்டு விவசாயிகளின் விடுதலைக்காக இலங்கையில் முதல் தடவையாக 3* வருடகால உத்தரவாதத்துடன் ஃபாம்ட்ரக் உழவியந்திரம் வழங்கப்படுகிறது. நவீன யுனுஜ தொழில்நுட்பத்தில உருவாக்கப்படும் ஃபாம்ட்ரக், எரிபொருள் சிக்கனமும் அதிக சக்தியும் எஞ்ஜினின நீடித்த ஆயுட் காலமும் கொண்டது.

FARMTRAC ஹேலீஸ் அக்ரோ

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 077 363 3713, 077 438 5650

*நிபந்தனைகளுக்கு உட்படும்


# கற்பக மூலிகை கண்டங் கத்திரி

இன்றைய நவீன யுகத்தில் காற்றும், நீரும் மாசடைந்துள்ளது. மேலும் உணவுப் பழக்கங்களாலும் மனித உடல் நோய் எதிர்ப்பு சக்தி குன்றிக் காணப்படுகிறது. இதனால் முதலில் மனிதன் பாதிக்கப்படுவது சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களால் தான். உடலில் ஒவ்வாமை உண்டாகி அது நுரையீரலை அடைந்து இரத்தத்தில் கலந்து மூக்கில் நீரேற்றம், நீர் வடிதல், தலைவலி, சைனஸ் போன்றவற்றை உண்டு பண்ணுகிறது. நாளடைவில் காச சுவாச நோயாக மாறிவிடுகிறது.

கண்டங்கத்திரி சமூகத்தை (இலை, பூ, காய், பழம், விதை, வேர்) நிழலில் உலர்த்தி பொடித்து வைத்து அதனுடன் தேன் கலந்து காலையில் உணவுக்கு முன் சாப்பிட்டு வந்தால் காச சுவாசத்தின் பாதிப்பு குறைந்து நாளடைவில் குணமாகும். அல்லது இதன் பொடியை கஷாயமாக்கி அதனுடன் பனைவெல்லம் கலந்து அருந்தி வரலாம். இதனால் தலைவலி, மூக்கடைப்பு, மூக்கில் நீர் வடிதல் போன்றவை குணமாகும். சைனஸ் தொல்லையிலிருந்து முற்றிலும் விடுபட இது சிறந்த மருந்தாகும்.




### பசியைத் தூண்ட

மலச்சிக்கலும், சமிபாட்டுக் கோளாறும் நீங்கினாலே மனிதன் ஆரோக்கியமாக வாழலாம். இவை நீங்கினால் தான் உடல் புத்துணர்வு பெறும். நன்கு பசியெடுக்க குடலில் செரிமான சக்தி அதிகமாக இருக்க வேண்டும். கண்டங்கத்திரி, செரிமான சக்தியைத் தூண்டும் தன்மை கொண்டது. கண்டங்கத்திரியின் பழத்தை காயவைத்து பொடியாக்கி கஷாயம் செய்து காலை, மாலை இருவேளை அருந்தி வந்தால் நல்ல செரிமான சக்தி கிடைக்கும். நன்கு பசியைத் தூண்டும்.

### பல் வலி நீங்க

பல் வலி, பல் ஈறுகளில் வீக்கம், பூச்சிப்பல், இவற்றால் ஏற்படும் பாதிப்புகளைப் போக்க கண்டங்கத்திரி வேரை நிழலில் உலர்த்தி அதனுடன் காயவைத்த புதினா இலைகளைச் சேர்த்து நன்கு பொடியாக்கி அதைக்கொண்டு தினமும் பல் துலக்கினால், அல்லது பல் துலக்கிய பின் இந்த பொடியை பற்களிலும் ,ஈறுகளிலும் நன்கு தேய்த்து வந்தால் பல்வலி, பல் ஈறு நோய்கள் நீங்கும். கண்டங்கத்திரி சமூகத்தைப் பொடித்து வைத்து அதை கஷாயமாக்கி அருந்தி வந்தால் கழுத்து வலி, தோள்பட்டை வலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை கால் மூட்டுகளில் உள்ள வலிகளைப் போக்கி , அதன் இறுக்கத் தன்மையைக் குறைக்கும்.


எங்கள் இரண்டாவது தேனிலவு



TRIBULL

"எங்களுக்குத் திருமணமாகி 10 ஆண்டுகள். வாழ்க்கையில் இன்று ஓர் புதுமலர்ச்சி தோன்றியுள்ளது. முன்னரைவிட அதிக உத்வேகம். எங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் இந்த இனிய மாற்றத்திற்கு வழிகோலியது ட்ரைபுல்..."

இயற்கை மூலிகைச் சாறுகள் அடங்கிய ட்ரைபுல், உங்கள் பாலுறவுச் செயற்பாட்டைஅதிகரிக்கும். உயர்ந்த தரநியமங்களுக்கேற்ப அவுஸ்திரேலியாவில் த்யாரிக்கப்படும் ட்ரைபுல் மாத்திரைகளை எந்த வயதான ஆண்-பெண் இருபாலாரும் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் பாவிக்க முடியும். நாள் ஒன்றிற்கு 2 மாத்திரைகள் எடுப்பதன் மூலம் உங்கள் தாம்பத்திய உறவை உற்சாகமாகவும் பூரணமாகவும் அனுபவிக்க ட்ரைபுல் உதவும்.

சகல ஃபாமஸிகளிலும் கிடைக்கும்

Alaris touching aspirations

Alaris Pharmaceuticals (Pty) Ltd.
A Division of Zifam Pinnacle Pty Ltd., Sydney, Australia.
மின்னஞ்சல்: tribull.alaris@gmail.com
For further details contact 077 8105 810 / 4 931 732

உடனடி அழைப்பு 077 3943113 / 077 [illegible]



# அதிகம் சேமித்து அதிகம் வெல்லுங்கள்




சீட்டிழுப்பிற்குத் தகுதி பெற, ஒரு மாதத்திற்காவது உங்கள் "அல்ட்ரா சேவர்" கணக்கில் ரூ.10,000ஐ அல்லது நடைமுறைக் கணக்கில் ரூ.5,000ஐ மீதியாக வைத்திருங்கள். அதிகமாகவும் நீண்ட காலத்திற்கும் சேமித்தால், வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாகும்.

ULTRASAVER
சேமிப்புகளுக்கு ஆகக்கூடிய வட்டி வீதம்

யூனியன் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்களின் நிறமும் குணமும்



இயற்கை நமக்களித்த கொடைகளுள் பழங்களும் ஒன்று. பழங்களை சமைக்காத உணவு என்பார்கள் நம் முன்னோர். உடலுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும், புத்துணர்வையும் ஒன்று சேரத் தரவல்லது பழங்களே. பழங்களை விரும்பாதவர் எவரும் இருக்க முடியாது. தினமும் ஏதாவது ஒரு பழத்தை உண்டு வந்தால் நீண்ட ஆரோக்கியம் பெறலாம். நோயுற்றவர்கள் உடல் நலம் தேற மருத்துவர்கள் பழங்களையே பரிந்துரை செய்வார்கள்.

நம்மில் சிலர் பழங்களில் சாறு எடுத்து அருந்துவார்கள். சிலர் சாறு எடுக்கப்பட்டு போத்தல்களில் இரசாயனம் சேர்த்து பதப்படுத்தப்பட்டிருக்கும் பழச்சாறுகளை விரும்பி அருந்துவார்கள். பழங்களைச் சாறு எடுத்து அருந்துவதை விட அப்படியே சாப்பிடுவதுதான் நல்லது. அல்லது சாறு எடுத்த உடனேயே அருந்துவது நல்லது. அப்போதுதான் அதிலுள்ள நார்ச்சத்துக்கள் அழியாமல் உடலுக்குக் கிடைக்கும். இந்த நார்ச்சத்துக்கள் மலச்சிக்கலைத் தீர்க்கும். ஜீரண சக்தியை அதிகரிக்கும். மேலும் சில விற்றமின் சத்துக்கள், தாதுக்கள் உடலுக்கு நிறைய கிடைக்கும். பழங்களில் பல நிறங்கள் உள்ளன. அனைத்துப் பழங்களும் சத்துக்கள் நிறைந்தவை. இப்பழங்களின் நிறத்துக்குத் தகுந்தவாறு அதன் சத்துக்கள் இருக்கின்றன.

### சிவப்பு நிறப் பழங்கள்

கண்ணைக் கவரும் பழங்கள்தான் இவை. இப்பழங்கள் உடலுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கவல்லவை. அப்பிள், முந்திரியவத்தல், செவ்வாழை, மாதுளம்பழம், இலந்தை, செரிப்பழம் போன்றவை சிவப்பு நிறப் பழங்களில் அடங்கும்.

★ விற்றமின் ஏ சத்து அதிகம் நிறைந்தபழங்கள். இவை இரத்தத்தை விருத்தி செய்யும், இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களை அதிகரிக்கும் தன்மை கொண்டவை.

★ இரத்தத்தில் கலந்துள்ள கொழுப்புப் பொருள்களை கரைக்கும் குணமுடையது. சிறுநீரகக் கோளாறுகளை நீக்கும். தசைகளின் இறுக்கத்தைக் குறைத்து மென்மையடையச் செய்யும். நரம்புகளுக்கு ஊக்கத்தைக் கொடுத்து மூளை நரம்புகளுக்கு அதிக பலம் கொடுக்கும்.

★ மன அழுத்தத்தைப் போக்கும் பதட்டம் குறைக்கும். நினைவாற்றலைத் தூண்டும்.

★ கண்பார்வையைத் தெளிவுறச் செய்யும் சக்தி, உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. எலும்பைப் பலப்படுத்துகிறது. இதயத்திற்கு சிறந்த மருந்தாக இந்த சிவப்பு நிறப்பழங்கள் விளங்குகின்றன.

### மஞ்சள் நிறப் பழங்கள்

எலுமிச்சை, பப்பாளி, வாழைப்பழம், அன்னாசிப் பழம் போன்றவை மஞ்சள் நிறப் பழங்களில் அடங்கும்.

★ மஞ்சள் நிறப்பழங்களில் கல்சியம், விற்றமின் சி, விற்றமின் ஏ, போலிக் அமிலம் போன்றவை நிறைந்துள்ளன. இதனால் எலும்புகள் பலப்படும். சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும் இரத்தம் சுத்தமடையும்.

★ பொதுவாக மஞ்சள் நிறப் பழங்களை எல்லோரும் சாப்பிடலாம். இது நரம்புத் தளர்வைப் போக்கும். மயக்கமுள்ளவர்களுக்கு உடனே உணர்வை உண்டாக்கும். மன அழுத்தத்தைப் போக்கும். ஜீரண சக்தியைக் கூட்டும். குடல் புண்களை ஆற்றும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும். கண் பார்வையைத் தெளிவுபடுத்தும்.

வாழைப்பழம் - பொதுவாக கை கால் நடுக்கம், போன்றவற்றைத் தடுக்கும் தன்மை கொண்டது. குடல்புண், வாய்நாற்றத்தை நீக்கும். சமிபாட்டைக் குறைக்கும். கண் பார்வையைத் தெளிவாக்கும். ஞாபக சக்தியை அதிகரிக்கும். முகப்பொலிவு கொடுக்கும். பெண்களுக்கு கழுத்துப்பகுதி, முகம், கை கால் முட்டிகளில் ஏற்படும் கரும்படலத்தைப் போக்கும். இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தும். மலச்சிக்கலைத் தவிர்க்கும். உடலுக்கு குளிர்ச்சி கொடுக்கும், சிறுநீரகத்தைச் சுத்தப்படுத்தும். பொதுவாக இது ஒரு கிருமி நாசினி எனக் கூறலாம்.

### பச்சை நிறப் பழங்கள்

பச்சைத் திராட்சை, பச்சை அப்பிள், சீத்தாப்பழம், கொய்யா, பலாப்பழம், பேரிக்காய் போன்றவை அடங்கும் . இப்பழங்கள் காய்கறிகளை ஒத்து இருப்பதால் அவற்றில் உள்ள சத்துக்கள் போல் இவ்வகைப் பழங்களிலும் உள்ளன. உடலின் வளர்ச்சி மாற்றங்களில் இத்தகைய பச்சை நிறப் பழங்கள் மிகுந்த பங்களிக்கின்றன. மலேரியா, தைபோயிட் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பச்சை நிறப் பழங்களை அதிகம் உட்கொண்டால் அதிகமாக இளைத்த உடல் எளிதில் தேறும்.


எம் தலைமுறை
TAFE



நம் நாட்டு வழக்கங்கள் காலா காலமாக தலைமுறை தலைமுறைகளுக்கு சொந்தமாகி, எம் வாழ்க்கையில் கலந்துள்ளது. நம் நாட்டிலே நம் வாழ்க்கையான விவசாயத் துரை நவீன தொழிநுட்பத்துடன் முன்னோக்கி செல்வதற்கு பிரவுன்ஸ் நிறுவனம் 1950களில் தொட்டு காட்டிய பங்களிப்பு அன்று போல் இன்றும் ஒரே மாதிரியுள்ளது.

எம் தலைமுறையில் வழிகாட்டி ஒன்றான டபே ட்ரெக்டர் திரும்பவும் இலங்கையரான எம்முடன் கைகோர்த்து நிற்கும் என்பதில் சந்தேகமே இல்லை. நம்முடன் வாருங்கள் வெற்றியின் ஆரம்பத்திற்கு.......

TECHNOLOGY — உலகில் பிரபலமான மசி பர்கியுசன் தொழிநுட்பம்.
SERVICE — விற்பனையின் பின் சேவை
TRUST — எந்நாளும் நம்பிக்கையான பிரவுன்ஸ் உத்தரவாதம்

கிழக்கு மாகாணம் - உத்திப : 077 345 7987
தெற்கு / ஊவா - சந்துன் : 077 345 7982
வட./வட.மத்திய மாகாணம் - நிஷ்ஷங்க : 077 345 7986
வட. மேல் மாகாணம் - இந்திக்க : 077 345 7988

Browns Agriculture
Browns

Brown & Company PLC. Company Reg. No. PQ26

பிரவுன் என்ட் கம்பனி பீஎல்சி. 481, டீ. பீ. ஜயா மாவத்தை கொழும்பு 10.



உங்கள் வாகனம் காற்றுப்போய் கஷ்டப்பட்டீர்களா?
இனிமேலும் வேண்டாம் கவலை




ரயறின் புதிய உயர்வான தோழன் ப்ளட் ப்ரி இது ஒரு அமெரிக்காவின் உத்தரவாதத்தைக் கொண்ட உற்பத்தியாகும்.

1) இது ஆணி முள்ளு மற்றும் வேறுவிதமாகவோ ஏற்படம் 1/4அங்குல துளைகளையும் உடனடியாகவும் நிரந்தரமாகவும் மூடக்கூடியது.

2) காற்றுப்போதலால் ஏற்படும் சிரமத்திற்கு ஒட்டவேண்டிய தேவைகள் ஏற்படாது.

3) தூர இடப்பயணங்கள் மற்றும் இரவு நேர பயணஙகளின்போது காற்றுப் போதலால் ஏற்படும் பிரச்சினைகளை முற்றாக இல்லாமல் செய்கிறது.

தொடர்பு:0773266640



LOTUS
BRAND
Plastic Bucket
Hotline:
038 2232962
077 7736518

எந்தவொரு வாளியையும்
வெற்றிகொள்ளும் சக்தி



குறைந்த விலையில் நீடித்த பாவனை, இரும்பு போன்று தகராது துருப்பிடிக்காது, பாவனைக்கு இலகுவானது
லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் உறுதியான வாளிகள்

லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் பின்வரும் வேலைகளுக்கு மட்டுமன்றி ஏனைய சகலவித தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும் என்பதே அதன் விசேட தன்மையாகும்.

• கட்டட வேலைக்காக • விவசாயத் தேவைகளுக்காக • தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு

விற்பனை மற்றும் விநியோகத்தர்கள்
Keselwatta Agencies (Pvt) Ltd.
224, Diggala Road, Keselwatta, Panadura, Sri Lanka.
E-mail: sales@keselwattagroup.com / www.keselwattagroup.com
KAL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களில் பங்குபற்றுதல் உங்கள் எதிர்காலத்தை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம்.**

**இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

## "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள். 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.



## தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காணப்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

## குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்துடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth& stability
1950 - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


10
நாளைய தலைவர்களுக்கு
செலிங்கோ லை.:.ப்
பிரணாம
புலமைப்பரிசில்
பெருமை மிகுந்த
தசாப்தம்
2001ம் ஆண்டு தொடக்கம், கல்வி, விளையாட்டு, கலை போன்றவற்றில் சாதனைகளைப் படைத்த 1,150ற்கும் மேற்பட்ட நாளைய தலைவர்களை கௌரவித்து, அவர்களுடைய பயணப் பாதையில் ஒரு நிழலாய், உறுதுணையாய் இருந்த செலிங்கோ லை.:.ப் பிரணாம புலமைப்பரிசில், இவ்வருடம் தனது 10வது ஆண்டு நிறைவைப் பெருமையாகக் கொண்டாடுகிறது.
2011 செலிங்கோ லை.:.ப் பிரணாம புலமைப்பரிசில்
கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படுகின்றது :-
• ஆண்டு 5 - 2010 - ஒவ்வொன்றும் ரூ. 90,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
• க.பொ.த. (சா/த) - 2009 - ஒவ்வொன்றும் ரூ. 72,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
• க.பொ.த. (உ/த) - 2009 - ஒவ்வொன்றும் ரூ. 126,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
ஒவ்வொன்றும் ரூ. 10,000/- பெறுமதியுடைய 75 புலமைப்பரிசில்கள்
• தேசிய திறமை விருதுகள் 2009/2010 - ஒவ்வொன்றும் ரூ. 35,000/- பெறுமதியுடைய 10 புலமைப்பரிசில்கள்
2011 பிரணாம புலமைப்பரிசிலுக்கான
விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும்.
இறுதித் திகதி 2010 நவம்பர் 30
அழையுங்கள் 011 2 461 461
டாக்டர் சஞ்சா பெரேரா 2002ம் ஆண்டு பிரணாம புலமைப்பரிசில் பெற்றவர்
விளையாட்டு வீரர் ஷெஹான் அம்பேபிட்டிய 2008ம் ஆண்டு பிரணாம புலமைப்பரிசில் பெற்றவர்
ஹிமாஷ மனுப்பிரிய 2009ம் ஆண்டு பிரணாம புலமைப்பரிசில் பெற்ற சிறுவன்
சட்டத்தரணி சமரி தென்னகோன் 2001ம் ஆண்டு பிரணாம புலமைப்பரிசில் பெற்றவர்
செலிங்கோ லை.:.ப்
செலிங்கோ லை.:.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PQ24 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com


முதற்தர விற்பனையின் பின்னரான சேவையுடன்
நம்பிக்கையுடன் கொள்வனவு செய்யுங்கள்..
E-tel
1
V358
MSN Chat
Shortcuts on keypad
Bluetooth / USB
Black List/ Mobile tracker
FM ரேடியோ
MP4 / 3GP Player
டிஜிடல் கெமரா
மெமரி காட் பாவனை++
ரூ8,990/-
Hitz
Facebook
Skype
Yahoo Messenger
MSN
டுவல் மெமரி காட்++
ரூ6,990/-
TV
எனலொக் TV
டிஜிடல் கெமரா
FM ரேடியோ / டோச்
Bluetooth / USB
Black List
MP4 / 3GP Player
மெமரி காட் பாவனை++
ரூ7,990/-
Vision
அனலொக் TV
FM ரேடியோ
கேமரா
ப்ளூடூத் /3GP /MP4
வீடியோ ரெகோடர்
GPRS /MMS
மெமரி காட் பாவனை ++
ரூ6,490/-
Brantel Lanka நிறுவனத்தின் யாழ் பிரதேச ஏக விநியோகஸ்தர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள்
brantel
ராம் சுப்பர் சிட்டி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1262
நாடு முழுவதும் விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்